பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 18 சனிக்கிழமை (04-09-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:14

# தீர்வு குறித்து ஆராய அயர்லாந்தில் மாநாடு!

## அரசும் புலிகள் தரப்பும் பங்குபற்றுகின்றன

கொழும்பு, செப்.4

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் மற்றும் அணுகுமுறைகள், எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்காக பிரிட்டன், அயர்லாந்தில் மாநாடு ஒன்று ஏற்பாடாகியுள்ளது.**

**அனேகமாக அடுத்த மாதமளவில் நடைபெறும் இந்த மாநாட்டில் ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றவிருப்பதாகத் தெரிகின்றது.**

அயர்லாந்தில் உள்ள பல்கலைக் கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் பங்குபற்றுமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்றுள்ளதாகத் தெரியவந்தது.

ஸ்ரீலங்கா அரசுச் சார்பான குழுவில் நால்வர் இடம்பெறவிருக்கின்றனர். வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த சிங்கள வர்த்தகர் ஒருவரும், தமிழ் வர்த்தகர் ஒருவரும், இராணுவத்தில் உயர் பதவியில் உள்ள ஒருவரும், ஜனாதிபதியுடன் நெருக்கமான - தற்சமயம் அமெரிக்காவில் வசிப்பவரான - தமிழர் ஒருவரும் இந்தக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

இந்த மாநாட்டில் பங்குபற்ற இவர்களின் பெயர்களை இலங்கை அரசு சிபார்சு செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் குழுவில் அங்கம் வகிப்போர் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை.

மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கைக் குழு லண்டன் சென்றிருக்கும் போது அங்கு மாநாட்டுக்குப் புறம்பாக தனிப்பட்ட முறையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)



## ஹமீத் காலமானார்

கொழும்பு,செப்.4

முன்னாள் அமைச்சரும், கண்டி மாவட்டத்தின் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஸி. எஸ். ஹமீத் நேற்றிரவு 10.40 மணிக்கு வெள்ளவத்தை டெல்மன் ஆஸ்பத்திரியில் காலமானார். அவருக்கு வயது 72.

கடந்த சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

1960ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து எட்டுப் பொதுத்தேர்தல்களிலும் வெற்றியீட்டி, சாகும்வரை

(8ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசியல் மாற்றங்களை இலங்கை உன்னிப்பாக கவனிக்கிறது

கொழும்பு,செப்.4

இந்தியத் தேர்தல் மூலம் உருவாகும் புதிய அரசியல் மாற்றங்கள், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களை உன்னிப்பாக அவதானிக்கவேண்டும் என்று அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

இது விடயமாக வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த ஆலோசனை ஏற்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கதிர்காமர் இதுவிடயமாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அத்துடன் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான விவரங்களை வெளியிடவும் -

சர்வதேச அமைப்புக்களுக்கு தரவுகளை வழங்கவும் -

சர்வதேச மட்டத்திலான பிரசாரங்களை கண்காணிக்கவும் -

வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் தனிஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அமைப்பது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. (உ-3)

## படை நடவடிக்கை பூர்த்தியாம்

மட்டக்களப்பு, செப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பகுதியில் இருந்து கதிரவெளிப் பகுதியை நோக்கி கடந்த புதன்கிழமை ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை நேற்று பூர்த்தியாகிவிட்டதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

விமான மற்றும் கடற்படை உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் ஆறு முகாம்கள் அழிக்கப்பட்டதாகவும் இராணுவத் தரப்பு மேலும் தெரிவித்தது. (உ-3-21)

## கான்ஸ்டபிள் மூழ்கி மரணம்

மட்டக்களப்பு,செப்.4

மட்டக்களப்பு ஓட்டமாவடி வாவியில் நேற்றுமுன்தினம் குளிக்கச் சென்ற பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

நந்தன சில்வா (வயது27) என்ற கான்ஸ்டபிளே மரணமானவர் ஆவார். (உ-21)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இரங்கல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

புளொட் அமைப்பின் இராணுவப் பிரிவுத் தளபதியும், உபதலைவருமான என்.மாணிக்கதாஸன் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தமைக்கு அனுதாபம் தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இரங்கற் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தக் குண்டுத்தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தியுள்ளனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது எனவும் -

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் பிரச்சினையுடன் தொடர்புபட்டிருந்த மாணிக்கதாஸன் அரசாங்கத்துக்கு எதிராகப் பல்வேறு தாக்குதல்களில் முன்னின்று செயற்பட்டவர் என்றும் -

அந்த இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,செப்.4

அளவெட்டிப் பகுதியில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்கு நேற்று முன்தினம் விறகு வெட்டச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது காலை முழங்காலுடன் இழந்தார்.

சின்னத்துரை இரத்தினசிங்கம் (வயது 38) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3-15)

# தாஸனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு!

வவுனியா,செப்.4

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட புளொட் அமைப்பின் இராணுவத் தளபதியும், உபதலைவருமான என். மாணிக்கதாஸனின் பூதவுடல் கோவில் குளத்தில் உள்ள அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற மரணவிசாரணைகளை அடுத்து நேற்றுக்காலை ஊர்வலமாக பூதவுடல் அங்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் நேற்று வவுனியா வந்து அஞ்சலி செலுத்தினார்.

இந்தியாவில் தங்கியுள்ள மாணிக்கதாஸனின் மனைவி, பிள்ளைகள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் -

அவர்கள் வந்த பின்பே இறுதிக் கிரியைகள் தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் -

புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம் -

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர் வினோவின் பூதவுடல் இன்று தகனம் செய்யப்படவிருப்பதாகவும் -

இதே சம்பவத்தில் உயிரிழந்த புளொட்டின் வவுனியா மாவட்ட இரா

(8ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழ் இளைஞர்கள் லண்டனில் கோஷ்டி மோதல்!

லண்டனில் உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றில் கடந்த திங்கள் அன்று ஈழத் தமிழ் இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் தொடர்பாக ஆறு ஈழத்தமிழ் இளைஞர்கள் லண்டன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லண்டனில் உள்ள தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்திவருவது தெரிந்ததே.

இந்த வகையில் கடந்த திங்கள் அன்று மேற்கு லண்டனில் உள்ள மைதானம் ஒன்றில் ஆட்டம் ஆரம்பித்து சில நிமிட நேரம் சென்றதும் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் மோதல் உருவாகியது. மோதலில் ஈடுபட்டவர்கள் கத்தி மற்றும் கூராயுதங்களைப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகிறது.

சுமார் 80 பொலீஸார் விளையாட்டு மைதானத்துக்குள் விரைந்து மோதலை நிறுத்தினர் எனவும் -

இந்தச் சம்பவம் தொடர்பாகவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு பேர் மேற்கு லண்டனிலுள்ள ஈலிங் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர் எனவும் - கூறப்படுகின்றது. (உ-7)

# மீன்பிடிப் படகுகளில் பாய் பயன்படுத்த அனுமதி

## இன்றுடன் தடை நீக்கப்படுகிறது

குருநகர்,செப்.4

யாழ் குடாக்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் தமது படகுகளில் பாய் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை இன்று முதல் நீக்கப்படுவதாக யாழ். படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கும் மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முற்பகல் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தடைநீக்கம் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

குடாக்கடலில் தொழில்புரியும் மீனவர்கள் கல்முனை, பூவரசந்தீவுக் கரையை நெருங்கக்கூடாது என்றும்-

அரியாலை முனைவரை சென்று மீன்பிடிக்கலாம் என்றும் -

மண்டைதீவுக் கரையில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் மீன்பிடிக்கலாம் என்றும் -

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மீனவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிறங்களையுடைய பாய்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் -

படைத்தரப்பு மீனவர்களிடம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிபந்தனைகளை மீறும் மீனவர்களின் கடல் அனுமதிப் பத்திரம் படையினரால் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் படைத்தரப்பு தம்மிடம் தெரிவித்ததாக சந்திப்பில் கலந்துகொண்ட மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குடாக்கடலில் கடந்த மே மாதம் தொடக்கம் படகுகளில் பாய் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு படையினர் தடைவிதித்திருந்தது தெரிந்ததே. (உ-7-51)

# வெள்ளை வானில் கடத்தப்பட்ட நபர் தாக்கப்பட்டு விடுவிப்பு

## கல்வியங்காட்டுப் பகுதியில் சம்பவம்

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கல்வியங்காடு சந்தைப் பகுதியில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

கோப்பாய் தெற்கு, டச்சு வீதியைச் சேர்ந்த இரத்தினம் நடராஜா (வயது 46) என்பவரே கடந்த புதனன்று காலை கடத்தப்பட்டார். கல்வியங்காடு சந்தைப்பகுதியில் வெள்ளைவானுடன் நின்றிருந்த சிலர் அவரை அழைத்து அறிமுகமானவர்கள் போல் சிநேகபூர்வமாக உரையாடியதாகவும் பின்னர் வானுக்குள் அழைத்துத் திடீரென பிஸ்டலைக் காட்டி உள்ளே படுக்க வைத்துக் கடத்திச் சென்றதாகவும்-

கண்களைக் கட்டி எங்கோ கொண்டு சென்று ஓரிடத்தில் வைத்து தாக்கியதாகவும் -

பின்னர் அன்றிரவு கண்கள் கட்டப்பட்ட நிலையில் நவாலிப் பகுதியில் தான் இறக்கிவிடப்பட்டதாகவும் -

தெரிவித்தார்.

தாக்கப்பட்டதில் காயமடைந்த இவர் யாழ்.மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

# பல்கலையில் தொடர்ந்து கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.4

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ தெய்வ ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால்பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் கூட்டுப்பிரார்த்தனை நான்காவது வாரமாக நேற்றும் இடம்பெற்றது.

பிற்பகல் 5 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை நடத்தப்பட்ட இந்தப் பிரார்த்தனையில் பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா, அருட்தந்தை ஜெயசீலன் மற்றும் பல மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நேற்றைய பிரார்த்தனையை கலைப்பீட மாணவர்கள் ஒழுங்கு செய்து நடத்தியதுடன், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாணவர் ஒன்றியத்தினால் திரட்டப்படும் துயர் துடைப்பு நிதிக்கும் தங்கள் பங்களிப்பை அவர்கள் அங்கு செலுத்தினார்கள்.

அடுத்த கூட்டுப் பிரார்த்தனை எதிர் வரும் வெள்ளிக்கிழமை விஞ்ஞான பீட மாணவர்களால் நடத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண தினத்தை ஆண்கள் கொண்டாட விரும்பாததேன்?

**கொக்குவில். வி.ராஜா.**
உலகம் யாரை மதிக்கும்?
☺**Money உள்ள Moneyதர்களைத் தானே மதிக்கின்றது?**

❀ ❀ ❀

**நீராவியடி. சுரேஷ்.**
'ஆற்றில் ஒரு கால்: சேற்றில் ஒரு கால்!' என்கின்றார்களே! அது என்ன?
☺**'காலையில் வீட்டில்; மாலையில் சின்ன வீட்டில்!' - என்பது கூட இதைத் தான். பலர் சேற்றில் மிதித்த காலைக் கழுவி விட்டு பரிசுத்தவான்களாகத் திரி கின்றார்களே!**

❀ ❀ ❀

**காரைக்கால். வடிவு.**
திருமணத்தின் போது 'ஏற்றுக் கொண்டீரா?' என ஐயர் கேட்க 'ஆம்' என்று பலமாகப் பதிலளிக்கும் மணமகன், பின்னர் இடையில் மனைவியைக் கைவிட்டு விடுகின்றானே! ஏன்?
☺**ஐயரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது மணமகன் தன் மனதில் நினைத்து 'ஆம்' என்று ஏற்றுக் கொண்டது சீத னத்தை அல்லவா?**

❀ ❀ ❀

**கட்டார். சஞ்சீவ்.**
முற்றும் துறந்த துறவி ஒருவர் 'வயக்கரா' பாவித்ததாக வெளிநாட்டுப் பத்திரிகையில் செய்தி வந்ததே?
☺**முற்றும் துறப்பதற்கு 'வயக்கரா' உத வியிருக்கும் போலை!**

❀ ❀ ❀

**நெல்லியடி. சுபாஷ்.**
கள் குறித்து உங்கள் கருத்து...!
☺**பிழைக்கத் தெரிந்தவர்கள்!**

❀ ❀ ❀

**தம்பசெட்டி. ஏ.குமார்.**
எனது அண்ணா, தன் வீட்டில் மனைவியி டம் சுளகால் அடி வேண்டுபவர். அப்படிப்பட்ட அவர் என்னைத் திருத்த முற்படுகின்றாரே!



☺**ஏன் நீர் விளக்குமாற்றால் அடிவாங் கிக் கொண்டிருக்கின்றீரா?**

❀ ❀ ❀

**பருத்தித்துறை. எஸ்.ராஜ்.**
நான் நான்கு முறை ஓ.எல். பரீட்சை எடுத் தும் சித்தி பெறமுடியவில்லையே! சித்தி பெற என்ன வழி?
☺**நீர் பரீட்சை எடுப்பதற்கும், சித்தி 'பெறுவதற்கும்' என்னய்யா சம்பந்தம்?**

❀ ❀ ❀

**உயர்ந்து தாழ்ந்து, சிறுத்துப்பெருத்து, வளைந்து நெளிந்து, திரண்டு உருண்டு... இப்படி பலதும் சேர்ந்துதானே அழகு பிறக் கின்றது?**

❀ ❀ ❀

**மானிப்பாய். தீபன்.**
காதல் கல்யாணம் கடைசியில் கசப்பதேன்?
☺**ஏன் பேச்சுக் கல்யாணம் மட்டும் கடைசியில் இனிக்கின்றதோ?**

❀ ❀ ❀

**யாழ். நி.குமார்.**
நான் விரும்பி நாடும் குச்சொழுங்கை யையே எனது ஆசிரியரும் நாடுகின்றார். அத னால் இடைஞ்சலாக இருக்கின்றதே?
☺**எதற்கு இடைஞ்சலாக இருக்கின் றது? இயற்கை உபாதைகளைக் கழிக்க ஏற்ற இடம் எதுவென்று யாழ்ப்பாணத்தா ருக்குச் சொல்லியா தரவேண்டும்? அதற்கு ஆசிரியரும் விலக்கல்லவே. ஆளாளுக்குத் தெரியாத மாதிரி மூக்கைப் பிடித்துக் கொண்டு முடித்து விட்டுப் போங்களேன்!**

❀ ❀ ❀

**உரும்பிராய். த.தாமரை.**
நீங்கள் காதல் விவகாரத்தில் அனுபவப் பட்டீர்களா?
☺**பட்டேன்! பட்டேன்!! அவஸ்தைப் பட்டேன்!!!**

❀ ❀ ❀

**யாழ். யாரோ.**
சில ஆசிரியர்கள் 'சிலபஸ்' தெரியாமல் மாணவிகளுக்கு வேறு ஏதோ எல்லாவற்றையும் படிப்பித்துத் தொலைக்கின்றார்களே?
☺**வீட்டிலிருக்கும் 'பஸ்'ஸை விட்டுவிட்டு 'பல பஸ்' தேடும் வாத்திமாருக்கு எங்கே 'சிலபஸ்' தெரியப் போகின்றது? வேறு 'எல் லாவற்றையும்' சொல்லிக் கொடுத்து மாணவ சமுதாயத்தைத் தொலைக்கப் போகின்றார்கள்!**

❀ ❀ ❀

**அராலி. எஸ்.நேசன்.**
கிழவர்களையும் குமரர் வேலை செய்யத் தூண்டுகின்றதாமே உமது பதில்கள்....?
☺**எண்பதிலும் ஆசை வரும்; ஆனால் என்பதிலால் ஆசை வராது! ஆசை மீது வெறுப்பு வரும்!**

❀ ❀ ❀

**அராலிவடக்கு. எஸ்.ஹே.**
பெண்களின் காதலைச் சம்பாதிப்பது 'முயல் கொம்பு' போன்று கஷ்டமானது என் றால், ஆண்களின் காதல் எப்படிப்பட்டது?
☺**பெரும்பாலும் நீர்க்குமிழி போல நின்று, நிலைத்து, நீடிக்காது.**

❀ ❀ ❀


**கொட்டடி. அருள்.**
வீதியில் பெண்களைக் கண்டால் ஏன் ஆண்களின் நாக்கு நீளுகின்றது?
☺**நாக்கு மட்டுமா நீளுகின்றது?**

❀ ❀ ❀

**ஓட்டுமடம். ரீ.பஞ்சு.**

❀ ❀ ❀

**அம்பன். பாலசுந்தரம்.**
தமிழ் மாநில காங்கிரஸ் தனித்துப் போட் டியிடுவதால் தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் சிதறடிக்கப்படுமா?



☺**த.மா.கா.பக்கம் வாக்குகளே இருக் கின்றனவா என்பது இத்தேர்தலில்தான் அம்பலமாகும்!**

❀ ❀ ❀

**ஊரெழு. எஸ்.பிரபு.**
காதலியை இடைநடுவில் கைவிடும் காதலர்களை என்ன செய்யலாம்?
**'மாமியார் வீட்டுக்கு' அனுப்பி விடலாம்.**

❀ ❀ ❀

**மட்டுவில். சி.கோவர்த்தனன்.**
வித்துவான் ஸார்! நீங்கள் பெண்களை சிறப்பாக 'ரன் - அவுட்' செய்வீர்களாமே. உண் மையா?



☺**அதுதான் வீட்டில் தினசரி 'கிளீன் - போல்ட்' ஆகி நிற்கின்றேனே! பிறகென்ன?**

# உயர்ச்சி - தாழ்ச்சி இதில் அழகு எது?

ஆசிரியர்கள் தடம் புரள்கிறார்களே?
☺**ஓரிரு ரயில்கள் தடம் புரண்டதற்காக ரயில்வே திணைக்களத்தையே குறைத்து மதிப்பிடுவதா?**

❀ ❀ ❀

**கோண்டாவில். சுதர்சன்.**
என் மனைவி கோபம் வரும் சமயம் 'கோவேறு கழுதை' என்று என்னைத் திட்டுகின் றாளே?
☺**உம்மைக் கோ (அரசன்) ஆகவும் தன்னைக் கழுதையாகவும் நினைத்து 'கோ ஏறு கழுதை' என்று அழைக்கின் றாளோ?**

❀ ❀ ❀

**வடமராட்சி. சதீஸ்.**
அதிகமாக சிரிக்கும் பெண்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?




☺**"அதிகமாக சிரிக்கின்ற பெண்ணும் அதிகமாக அழுகின்ற ஆணும் என்றைக் குமே நன்றாக வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை!" (ஹி......ஹி..... இது 'வித்து வப்பா'வின் வசனமாக்கும்.)**

❀ ❀ ❀

**வடமராட்சி. முரளி.**
இக்காலப் பெண்கள் சைக்கிள் 'ஸ்ராண்டை' மடக்குவதற்கு, பால் கறக்க முற்படுபவரை மாடு காலால் அடிப்பது போல அடிக்கின்றார் களே? ஏன்?
☺**எனக்கென்னவோ அது வீட்டில் வேலை செய்ய மறுக்கும் கணவனை உதைப்பது போல்தான் 'ஸ்ராண்டை' அடிக்கின்றார்கள் எனப்படுகின்றது.**

❀ ❀ ❀

**நவாலி. பிரதீப்.**
மனைவியின் சேலையை சலவை செய்யும் கணவன்மார் குறித்து....?
☺**கலவை என்ற லீலைக்காக சோப்புப் போடும் வேலை அது!**

❀ ❀ ❀

**நெடுந்தீவு. சுகந்தினி.**
வித்துவானே! சமைக்கத் தெரியாத பெண்

❀ ❀ ❀

**தொல்புரம். கல்யாணி.**
வித்துவானே! புத்தாயிரம் ஆண்டிலாவது பெண்கள், பெற்றோர் ஆணைக்கு அடங்குவார் களா?
☺ **ஆனையையே அடக்குபவர்களா யிற்றே! பெற்றோரின் ஆணைக்கா அடங்கு வார்கள்?**

❀ ❀ ❀

**நவாலி. தீபன்.**
கல்யாணப் பொருத்தம் பார்ப்பது குறித்து உமது கருத்து என்னவோ?
☺**மனப் பொருத்தம் பாராமல் பணப் பொருத்தம் இருந்தும் பயனில்லை.**

❀ ❀ ❀

**சரசாலை. எஸ்.தங்கம்.**
கணவன் கண் முன்னே இருக்க கண்ட கண்ட இடங்களில் மேயும் கற்பு நாயகிகளைப் பற்றி உங்கள் கருத்து என்னவோ?
☺**கற்புநாயகிகள் அல்லர் அவர்கள். 'கப்'பெனப் பற்றும் கற்பூரநாயகிகள்!**

❀ ❀ ❀

**வளலாய். ரவிசுந்தரம்.**
சீதனமாகக் காரைப் பெற்றுக் கொண்ட ஒருவர் வெளியில் செல்லும்போது காரில் தனித்தே செல்கின்றாரே?
☺**கார் மட்டும்தான் வெளியில் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கின்றது போலும்.**

❀ ❀ ❀

**உடுவில். கோ.கோகுலன்.**
பொல்லைக் கொடுத்து அடி வாங்குவதற்கு உதாரணம் கூறுங்களேன்?
☺**பேனாவால் எழுதி, கிரனேட் வீச்சைப் பெற்றுக் கொண்டதும் கூட இந்த வகைக் குள் அடங்கும்தானே!**

❀ ❀ ❀

**மானிப்பாய். யோ.மதன்.**
பூங்கொடிப் பெண்ணுக்கு பூசணிக்காய் கணவன் அமைந்தால் எப்படி?
☺**பூசணிக் கொடி, பூசணிக்காயைத் தாங்கவில்லையா?**

❀ ❀ ❀

**யாழ். சிவசுந்தர்.**
வித்துவானே! தற்போது இளைஞர்களில் பலர் 'கராட்டி' பழகுவதில் மும்முரமாக இருக்கின்றார்களே? ஏன்?
☺ **இல்லற வாழ்வுக்கு இப்போதே தயாராகுகின்றார்கள் போலும்!**

❀ ❀ ❀

**தொல்புரம். கண்ணன்.**
உழுதவன் அறியான் மண்ணை: நகை வடிப்பவன் அறியான் பொன்னை: நானறியேன் பெண்ணை. நீராவது அறவீரா ஐயா!
☺**அறிந்தேன் கொஞ்சம் பெண்ணை: அதனால் இழந்தேன் என்னை!**

❀ ❀ ❀


**கம்பர்மலை. அருணா.**
உயர்ச்சி தாழ்ச்சி எது அழகு?

# வித்துவான் பதில்கள்

திருமண தினத்தைக் கொண்டாடுவதில் ஆண்கள் அதிகம் சிரத்தை காட்டுவதில்லையே ஏன்?
☺**சுதந்திர தினத்தைக் கொண்டாடு வார்கள். சுதந்திரம் பறிபோன தினத்தை யாராவது கொண்டாடுவார்களா?**

❀ ❀ ❀

**நல்லூர். ஈசன்.**
நான் கல்வி பயிலும் நிலையத்தில் ஒரு பெண் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றாள். நான் அவளைக் காதலிக்கலாமா?




☺**சரியாகக் கவனித்தீர்களா - அவள் சிரித்தாளா என்று? அவளது பல் வரிசை இயற்கையாகவே சிரிப்பது போன்று இருந்து தொலைக்கப்போகின்றது.**

## இவ்வார ஜோக்!

அவர் ஒரு பரம்பரைப் பணக்காரர். பணம் ஏராளமாக இருந்தது. ஆனால் புத்தி மட்டும் கிடையாது. அத்தோடு அப்பாவியும் கூட.

அவருக்கு ஒரு பிரச்சினை. ஆண்டு தவறாமல் அவர் மனைவி குழந்தை பெற்றுக் கொண்டேயிருந்தாள். அது தாங்கமுடியவில்லை.

அதை நிறுத்த அவர் எடுத்த முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை. இதனால் உள்ளூர் டாக்டர்கள் மீது தாம் வைத்த நம்பிக்கையை இழந்து, அமெரிக்க டாக்டர்களிடம் சென்றார். அவர்கள் ஆற, அமர இருந்து விடயத்தைக் கேட்டார்கள். அவரது முயற்சிகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்தார்கள். இறு தியாக அமெரிக்க டாக்டர்கள் பதில் சொன்னார்கள்.

"இவ்வளவு முறைகளும் சரிபட்டு வராவிட்டால் ஒரேயொரு வழிதான் இருக்கின்றது. மனைவிக்குக் கிட்ட நெருங்காமல் இரும்! அதுதான் வழி!" - என்றார்கள் டாக்டர்கள்.

"ஐயோ! டாக்டர் கடந்த பலவருடங் களாக அதையும் நான் செய்து பார்த்து விட்டேனே!" - என்றார் அந்த அப்பாவிப் பணக்காரர் பரிதாபமாக!

# காதல் கல்யாணம் கசப்பது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்துக்கு வரும் குண்டுகள்....

கடந்த 25ஆம் திகதி (ஓகஸ்ட் 25) மத்திய தோட்டப் பகுதியான பதுளையில் பெருமளவு வெடிமருந்துகளைப் பொலீஸார் கைப்பற்றினர்.

மட்டக்களப்பில் இருந்து வந்த விசேட அதிரடிப்படை கொமாண்டோ அணி உள்ளூர் பொலீஸாரின் உதவியுடன் இரவு நேரம் மேற்கொண்ட திடீர்ச்சோதனையின்போது இந்த வெடிமருந்து கைப்பற்றப்பட்டது. பதுளை மாவட்டத்தில் மடுல்சீமா என்னும் இடத்தில் பதுவத்த தோட்ட பங்களாவில் உள்ள லயன் அறை ஒன்றில் இந்த வெடிமருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

'பி -9' வகையைச் சேர்ந்த சக்திமிக்கதான 69 கிலோ வெடிமருந்தே கழற்றப்பட்ட நிலையில் இருந்த வான் ஒன்றின் சக்கரத்தினுள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. வெடிமருந்து மறைக்கப்பட்ட அந்த சக்கரம் கிழக்குப்பகுதியில் இருந்து வான் ஒன்றில் ஏற்றிவரப்பட்டதாகவும் -

அந்த வானில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பெண் உறுப்பினரான சுலோச்சனாதேவி அல்லது தேவி அக்கா என்பவரும் பதுளைக்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட அந்த வான் சியம்பலாண்டுவ, மொனராகல, பாதல்கும்புர, பசறை ஆகிய இடங்களில் உள்ள சோதனை நிலையங்களைத் தாண்டிப் பயணம் செய்து மடுல்சீமா பகுதிக்கு வந்துள்ளது.

பதுவத்த தோட்டத்தில் பணிபுரியும் மூக்கன் கணேசன் என்பவருடன் தங்கியிருந்த சுலோச்சனாதேவி கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்களுடன் ஒரே லயனில் தங்கியிருந்த மூக்கன் கணேசனின் சகோதரரான மோகன் சுந்தரலிங்கமும் மற்றொரு நபரான பாலசுப்பிரமணியம் வடிவேல் என்பவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 69 கிலோ வெடிமருந்து பதுவத்த தோட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையை வெடிவைத்துத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட இருந்ததாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சுலோச்சனாதேவியும் ஏனைய மூவரும் மேல் விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவை பாதுகாப்புத் தரப்பினர் வெளியிட்டிருந்த தகவல்கள். இந்த விடயங்கள் உண்மையாக இருப்பின் மலைநாட்டின் பொருளாதார இலக்குகளையும் தாக்குவதற்குப் புலிகள் தீர்மானித்துவிட்டனர் என்பது தெளிவாகலாம் எனப் புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

மத்திய மலைநாட்டின் தோட்டப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் ஊடுருவல்கள் அதிகரித்திருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் கூறிவந்துள்ள பின்னணியில் இந்த வெடிமருந்து கைப்பற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

ஓகஸ்ட் மாதம் முழுவதும் மலையகப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின்னணி தொடர்பான விவரங்கள் தற்போது கைதுசெய்யப்பட்டவர்கள் மூலம் தெரியவரலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

* ஓகஸ்ட் 11 ஆம் திகதி ஹற்றன் டிகோயா வீதியில் மின்சார இணைப்புக்களை இலக்கு வைத்து அதி சக்திவாய்ந்த குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. இதனால் மூன்று மின் கோபுரங்கள் சேதமடைந்தன.

* ஓகஸ்ட் 12 ஆம் திகதி சக்திமிக்க இரு குண்டுகள் (Improvised Explosive Divice) பதுளை கந்தகெதர அதியுயர் மின் இணைப்புக் கோபுரத்தை இலக்கு வைத்து வெடிக்கவைக்கப்பட்டன. மூன்று இணைப்புக் கம்பிகள் சேதடைந்தன.

* ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஹற்றன் டன்பார் வீதியில் உள்ள தொலைபேசி பரிவர்த்தனை கபின் பெட்டிக்குள் பொருத்தப்பட்டிருந்த நேரக் கணிப்புக் குண்டை குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் மீட்டு வெடிக்க வைத்தனர். உரிய நேரத்தில் குண்டு கண்டுபிடிக்கப்படதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

* ஓகஸ்ட 14 ஆம்திகதி ஹற்றன் டன்பார் வீதிப் பகுதியில் தொலைபேசிப் பரிவர்த்தனை கபின் பெட்டிக்குள் வைக்கப்படடிருந்த மற்றொரு சக்திமிக்க 'டைம்பம்' செயலிழக்கச் செய்யப்பட்டது.

அடுத்தடுத்து நடந்த இந்த நான்கு சம்பவங்களும் தோட்டப் பகுதிகளில் புலிகள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன.

தோட்டப்பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளை குறிப்பாக மின் விநியோகத்தைச் சீர்குலைப்பதன் மூலம் தேயிலைத் தொழிற்சாலைகளை ஸ்தம்பிக்க வைத்து பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை உண்டு பண்ணுவது புலிகளின் இலக்கு என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்.



## வவுனியாவில் வெடித்த குண்டு!



என்.மாணிக்கதாஸன்

**மறுபக்கம்** — **வார விமர்சனம்** — நல்லூர் தாஸ்

*　　　*　　　*

திருமலை ரயில் நிலையத்துக்கு வெளியே அண்மையில் கைதுசெய்யப்பட்ட கிருஷ்ண பிள்ளை ராமேஸ்வரன் என்ற புலிகளின் புலானாய்வு உறுப்பினர் மூலம் கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பல தகவல்கள் கிடைத்துள்ளதாக புலனாய்வு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உப்புவெளி துவரங்காட்டைச் சேர்ந்த ராமேஸ்வரன், அன்புமாறன் என்ற பெயரில் அழைக்கப்பட்டுவந்தவர் என்றும் -

19 வயதான இவரிடம் விசாரணை நடத்திய போது அண்மையில் 150புலிகள் பல அணிகளாக முல்லைத்தீவில் இருந்து கிழக்கிற்குள் ஊடுருவி இருப்பதாகத் தகவல் வெளியிட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை பிற்பகுதியில் பேராறு காட்டுப் பகுதியில் உள்ள தளம் ஒன்றில் இருந்து புலிகளின் அணிகள் குச்சவெளிப்பகுதிக்கு வந்து சேர்ந்ததாகவும் -

அங்குவைத்து அவர்களுக்கு இராணுவ நிலைகளைத்தாக்குவது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்தாகவும் -

ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'முரசு' என்பவரின் தலைமையில் 15 புலிகள் அடங்கிய அணி புல்மோட்டை யான் - ஓயா பகுதியில் தங்கிச் செயற்படுவதாகவும் -

'அருள்மொழி' என்பவரின் தலைமையில் வேறு 15 பேர் 'பாஸ்கரன் முகாம்' என்ற தளத்தில் நிலாவெளியில் செயற்படுவதாகவும்- ராமேஸ்வரன் தகவல் வெளியிட்டிருக்கின்றாராம்.

கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருவதை அடுத்து புலனாய்வுத் துறையினரின் கவனம் அங்கு திரும்பியுள்ளது. பலர் [illegible] விசாரிக்கப்படுகின்றனர்.

நீண்டகால ஓய்வுக்குப் பின்னர் புலிகள் தொடராக ஆரம்பித்துள்ள தாக்குதல்கள் பாது

( XV ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை விமானப்படையைச் சேர்ந்த சுமார் 100 பெண்படையினருக்கு. விசேட கெரில்லா பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு போர்முனைப் பகுதிகளில் எத்தகைய சந்தர்ப்பங்களிலும் பணியாற்றக் கூடியதான கடுமையான பயிற்சி இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கெரில்லா பயிற்சி, கனரக ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்கான பயிற்சி, காடுகளில் யுத்தம் புரியும் பயிற்சி, தேடுதல் நடவடிக்கைகள், மற்றும் திடீர்வீதிச் தடைச் சோதனைகளில் ஈடுபடுவது போன்ற பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறன.

களத்தில் ஆண் சிப்பாய்களுக்கு ஈடாக - சளைக்காமல் - பணிபுரியக்கூடிய விதத்தில் இவர்கள் தயார்படுத்தப்பட்டிருப்பதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

விசேட பயிற்சி பெற்ற இரு பெண்படையினரை படத்தில் காணலாம்.

நகர்ப்புறத்துப் பெண்கள் உதட்டுச் சாயம் பூசித் தங்களை அழகுபடுத்துவதில் ஈடுபட்டிருக்க கிராமப்புறத்தில் இருந்து வந்த இந்த இளம் பெண்கள் முகத்தில் சேற்றைப் பூசிக்கொண்டு ஐக்கிய இலங்கைக்காக சண்டையிடுகின்றனர் - என்று இப்படத்துக்கு அடிக்குறிப்பு வெளியிட்டுள்ளது ஒரு கொழும்பு வார இதழ்.

## கொலையாளி பற்றி எந்தத் தகவலும் இல்லை

நாடாளுமன்றஉறுப்பினர் நீலன் திருச்செல்வம் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் பலியாகி ஒருமாதம் கடந்துவிட்ட நிலையிலும் குண்டை வெடிக்கவைத்த அந்தத் தற்கொலையாளி யார் என்பதைக் கண்டறிய பொலீஸாரால் முடியாமல் போயுள்ளது. அந்தச் சம்பவம் தொடர்பாகப் பல பொலீஸ் குழுக்கள் தீவிரவிசாரணைகளை மேற்கொண்டுவந்தபோதிலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் தற்கொலையாளி யார் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அந்த நபர் யார்?

அவர் எங்கிருந்து வந்தார்?

கொழும்பில் எங்கே தங்கியிருந்தார்?

தாக்குதல் தொடர்பான திட்டங்களை எப்படித் தீட்டினார்?

அவருக்கு உதவிகளை -வழங்கியோர் யார்?

ஆகிய கேள்விகளுக்கு பொலீஸாரால் தெளிவான விடை காணமுடியாமற்போயுள்ளது.

தலைநகரில் முன்பு இடம்பெற்ற பல சம்பவங்களின்போது தாக்குதல் நடத்தப்பட்டு குறைந்தது 12 மணி நேரத்துக்குள் தற்கொலையாளி தொடர்பான தகவல்களை பொலீஸாரால் வெளியிட முடிந்தது. ஆனால் கடைசியாக நடத்தப்பட்ட நீலன் மீதான தாக்குதல் பொலீஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் பெரும்சவாலாக அமைந்துள்ளது.

தற்கொலையாளி தொடர்பான எந்த ஒரு தடயத்தையும் - தகவலையும் - விட்டு வைக்காத விதமாக புலிகள் திட்டங்களைத் தீட்டியிருப்பதாக பொலீஸார் நம்புகின்றனர்.

## விடுதலைப்புலிகளின் உளவாளி கைதாம்

விடுதலைப் புலிகளின் முக்கிய உளவாளி எனக் கருதப்படும் நபர் ஒருவரை கொழும்பு நாசகாரச் செயல்கள் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளவத்தையில் உள்ள நாசகாரச் செயல்கள் தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு வெளியே சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடியபோது இவர் கைது செய்யப்பட்டார். சிவஞானதாசன் சிறீக்காந்தன் (அல்லது சிறி) என்பவரே கைது செய்யப்பட்டுள்ள நபர். இவர் கொடிகாமத்தைச் சேர்ந்தவர் என்றும் அங்கிருந்து கடந்த ஜூன் மாதம் கொழும்புக்கு வந்ததாகவும் பின்னர் பொலீஸாருக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வில் தோற்றி அதில் தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்றும் தகவல்கள் வெளியிடப்படடுள்ளன.

அரசாங்கத்தின் அதிமுக்கிய பிரமுகர்கள் பயணம் செய்யும் வாகன அணிகளை இலக்கு வைத்துத் தாக்குவது உட்பட பல சதித்திட்டங்கள் இவர்மூலம் அம்பலமாகியுள்ளதாக பாதுகாப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மத பிரமுகர் கைது

கண்டியில் இருந்து சென்ற விசேட பொலீஸ் குழு ஒன்று திருமலையில் வைத்து மதபிரமுகர் ஒருவரைக் கைதுசெய்துள்ளது.

கடந்த சில வாரகாலத்துக்கு முன் கண்டிக்கு விஜயம்செய்த அந்த நபர் மத வழிபாடுகள் மற்றும் செயற்பாடுகள் நடைபெற்ற பல இடங்களில் தங்கியிருந்துள்ளார்.

இவர் விடுதலைப் புலிகளின் உளவாளியாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் பொலீஸார் அவரை விசாரணை செய்து வருகின்றனர்.

## இப்படியும் ஊகம்

செம்மணிப் பகுதியில் உள்ள பெரும் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கைகள் இம்மாதம் முழுவதும் நடைபெறவுள்ளதால் இக்காலப்பகுதியில் குடாநாடு உட்பட வடக்கு - கிழக்கில் பெரிய தாக்குதல்கள் எதனையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளமாட்டார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்களில் ஒருவித எதிர்பார்ப்பு நிலவுகிறது.


படையினரால் சித்திரவதைசெய்து கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் சடலங்களைத் தோண்டி எடுக்கும் நிகழ்வு அரசுக்கும் படையினருக்கும் எதிரான கடுமையானஉணர்வலைகளை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தலாம். அத்துடன் சர்வதேச கவனம்கூட இந்தப் புதை குழி விவகாரத்தின் பக்கம் திரும்பி இருப்பதால் அங்கு தோண்டப்படும்போது வெளியாகும் உண்மைகள் அரசுக்கு பெரும் அபகீர்த்தியை உண்டுபண்ணும். எனவே இக்காலத்தில் பெரும் தாக்குதல் எதனையும் நடத்தி இந்த நிகழ்வுகள் மீதான கவனத்தை திசை திருப்புவதை புலிகள் விரும்பமாட்டார்கள் என்று கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

## புலிகளுக்கு ஆயுதங்கள்?

கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றிலிருந்து கப்பல் மூலம் ஏற்றிவரப்பட்ட பொருந்தொகையான ஆயுத தளபாடங்கள் கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி இரவு முல்லைத்தீவுக் கடலில் வைத்து இறக்கப்பட்டதாக தகவல் வெளியானதை அடுத்து கடற்படையினர் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயப் பிராணிகளின் அற்புதக்கதைகள்



*அருமைச் சிறுவர் சிறுமியரே!*

*உங்கள் வீடுகளில் நாய், பூனை போன்றவற்றை நீங்கள் செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகிறீர்கள். உலக வரலாற்றில் சிறிது காலம் பின்னோக்கிச் சென்று நோக்கினோமேயானால் இச்செல்லப்பிராணிகள் செய்த வீரதீரச் செயல்கள் பலவற்றை நாம் அறிந்துகொள்ள முடியும். தம் உயிரைக் கொடுத்து தமது எஜமானர்களைக் காத்த அற்புதப் பிராணிகளின் தியாகங்களைக் தெரிந்து கொள்ளமுடியும். அந்த வகையில் சில அதிசய சம்பவங்களை இங்கு தருகிறோம்.*

## தாய்ப்பாசமும் தீரமும்

இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் நகரில் செயின்ட் அகஸ்டின் தேவாலயம் ஒன்று உள்ளது. அதன் தலைவராக (ரெக்டர்) வண.பிதா ராஸ் என்பவர் இருந்தார். ஒரு நாள்தேவாலயத்தில் அழகிய பெண் பூனை ஒன்றைக் கண்டார் அவர். அதன் உடலில் வரிவரியாக கோடுகள் இருந்தாலும் வெள்ளை நிறத்துப் பூனை அது. வழி தவறி வந்த பூனையாக இருக்கலாம் என்று கருதிய பிதா ராஸ் தன்னொடு தங்குவதற்கு அதை அனுமதித்து அதற்கு '.'.பெயித்'(நம்பிக்கை) என்று பெயரும் சூட்டினார்.

.'.பெயித் அவருடன் ஒட்டிக்கொண்டது. தேவாலயத்திலேயே எப்போதும் சுற்றிக்கொண்டிருக்கும். சில வேளைகளில் அதற்காக ஒதுக்கப்பட்ட தனி இடத்திலும் அமர்ந்திருக்கும். 1940 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் கறுப்பும் வெளுப்புமாக ஒரு குட்டியைப் பெற்றது '.'.பெயித்'. அதற்கு 'பான்டா' என்று பெயரிட்டார் ராஸ். தன்குழந்தையோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தது அப்பெண்பூனை. திடீரென்று ஒருநாள் அது அமைதியிழந்து காணப்பட்டது. தேவாலயக் கட்டடத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று எதையோ தேடி அலைந்தது. ஆயினும் அதற்கு அமைதி ஏற்படவில்லை.

இறுதியாக, தன்குட்டி பான்டாவைத் தூக்கிக்கொண்டு மூன்று மாடிக்குக் கீழே, ஓர் ஒதுக்குப்புறமான மூலையில் - சங்கீதக் கருவிகளைக் குவித்து வைத்திருந்த இடத்தில் போய் ஒட்டிக் கொண்டது. வசதியற்ற குளிர்தாக்கும் அந்த இடம் பூனைக் குட்டிக்கு ஏற்றதல்ல என்று கருதிய வண.பிதா, பான்டாவைத் தூக்கிக்கொண்டு போய் மாடியில் விட்டார். ஆனால் .'.பெயித் மீண்டும் தன் குழந்தையைக் கீழே, அதே மூலைக்குக் கொண்டு வந்தது. இப்படி நான்கு முறை வண.பிதா ராஸ், பூனைக்குட்டி பான்டாவை மேலே தூக்கிப்போக, தாய்க்காரியான .'.பெயித் மறுபடி மறுபடி தன் குட்டியைக் கீழே கொண்டு வந்து, அதனுடன் அம்மூலையில் ஒண்டிக்கொண்டது.

வண.பிதா ராஸ் தம் முயற்சியைக் கைவிட்டார். அந்த மூலயிலிருந்த சங்கீதக் கருவிகளை ஒதுக்கி, பூனையும் அதன் குட்டியும் அங்கேயே இருக்க வசதி செய்து கொடுத்தார். .'.பெயித்தின் கூடையையும் கொண்டு வந்து அங்கேயே வைத்தார். அம்மாப் பூனை மகிழ்ச்சியாகத் தன் குழந்தையோடு அந்தக் கூடையில் ஏறி அமர்ந்து கொண்டது. அதன் முகத்திலும் திருப்தி நிலவியது.

மூன்று நாட்களுக்குப் பின்னர்......

செப்டம்பர் 9ஆம் திகதி, மதகுரு ராஸ் அன்று தேவாலயத்தில் இல்லை. வெளியே சென்றிருந்தார். அன்று இரவு லண்டன் நகர் மீது பயங்கரமான விமானக் குண்டுவீச்சு நிகழ்ந்தது. இரண்டாம் உலகப் போரின் உச்சக்கட்டம் அது. நாஜி விமானங்களிலிருந்து வீசப்பட்ட ஏராளமான குண்டுகள் தேவாலயத்தின் மீது அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்தன. படுநாசம்......

மறுநாள் காலை பிதா ராஸ் வந்தபோது தேவாலயம் தரை மட்டமாகிக் கிடப்பதைக் கண்டார். மரப்பகுதிகளெல்லாம் எரிந்து கருகிப்போய் - புகைந்து கொண்டிருந்தன. 'இந்த நிலையில் .'.பெயித்தும் குட்டியும் பிழைத்திருக்க சாத்தியமே இல்லை' என்று வேதனையுடன் எண்ணமிட்டவாறே இடிபாடுகள் மீது ஏறினார் பிதா. அப்போதும் அணையாமல் எரிந்து கொண்டிருந்தன பல பகுதிகள். நம்பிக்கை இல்லாவிட்டாலும் அவரையும் அறியாமல் அவர் வாய் ".'.பெயித்" என்று அழைத்தது.

.'.பெயித் என்னவாயிற்று? குட்டியுடன் உயிரோடு இருந்ததா? இல்லை குட்டியைக்காத்து தான் மடிந்துவிட்டதா? அறிய அடுத்தவாரம்வரை காத்திருங்கள்.....

# செய்தித்தாள்




செய்தித்தாள் செய்தித்தாள்
செய்திகளைத் தந்திடும செய்தித்தாள்
ஆய்ந்த அறிஞர் பாமரரும்
அனைவரும் படிக்கும் செய்தித்தாள்

நாட்டு நடப்பை நாள்தோறும்
நமக்கு வழங்கிடும் செய்தித்தாள்
வீட்டுப் பொருள்கள் விலைவாசி
வழங்கி உதவிடும் செய்தித்தாள்

சிறுவர் விரும்பும் சிறுகதைகள்
சிந்தனைச் செய்திகள் தந்திடுமே!
அனைவரும் விரும்பிப் படித்திடவே
பல்சுவைப் பகுதிகள் தந்திடுமே!


- கே.ஜோதி -

# புள்ளிகளை இணையுங்கள்



வரிசைக் கிரமத்தில் புள்ளிகளை இணைப்பதன் மூலம் மறைந்திருப்பவர் யாரெனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

# நிழல் ஜாலம்






மெல்லிய கடதாசி மட்டையில் படம் 1இல் உள்ளதுபோல் எலியின் தலை, வால் இரண்டையும் வரைந்து கத்தரித்துக் கொள்ளுங்கள்.

கத்தரித்த பாகங்களை படம் 2 இல் காட்டியுள்ளபடி கைகளில் பிடித்துக்கொள்ளுங்கள்.

விளக்கொளியின் முன்னால் உங்கள் கைகள் இரண்டையும் படம் 3இல் காட்டியுள்ளபடி இணைத்துக் கொண்டீர்களேயானால் - உங்களுடன் விளையாட சுவரில் ஒரு சுண்டெலி உருப்பெற்றுவிடும்!

# வித்தியாசம் தெரிகின்றதா?





இந்த இரு படங்களுக்கும் இடையில் குறைந்தது ஆறு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றை உங்களால் கண்டுபிடிக்க முடிகின்றதா?

(விடை XV ஆம் பக்கத்தில்)

# வஞ்சக நண்பன்



மார்த்தாண்டன் ஒரு சிறந்த மன்னன். நல்ல பண்புகளும், அறிவும் வாய்க்கப் பெற்றவன்.

அரசர்களுக்குரிய வித்தைகள் எல்லாம் கைவரப் பெற்றவன். அவைதவிர சில அபூர்வமான வித்தைகளையும் அவன் கற்றிருந்தான். அவ்வித்தைகளில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தான். அவற்றை பிறர்க்கு கூறாமல் ரகசியமாகப் பேணிவந்தான்.

மன்னர் மார்த்தாண்டனுக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் வஞ்சக குணம் உடையவன். நல்லவன் போல் நடிப்பவன். ஆனால் அரசன் அவனின் தீய குணத்தை அறியவில்லை. அவனது நடிப்பை நட்பு என்று நம்பிவிட்டான். இருவரும் நெருங்கிப்பழகினர்.

அந்த வஞ்சகனைப் பற்றி மந்திரியார் நன்கு அறிந்திருந்தார். அரசனிடம் பல முறை அவனைப்பற்றிக் கூறி எச்சரித்தார். ஆனால் மன்னனோ அவற்றைப் பொருட்படுத்தவில்லை. வஞ்சகனையே நம்பினான்.

தன்னுடன் நெருங்கிப் பழகிய அவ்வஞ்சகனுக்கு அரசன் தான்கற்ற வித்தைகளையெல்லாம் கற்றுக் கொடுத்தான். ஓர் உடலில் இருந்து வேறொரு உடலுக்கு தம் உயிரைக் கொண்டு செல்லக் கூடிய கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையையும் கற்றுக் கொடுத்தான்.


ஒருநாள் அரசனும் வஞ்சக நண்பனும் பூங்காவில் உலாவச் சென்றனர். சோலையின் ஒரு மரப்பொந்தில் ஆண் கிளி ஒன்று இறந்துகிடந்தது. அருகில் பெண்கிளி ஒன்று துக்கம் தாளாமல் கதறிக்கொண்டிருந்தது. மார்த்தாண்டன் பெண் கிளியின் நிலையைக் கண்டு மனம் வருந்தினான். அதன் துயரத்தை ஆற்ற நினைத்தான். எனவே, தனக்குத் தெரிந்த கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையைப் பயன்படுத்தி தனது உடலிலிருந்து பிரிந்து அந்த ஆண்கிளியின் உடலில் புகுந்தான். ஆண்கிளி உயிர் பெற்று எழுந்ததைக் கண்ட பெண் கிளி பேரானந்தம் அடைந்தது.

தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்த வஞ்சக நண்பனோ, தானும் கற்றிருந்த அவ்வித்தையைப் பயன்படுத்தி தன் உடலிலிருந்து பிரிந்து மன்னனின் உடலில் புகுந்து கொண்டான். அது மட்டுமா? தன் உடலையும் எரித்து விட்டான்.

மார்த்தாண்டன் உடலில் நாடு திரும்பிய வஞ்சகன் மனனாக ஆட்சி நடத்தலானான். நடந்ததை அறிந்த கிளி உடலிலிருந்த மன்னனோ செய்வதறியாது திகைத்தான். நண்பனாக நடித்த நயவஞ்சகனால் தான் ஏமாற்றப்பட்டதையுணர்ந்து மனம் கலங்கினான். மீள்வதற்கு வழியின்றி கிளியாகவே வாழ்ந்திருந்து இறந்து போனான்.

*நல்ல நண்பர்களுடன் சேர்ந்தால் அவர்கள் நம்மைத் தம் உயிர் கொடுத்தேனும் காப்பர். ஆனால் நல்லவர் போல் நடிக்கும் வஞ்சக நண்பர்களுடன் சேர்ந்தால் அவர்கள் நம்மைத் தருணம் பார்த்திருந்து கவிழ்த்தும், அழித்தும் விடுவர்.*

# பொருத்தமான கால்கள் எவை?




மேலே தரப்பட்டுள்ள படத்தில் சில விலங்குகளும் அவற்றின் கால்களும் சோடியாகத் தரப்பட்டுள்ள விதம் தவறானது. பொருத்தமான சோடிகளை சரியான விதத்தில் இணையுங்கள் பார்க்கலாம்.

முடியாதவர்கள் XV ஆம் பக்கத்தைப் புரட்டுங்கள்!




'சிறுவர் சுடர்' தயாரிப்பு :- நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்

பழரசப் போத்தலில் பண்ணிய விளக்கு,
உளநலம் கெட்டு உடைமையை விடுத்து
இடப்பெயர்வுற்று இடர்பல பட்டு
உடல்நலம் கெட்டு, ஒதுக்கிடம் அற்று
கையிலும் காலிலும் களத்தவை களைந்து
வெய்யிலும் மழையும் வேறுபா டொழிந்து
தெருவிலும் வழியிலும் சீவியம் பண்ணியும்
இருங்கலைச் சுடரை இழக்க எண்ணாத
இலங்கைத் தமிழனின் இடரை
உலகுக் குணர்த்த உதவும் சின்னமே!


- வ.சின்னப்பா -
தணங்கிளப்பு

இளம் தளிரே,
இதயம் தளராதே!
குப்பி விளக்கொளியிற்
குனிந்து படி - நாளை
நிமிர்ந்து நிற்கலாம்.
இப்புவியரசாய்
இன்னல் களையலாம்
மண்ணெய் விளக்கிலும்
கண்ணெனக் கற்றால்
மண்ணையும் ஆளலாம்!

- இ. ஜெயக்குமார் -

வன்னிச் சகோதரனே.........!
வற்றியுள்ள வ(யி)ற்றோடு - நீ
குப்பி விளக்கினில் கற்றாலும்.....
சத்தியமாய் சொல்லிடுவேன்
உச்சத்திலேதான் வெட்டுப்புள்ளி....!

- சீ.ஏ.சிறீகரன் -
ஆழியவளை.




உடன் பிறப்பே!...
குப்பி விளக்கொளியில்
குந்தியிங்கு படிக்கும் நீ...
தப்பாமல் நாளை இந்த
தங்கத் தமிழ் மண்ணில்
தாரகையாய் ஒளிர்ந்திடுவாய்.

- வே. மயூரன் -
மருதங்கேணி.

தரணியிலே புகழ் கொண்ட
தமிழர்கள் வரலாற்றை
தனியாக நீ படித்து
தவிக்கின்ற தமிழர்க்கு
தருவாயா விடுதலையை?
உரிமையுடன் உன் ஒளியில்
உள்ளிருந்தே உணர்கின்றாய்
உணர்ந்திட்ட உரிமைகளை
உரத்து நீயும் சொல்லிடவே
உறிவிளக்குள் போல் உனக்கு
உண்டாமோ சுதந்திரம்?

- பரமேஸ் -
கொடிகாமம்.

பொத்தல் குடிசையிலே
போத்தல் விளக்கெரித்து
நேத்து இருந்த வன்னி மண்ணில்
யுத்தம் என்றகொடும்
சாத்தான் சீரழிக்க
நத்த வந்த அரசியல்வாதிகளும்
தத்தம் பங்குக்கு நாறடிக்க
செத்ததே எம் கல்வி
பத்தியெரிகிறது எம் வயிறு
பத்த வைக்க எண்ணெயில்லை
சித்தம் சொல்கிறது விடுதலையொன்றுதான்
சந்ததியை யுயர்த்து மென்று.

- ச.நித்தியானந்தன் -
பண்ணாகம்.

நிலைமாறிய ஆட்சி
குலைத்தது வாழ்வை
தலைகுனிய வேண்டியவர்கள்
தலைவர்களாய் இருக்க
தளிரே நீயும்
தடைகளை வெல்ல
குப்பி விளக்கானாலும்
குனிந்து படி!

- சிவன் -
பளை.

ஞாபகமிருக்கிறதா....நீ
சின்னவனாய் அன்று,
'சிக்கலின் மத்தியில்'
சிக்கன விளக்கினுள் - உன்
குனிந்த தலையும், தூங்கிய விழியுமாய்.....
விரித்த பக்கங்கள்தான் - இன்று நீ
'வி - கொம்மாய்' வீங்கிய சாதனை!

- அல்வை த.சிவா -

ஜாம் போத்தல் சுடரினிலே
யாமிருந்து படித்ததெல்லாம்
மொத்தப் புள்ளி வந்ததும்....
சத்தமாய் சந்தோஷித்ததெல்லாம்
வெட்டுப்புள்ளிக்கு ஒருபுள்ளி குறைந்தது கண்டு
சட்டென்று வடிந்ததென்ன - இங்கே நெஞ்சம்
பட்டென்று வெடித்ததென்ன?

- நட்ஷேத்ரா -
உடுப்பிட்டி.

குப்பி விளக்குகள்.....
குடிலற்ற வாழ்வுகள்....
குண்டு விதைப்புக்கள்....
கூண்டோடு அழிவுகள்...
குறித்துக் கலங்காதே!
விழிநீர் துடைத்து
வேண்டும் வரம்பெற
விரைந்து களம் சேர்....!
வெற்றி நிச்சயம்....!!

- கிராஞ்சியூரான் -

வன்னிப் பாதையால் வயிறு சுருண்ட பின்னரும்
கன்னி மனம் கலங்கவில்லையடா.....
தண்ணி இன்றி தாயகம் வரண்ட பின்னரும்
வன்னி மண்ணின் மாணவர் நாமடா.....
எண்ணை இன்றி ஏமாந்து போன பின்னரும்
கல்வி மட்டும் கனவாக மாறாதடா....

- ச. வதனி -
வவுனியா.

குப்பி விளக்கின்
குறுகிய ஒளியில்
கூடியிருந்து சுதந்திர
கீதம் இசைத்தோமே
குதூகலமாக அன்று நாம்!
அந்த இன்பம் இன்று
இந்த மின்னொளியில்
இல்லையே!!

- கு.யோகேஸ்வரன் -
கைதடி.

இளையவனே!
தலை குனிந்து படிப்பதெல்லாம் - நாளை
தலை நிமிர்ந்து நடப்பதற்கே!
எரிகின்ற தீபம் ஒளிதரும் போது
விளக்கினடியில் இருள் வட்டம் போடும்.
அதற்காக மனம் தளராமல் படி!
நாளைய நாயகன் நீதான்!

- ந.கௌசல்யா -
புதுவையூர்.

குப்பி விளக்கினிலே
குனிந்திருந்து படிக்கும்
தம்பி என் சோதரா!
இன்னும் எம் இரவு
விடியவில்லையா?
எழுதப்பட்ட உண்மைகளை
எம்தேசம் படிக்கும்
வரை - நீ
விழித்திருந்து 'படி'!

- எம். பிருந்தா -
கோண்டாவில்.

ஊனுருக உறக்கமின்றி
எரியும் நினைவுதனில்
உன்னை நீ ஆகுதியாக்கி
முடங்கியிருந்து ஏட்டைப்புரட்டி
என்னதான் தேடுகிறாய்?
சிறைப்பட்ட வாழ்வுதனில்
சுதந்திரம் எப்போதென்றா?

- சு.சதீஸ்வரன் -
கரணவாய் - மேற்கு.

கொலைக்களத்திலும்
குப்பி விளக்குடன்
போராடிப் பெற்றபுள்ளி!
உலைக்களமாய்
உள்ளே கொதிக்குது -
வைப்பாரோ
'வெட்டுப்புள்ளி'யெனும் கொள்ளி?

- சௌஜன்யா -

'வன்னி மகன்' நான்
வற்றிய வயிற்றுடன்
சற்றும் எண்ணெயில்லா
சம(ர்) கால விளக்குடனும்,
'முற்றும்' போடாத - என்
விருப்பக் கல்வியினை
முற்றும் துறந்து விட
நேர்ந்திடுமோ -- இக்காலமதில்?

- சைதன்யன் -

பார்! மகனே பார்!
எம், ஈழத்தமிழனின்
அவலத்தை நீயே, பார்!
விளக்கொளியினில்,
பயிலவேண்டியவன்,
இன்று விளக்கின் 'சுடராய்'
நமக்கே, ஒளிர்கின்றான்......!

- து.முகுந்தன் -
சாவகச்சேரி.

குப்பி விளக்கில்
படித்த காலத்திருந்த சுதந்திரம்
குமிழ்விளக்கு
வந்த போதில்லையே!
தம்பீ!!
இம்மண் மீது சூழ்ந்துள்ள
இருளகல வேண்டுமெனில்
இன்றே நீ நெய்யாகித்
திரியாகி சுடர் தரு
விளக்காகத்தான் வேண்டும்!

- இணுவை றொட்றிக் -

என்ன படிக்கிறாய் அந்தோணி
எரிந்து படிக்கிறேன் சிஞ்ஞோரே
செத்து செத்துப் படி அந்தோணி
சீவனே போகுது சிஞ்ஞோரே.

- அ.சதானந்தன் -

என் வீட்டு விளக்கே - நீ
விளக்காயோ?
கட்டிய கச்சையதும்
ஒட்டிய வயிறும்
கொட்ட மறந்த - இரு
கண்களும் சே(ா)ர்ந்து,
கெட்டித்தனமாய்ப் படித்த
சுட்டிப்பயல் நான்!

வெட்டி விழுத்தி - எனை
குட்டிச் சுவராக்க வந்த
'வெட்டுப்புள்ளி' - அது
'வேட்டுப் புள்ளி' என்று
என்வீட்டு
விளக்கே - நீ
விளக்காயோ?

- கி. ஜெனி·பர் -

மண்ணெய் விளக்கின் மங்கிய ஒளியில் - நாளைய
சமுதாய விடியலின் பேரொளி!

- தி.செந்தூரன் -
- மீசாலை கிழக்கு -


"சிங்களவனின் தோலிலே
செருப்புச் செய்து
போடுவோம் காலிலே"
சொன்னவர்கள்
சிங்களவனின் காலுக்கே
செருப்பானது போலே

"சிங்கள ரத்தத்திலே
அடிப்போம் நீச்சல்"
இப்படி வாயால் பாய்ச்சல்
போட்டவர்கள்
சிங்களத்தோடு சேர்ந்து
தமிழுக்கெதிராகக் கூச்சல்
போட்டது போலே

'கல்வி ஒளி தரும்'
என்று சொன்னாலும்
நீ இருப்பது
வெளிச்சத்தின் கீழ் உள்ள
இருள் வட்டத்தில்தானே

- கதா -

## மௌனமொழி-50



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.

சிக்கன விளக்கு கூட
ஒளி தர மறுத்து விட்ட
தேசத்தின் வேதனை
இரவில் அறிந்து
விடிவில் எழுதும்
சோதனை.
அம்மையாரின் ஆட்சியில்
இதுவும் ஒரு
'சாதனை'!

- சாவையூர் சுகந்தி -

தமிழா!!
குப்பிவிளக்கில் கற்றாய்
பட்டம்பல பெற்றாய்
மறுக்கவில்லை - ஆயினும்
என்றும் இப்படியே
காலத்தை ஓட்ட(க்)
கனவு காணாதே!
கதிரோனைச் சிறைசெய்து
கண்ணாடியில் அடைத்து - எம்
தேசத்தை அலங்கரிப்போம்
விரைந்தெழுந்து வா!!!!

- அப்துல்லா -
- பூநகரி -

இப்படித்தான்
என் தம்பியும்
இரவு பகலாக......
இப்போதும் கூட
அவனுடன்தான்.....!
அவன் திருவுருவப்
படத்திற்கு
தீபச் சுடராக
பிரகாசித்தபடி....!

- எம்.சுயர்சன் -
கோண்டாவில்.

'பயங்கர வாத(ம்)
தொல்லை நோயால்...
பழம் போத்தில் விளக்கொளியில்....
படித்தேன்....
பல்கலை அனுமதி பெற்றேன்...
ஆனால்....உணர்கிறேன்
பல்கலையின்....
பகிடிவதைத் தொற்றுநோய்
அதிபயங்கரம்!

- எஸ்.அனுஷா -
கரணவாய.

குப்பி விளக்கில்
கண் விழித்துப் படிப்பினும்
வெட்டுப்புள்ளி
உனக்கு எட்டாக்கனிதான்!

- ஞான. ஆதவன் -

இருளில் இருந்தபோது......
ஒளி பிறந்தது......
ஒளி இருளை
அகற்றியது
ஆனால்......;
இப்போது கடும் இருட்டு

- செ.சுதர்சன் -
உடுப்பிட்டி.

மின் ஒளியின் மிடுக்கோடும்
மினி சினியின் நினைவோடும்
இங்கே கரியாகும் நெஞ்சங்கள்....
சின்ன ஒளியின் நிழலோடும்
சிறு கனவின் ஒளியோடும்
அங்கே திரியாகும் தேகங்கள்......

- க.யதுநந்தன் -
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 22 ஆச்சி வளர்த்த ஆடு

செங்கை ஆழியான்

காலையில் எழுந்ததும் சிவபுத்திரன் தாயிடம் கூறிவிட்டான்.

"அம்மா, நான் அப்புவைப் பார்க்கப் போறன்..."

"பண்டுக்கு அங்கால போகப் போறியோ? பேசாமல் இரு, தம்பி."

"ஒரு பயமுமில்லை அம்மா. அப்புவைப் பார்த்திட்டு உடனை வந்திடுறன்."

சாவகச்சேரியிலிருந்து அவர்கள் திரும்பி வந்தபோது வீட்டில் நானும் தையல் முத்தாச்சியும் தங்களை வரவேற்கக் காத்திருப்பார்களென நம்பியிருந்தார்கள். வீடு திறந்து கிடந்தது. பொருள்கள் களவாடப்பட்டிருந்ததோடு கண்டபாட்டிற்கு இழுத்து எறிந்து சிந்திக்கிடந்தன. ஆறு மாதங்களாக ஆள்களில்லாததால் வீடு தூசிபடிந்து பாழடைந்து கிடந்தது.

"ஐயாவும் அம்மாவும் அராலில போல. இனித்தான் வருவினம்...." என்று அவர்கள் ஆறுதல் கூறிக் கொண்டனர். இரண்டாம் நாள் பவளம் குடும்பம் அராலிக்குப் புறப்பட்டது.

"நான் போய்ப் பார்த்து அவர்களை அனுப்பி வைக்கிறன் அக்கா." என்று புறப்பட்டுப் போன பவளம் அன்று உடனேயே சுப்பிரமணியத்தைத் திரும்பி அனுப்பி வைத்தாள். தையல்முத்தாச்சி மரணமான செய்தி அவர்களுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. எல்லாரும் அராலிக்கு ஓடிப்போனார்கள்.

ஆச்சியின் சடலம் சாம்பலாகி நான்கு நாள்கள் கழிந்திருந்தன. துயரங்களைச் சொல்லி தாய்க்காகக் கண்ணீர் விடுவதைத் தவிர அவர்களுக்கு வேறெதுவும் இருக்கவில்லை.

"நான் இங்க வைச்சிருந்து அவளைச் சாக்காட்டிப் போட்டன்."

"அதுக்கு என்ன செய்யிறது ஐயா? எல்லாம் விதி..."என்று எனக்கு ஆறுதல் கூறினாள் யோகம்.

தம்பிநாதன் என்னைப் புரிந்து கொண்டான்.

"அம்மான்.." என்றான் புன்னகையுடன்.

"தம்பி...உன்னைக் கண்டதில பெரும் சந்தோசம்.." என்றேன் மனநெகிழ்வுடன்

சிவபுத்திரன் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.


கோண்டாவிலிலிருந்து கலட்டிச் சந்தி, தட்டாதெருச்சந்தி என்பவற்றின் ஊடாக நாவாந்துறை வரை இராணுவவேலி இடப்பட்டிருந்தது. அந்தவேலி அமைந்த பாதையிலிருந்த அத்தனை வீடுகளும் கட்டடங்களும் தரைமட்டமாகி வரம்பணையாகக் குவிக்கப்பட்டு, தகரங்கள், அஸ்பெஸ்ரர் சீற்றுக்கள் என்பவற்றினால மறைப்பிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாண நகரத்திலிருந்து வலிகாமத்திற்கு போவதற்கு கலட்டிச் சந்திப் பாதையும் வலிகாமத்திலிருந்து யாழ்பாணத்திற்கு வருவதற்கு தட்டாதெருப் பாதையும் மட்டுமே இராணுவத்தினரின் சோதனைக்குப் பின்னர் நடமாட வழிவிட்டன. பல குறுக்கு வீதிகள் கம்பிவேலிகளால் தடைப்படுத்தப்பட்டிருந்தன. பிரதான மையங்களில் இராணுவச் சென்றிகள் அமைக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து திரும்பி ஓடிவந்த மக்கள் இத்தடைகளுக்குப் பழக்கப்பட்டு விட்டனர்.சென்றிகளில் இறங்கி வாகனங்களை உருட்டி நடக்கப் பழகிவிட்டனர்.

எங்கள் வீடு அதிகளவில் சேதமடையவில்லை. பொருள்கள் களவு போயிருந்தன. பழையபடி அவ்வீட்டில் கலகலப்பு நிறைந்து விட்டது. தம்பிநாதனின் வருகை அக்குடும்பத்தில் புதியதொரு உணர்வினை ஏற்படுத்தியிருந்தது. தம்பிநாதன் தன் பிள்ளைகளை அடையாளம் கண்டு கொண்டான்.

"அப்பா...அப்பா..." என்று சிவபுத்திரனும் தாரணியும் அவனையே அடிக்கடி சுற்றிவந்தனர். தம்பிநாதனின் மனநிலை படிப்படியாகத் திரும்பி வந்தது. எனினும் முன்னர் போல அவனால் அதிகம் பேசமுடியவில்லை. வார்த்தைகள் மிக மெதுவாகவும் அளவாகவும் வெளிவந்தன.

ஜெயா குடும்பம் கோண்டா



விலுக்குச் சென்று விட்டது. ஆறு மாதங்கள் சாவகச்சேரியில் ஒன்றாக இருந்து ஒன்றாகச் சமைத்து ஒன்றாகப் பழகிவிட்ட அவர்களுக்கு அக்குடும்பத்தின் பிரிவு வேதனையைத்தந்தது. பவளம் குடும்பத்தினர் அராலிக்கு வந்து விட்டனர். நான் இன்னமும் அராலியிலேயே இருந்தேன். எல்லாரும் வந்து என்னை அழைத்தபோது நான், "அம்மாவின்ர துவசம் முடியட்டும். அதுவரை நான் இங்கதான் இருக்கப் போறன்" என்று மறுத்துவிட்டேன்.என்னைப பொறுத்த வரையில் அந்த வீட்டில் தையல் இன்னமும் சுற்றிக் கொண்டு இருப்பதாக எண்ணம்.

சிவபுத்திரன் சைக்கிளில் கலட்டிச் சந்தியை அடைந்தபோது வரிசையாக சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் நின்றிருந்தன. இன்னொரு வரிசையில் மக்கள் நின்றிருந்தனர். ஒவ்வொருவரையும் அவதானமாகச் சோதனையிட்டு அந்த சென்றியைக் கடந்து வலிகாமத்திற்குள் பிரவேசிக்க இராணுவத்தினர் அனுமதித்தனர். சைக்கிளை உருட்டிக் கொண்டு சென்றியைக் கடந்து ஏறி நாச்சிமார் கோயிலை நோக்கிச் செலுத்தினான்: கலட்டிச் சந்திக்கு அப்பால் சென்றிகள் இருக்கவில்லை. காக்கைதீவிலும் அராலிப் பாலத்திலும் இராணுவத் தடைமுகாம்கள் இருந்தன. அராலிச் சந்தியில் அவனைத் துருவித்துருவி விசாரித்தனர்.

"எங்க போறது?"

"அராலிக்கு.."

"எதுக்குப் போறது?.."

"அப்புவைப் பாாக்க... அவர் அங்கதான் இருக்கின்றார்".

"அப்பு?..சியாத?...நீ எங்க இருக்கிறது?"

"கொட்டடியில..."

"தன்னியப்போறது ஏன்?"

அவனுக்கு இதற்குப் பதில் சொல்லத் தெரியயவில்லை. விழித்துக் கொண்டு நின்றான்.

"சரி...சரி...போறது.."

அவன் சைக்கிளில் ஏறி அராலிப் பக்கமாக செலுத்தினான். எப்படியிருந்த யாழ்ப்பாணம்? இன்று இப்படி முழத்திற்கு முழம் சோதனைச் சாவடிகளைக் கொண்டு சிறைக்கூடமாக மாறிவிட்டது. பாதையின் ஒரு பக்கம் வயல்வெளி. ஒரு பக்கம் பனைவளவுகள். தென்மராட்சியிலிருந்து திரும்பி வந்த மக்கள் தங்கள் வீடுகளைத் திருத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குடிசைகளுக்குப் புதிதாக மரம் மாற்றிக்கொண்டிருந்தனர். கிடுகுகளால் வேய்ந்துகொண்டிருந்தனர்.

கட்டாக்காலிகளாக மாறிவிட்ட தங்கள் மாடுகளைக் கயிறுகளுடன் மூவர் கலைத்துப் பிடிக்க ஓடிக் கொண்டிருந்தனர். மாடுகள் தலையைச் சிலுப்பியபடி அவர்களின் பிடிக்குள் அகப்படாது தெறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன.

ஓரிடத்தில் சிலர் கலவரத்தில் ஈடுபட்டுக்கொண்டு நின்றதைச் சிவபுத்திரன் அவதானித்தான். குறிசுடாத கன்று ஒன்றினை ஒருவர் தனதெனப் பிடித்திருந்தார். மற்றவர் தன்னுடையதென வாதாடிக்கொண்டிருந்தார்.

சிவபுத்திரனுக்குச் சிரிப்புவந்தது. இடப்பெயர்வின் பயனாக சமூகத்தில் புதிய பிரச்சினைகள் தோன்றத் தொடங்கிவிட்டன. அராலியில் ஆறு மாதங்களில் பல கன்றுகள் ஈனப்பட்டிருக்கும். சில பெரும் பசுக்களாகவும் எருதுகளாகவும் வளர்ந்திருக்கும். குறியில்லாத அவற்றிற்கு உரிமைகோரும் சொந்தக்காரர்கள் பலராகவிருப்பர்.

"என்ர பசுவோட நிக்குது. அதனால அது அதன் கன்றுதான்..."

"விசர்க்கதை...என்ர பசுவின்ர நிறம். குணங்குறி தெரியவில்லையே?"

இப்படிப் பலசண்டைகள் நடககத்தான் போகின்றன.

அவன் பவளத்தின் வீட்டிற்கு வந்த போது நான் போர்டிக்கோக் குந்தில் அமர்ந்திருந்தேன். முகத்தில் ஓரளவு தெளிவு பிறந்திருந்தது. தையலின் மரணத்தின் பின்னர் நான் சோர்ந்து போய்விட்டேன். எல்லாமே இழந்து போனதுபோல இடிந்து போனேன்.

"அப்பு..."என்றபடி சிவபுத்திரன் வந்தான். பேரனைக் கண்டதும் என் முகம் மலர்ந்தது.

"வா...வா...பேரா..."

அவன் என் அருகில் அமர்ந்து கொண்டான். வீட்டிற்குள்ளிருந்து சரசு ஓடிவந்தாள்.

"உள்ளுக்கு வா அண்ணை..."

"அப்புவோட கதைச்சிட்டு வாறன்... அன்ரி எங்கே?"

"குளிக்கிறா... அப்பா வெளிக்கிட்டிட்டார் சித்தங்கேணிக்கு..."

நானும் பேரனும் பலவற்றையும் பேசிக்கொண்டோம்.

பேச்சுவாக்கில், "அப்பு நான் சாவகச்சேரியிலிருந்தபோது ஒரு சோதனை செய்தன்.அது உங்களுக்குப் பிடிக்கும்..."என்றான் சிவபுத்திரன்.

"என்ன சோதனை?"

"கிராம சேவையாளர் பரீட்சை எடுத்தன்.."

எனக்குத் திருப்தியான மகிழ்வு.

"சந்தோசம். நீ நிச்சயமாகப் பாஸ்பண்ணுவாய். எங்கட காலத்தில இப்படிச் சோதனையில்லை. கிராமத்தில் செல்வாக்குள்ள, தலைமை வகிக்கக் கூடியவர்கள் விதானையாகத் தெரிவாவர். என் அப்பு விதானையாகவிருந்ததால் எனக்கு அந்த வேலை கிடைச்சுது..."

சரசு தேநீர் வழங்கினாள்.தேநீரை வாங்கிக் கொண்டு சிவபுத்திரன் சொன்னான் "மாணிக்கராசன் கடிதம் ஏதாவது எழுதினானா?"

"இல்லையண்ணா... அம்மாவும் கடிதத்தை எதிர்பார்த்திருக்கிறா. புவனம் விசயத்தை அம்மா விரிவாக எழுதிவிட்டா. நீயும் எழுதினாய் தானே, அண்ணா? அண்ணற்ர பதில் தான் வரவில்லை. கடிதம் கிடைக்கவில்லையோ?"

"கிடைக்கும்...கப்பலில் கடிதம் கொழும்புக்குப் போறதால தாமதமாகும். கெதியில பதில் வரும்.."

"அப்புவுக்கு பத்மா அத்தை கடிதம் போட்டிருக்கா. இந்தியாவிலிருந்து எல்லாரும் வரவிருக்கினமாம். ஜனார்த்தன், உமா எல்லாரும் வருகினாமாம்."

அவன் என்னைப் பார்த்தான்.

"ஓமோம். வருகினமாம். இந்தியாவில இருக்க முடியாதாம். பிள்ளைகளுக்கும் வயது வந்திட்டுது. இங்கினேக்க ஏதாவது சம்பந்தம் செய்ய வேண்டுமென எழுதியிருக்கிறாள். வரட்டும்..."

முற்றத்தில் நின்றிருந்த ஆடுகள் கத்திக் குரல் தந்தன. தாய் ஆட்டினைப் பார்த்துவிட்டு நெடுமூச்செறிந்தேன். நாங்கள் இங்கு இடம் பெயர்ந்து வந்தபோது பாலத்தடியிலிருந்து எங்களைப் பின் தொடர்ந்து வந்த ஆடு. இன்று குட்டிகளுடன் பெருகி நிற்கின்றது. அவற்றினை எவ்வளவு கரிசனையாகத் தையல்முத்து பராமரித்தாள்!

"உந்த ஆடு உன்ர ஆச்சிக்குப் பின்னால வந்தது.."

நான் அந்தச் சந்தர்ப்பத்தை விளக்கினேன். பொறுமையாகக் கேட்டான்.

"ஆராவது இந்த ஆட்டைத் தேடி வருவினம். அப்பு."

"வந்தால் எனக்கேன்? கொடுப்பன்"

"அப்பு இப்படியே இருந்தால் என்னவாகிறது? எவ்வளவு காரியங்கள் நீங்கள் செய்ய வேண்டியிருக்குது..."

பேரனை நான் கேள்விக் குறியுடன் ஏறிட்டேன்.

"சரசுவை லண்டனுக்குச் சிவபாலனிடம் அனுப்ப வேண்டும். ஜெயா அத்தையிடம் பேசி அவ சம்மதத்தைப் பெற்று புவனத்தை மாணிக்கராசாவுக்கு அனுப்ப வேண்டும்."

நான் சிரித்தேன்.

"எனக்கு வயது போயிட்டுது. இனி நீங்கள் எல்லாரும் அந்தக் காரியங்களைச் செய்யுங்கோ... குடும்பத்திற்கு மூத்தவனாக உன் அப்பா வந்திட்டார்."

"எண்டாலும் அப்பு. நீங்க செய்யிறமாதிரி வருமே?"

திருப்தியாகச் சிரிக்கத்தான் முடிகிறது.

மத்தியானம் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டோம்.

"இந்தச் சண்டைக்கு முடிவில்லையோ, அப்பு? வீதியில் நடப்பது எவ்வளவு அவமானமாகவிருக்கிது..." என்றாள் கவலை தொனிக்கப் பவளம்.

"சண்டையை முடிவுக்குக் கொண்டுவர ஒருத்தரும் விடமாட்டார்கள். ஆட்சி அதிகாரம் என்றதைச் சுவைகண்டவர்கள் அரசியல்வாதிகள். இலேசில பிரச்சினைகளைத் தீர்க்க விடமாட்டான்கள். பல்வேறு வழிகளில் இந்த யுத்தத்தைச் சாட்டி உழைக்கிறவர்கள் இலேசில விடமாட்டார்கள். கொமிசன் ஏஜெண்டுகள், வியாபாரிகள், இராணுவம், உயர் அதிகாரிகள்... விமானப் போக்குவரத்துக்காரர்...இங்க இப்ப கடைகளை விரித்துவிட்ட வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள்...எவர்களும் விடமாட்டார்கள்: விரும்பமாட்டார்கள். எல்லாரும் குழம்பிய குட்டையில் இப்ப நல்லா மீன் பிடிக்கிறார்கள்..." என்று சிவபுத்திரன் சொன்னான்.

"வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களுமோ?"

"ஓமோம்...அப்பு. அவர்கள் தங்களுக்கு வருகிறதில ஒரு சிறு மிகச் சிறு பங்கினை அப்படிக் கிள்ளித் தெளித்துவிட்டு மிகுதியை நிர்வாகச் செலவாகவும்...சம்பளமாகவும் அனுபவிக்கினம். அவை விரும்பமாட்டினம். மனிதசமூகத்தில் சுயநலன்கள் கூடிவிட்டன அப்பு. ஒவ்வொருத்தரும் பணத்திற்கு அடிமையாகிவிட்டினம். மக்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை. ஆட்சி தங்களிடம் இருக்க வேண்டுமென அரசியல்வாதிகள் நினைக்கினம். யுத்தம் தொடர்ந்தால்தான் உழைக்கலாமென வியாபாரிகள் எண்ணுகினம். எங்கும் எதிலும் சுய நலன்... மக்கள் நலன் கருதுபவர்கள் எவருமில்லை..."

நான் பேரனை வியப்புடன் பார்த்தேன்.

(தொடரும்)

## குறள் வெள்ளம்

வாழ்க்கையில் ஆயிரம் தடைகள். தாண்டி வருபவர்கள் சிலர். தடக்கி விழுபவர்கள பலர். காரணம்?..... விதி என்று சமாளிக்க வேண்டாம்! அதை மதியால் வெல்லலாம்.

பணத்தால் சாதிக்க முடியாத சிக்கல்கள், அறிவால் வெல்ல முடியாத தொல்லைகள், சினத்தால் அடக்கமுடியாத எதிரிகள், பலத்தால் வெல்லமுடியாத போராட்டங்கள் எல்லாம் நிறைந்ததுதான் மனித வாழ்வு.

தீர்க்கும் வழி? ஆரவாரம் அல்ல. அடக்கமே என்கிறார் வள்ளுவர். பிழைக்குமா அவர் கூறும் தீர்வு?

[illegible] வேண்டும். ஆத்திரப்படும்போது புத்தி சரிவர இயங்காது. நிதானம்தான் முதலில் தேவைப்படுகிறது.

அடுத்தது அறிவு - அனுபவக்கல்வி - அதைக்கற்று அடங்கிக் கருமம் ஆற்றிவிடல் வேண்டும்.

அப்போது சிக்கல்கள் தானாக விலகுவது போலத் தென்படும். வாழ்க்கை சுமையாக இருக்காது.


வாழ்வில் இதைவிட அறம் வேறில்லை என்ற நிலை தோன்றி விடும். எவருக்கும் கெடுதல் இல்லா வாழ்வை அறம் என்று உலகு பார்க்கும். புகழும்.

**'கதம்காத்து கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து'** - 0130

*அடக்கமுடைமை முற்றும்.*

*- அம்பிகைபாகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போன்மணியும் பெண்மணியும்

5

எம்.வி.முதலாளி என சங்கேதப் பெயர் கொண்ட அவர், அந்தக்கடை வீதியில் உள்ள யாழ். வர்த்தகப் பிரமுகர்களுள் பிரபலமான ஒருவர்.

எனது பக்கத்து அறை ஆசிரிய நண்பர்கள் இருவரும் எம்.வி. முதலாளியின் கடைக்கு இரவு 8 மணிக்குப் போவது வழக்கம். முதலாளியும் கணக்குப் பதிவுகள் சரிபார்த்து, சாப்பாடு யாவும் முடித்து மகிழ்ச்சியாக இருப்பார். 10 மணிக்கு அவர் படுக்கைக்குப் போகும்வரை, அங்கே அரசியல், நாட்டுநடப்புத் தொடக்கம், காதல் சோடி ஓட்டம் பிடித்தது வரை பத்தும் பலதுமாய் அலசி ஆராய்வார்கள். முதலாளியின் அட்டகாசமான ஆனந்தத்தின் காரணம் சிலருக்குப் புரியும் - மெலிதான 'அந்தச் சுவாச வாசனை' மூலம். அந்த நேரம் ரெலிபோன் மணி அடித்தால் 'றிஸீவரை'க் காதில் பொருத்தி ஆரவாரமாய் தமாஷ் பண்ணிக் கலகலப்பார்.

சுற்றுப்புறம் மறந்து அவர் பேசும் வார்த்தைகளிலிருந்து அவருடன் அப்போது பேசுவது அவருக்கு மிக'நெருக்கமான நட்புள்ள' பெரிய இடத்துப் பெண்மணி ஒருவர் என்பது ஆசிரியர்கள் இருவருக்கும் தெரிந்தே இருந்தது. ஆனாலும் முதலாளி பெரிய ஒளிவு மறைவுக்கெல்லாம் முயலமாட்டார்.

மாதத்தில் 2 நாளாவது மாடியில் அவரது படுக்கை வெறுமையாய் இருக்க அவர் வாடகைக்காரில் எங்கோ பயணித்து அதிகாலையில் கடைக்கு வந்துவிடுவதாகவும் ஒரு மர்மத் தகவல்! அத்தகவலின் உண்மைத் தன்மை யாருக்கும் தெரியாது. சில சமயம் அந்தக் கார்ச் சாரதிக்குத் தெரியக்கூடும். கடைச் சிப்பந்திகள் முதலாளி பற்றி மூச்சுவிடமாட்டார்கள். அவ்வளவு எஜமான் விசுவாசம்.

- ஒரு நாள் அந்த மர்மத் தகவல் வெளிச்சத்துக்கு வந்தது.

கண்டி நகருக்கு அருகில் முதலாளியின் மைத்துனர் எடுத்திருந்த வீட்டில் முதலாளியின் மனைவியும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் அவரது மகனும் மகளும் நிரந்தரமாய்த் தங்கியிருந்தார்கள். மாதத்தில் 2 நாளாவது முதலாளி அவர்களிடம் போய் வருவார். இரவில் அவருக்குப் 'போன்' செய்யும் பெண்மணியும் அவரது மனைவியே!

இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த ஆசிரியர்கள் இருவரும் தன்னைத் தப்பாக புரிந்து கொள்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டுதான் முதலாளி மனைவியுடன் ரெலிபோனில் குஷியாகத் தமாஷ்பண்ணி இவர்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருக்கிறார்.

முதலாளியிடமிருந்து இந்த ஆசிரியர்கள் இருவரும் பெற்றுக் கொண்ட பட்டம்- 'முட்டாள்கள்!' என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

## ராசி வேணும்

அன்று அந்த ஆசிரியர்கள் இருவரும் எம்.வி.முதலாளியிடம் போன போது அவர் வாடகைக்காரில் கண்டிக்குப் போயிருந்தார்.

கடையில் யாழ்.புகையிலை வியாபாரி ஒருவர் குளிர் தாங்காமல் கைமூடிய கம்பளிச் சட்டை அணிந்து 'மவ்ளர்' துண்டால் காது மூடித் தலைப்பாகை கட்டி, சுருட்டுப் புகைத்தபடி நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தார்.

இவரைப் போலவே சில மாதங்களுக்கு ஒரு முறை வெவ்வேறு புகையிலை விற்பனைத் தரகர்கள் வந்து இரண்டு, மூன்று நாள் தங்கி முதலாளியிடம் பணமோ காசோலையோ வாங்கிச் செல்வது வழக்கம்.

முதலாளி இல்லாததால் ஆசிரியர்கள் இருவரும் அந்த யாழ்ப்பாணத்து வியாபாரியாரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தனர்.

"நீங்கள் லொறிலொறியாய் அனுப்புகிற பொயிலைச் சிப்பந்தான் மாடி முழுவதும் அடுக்கடுக்காய் நிறைஞ்சு கிடந்து...ஒரே பொயிலை நாத்தம்...!"

"அனுப்பச் சொன்னால் அனுப்ப வேணுந்தானே?"

"உங்களுக்கென்ன...ஊரோடை தொழில்! மூண்டு நாலு மாதத்துக்கு ஒரு முறை இப்பிடி கண்டி, கம்பளை, தெல்தோட்டை, பூண்டுலோயா எண்டு சுற்றுலா....! முதலாளிமாரின் உபசரிப்பு...! வீடு திரும்பேக்கை 'செக்கும், ட்றாவ்ற்றும்' எண்டு ஒரு பெருந் தொகை...! ம் எல்லாத்துக்கும் ஒரு ராசி வேணும்...!"

"ஏன்...உங்களுக்கு என்னகுறை...? மாதாமாதம் சம்பளம்....! தவணை லீவு...! சொந்த லீவு...! போக வர றெயில்வே வாறன்ற்...! எல்லாம் இருக்கெல்லோ...?"

"லீவு விஷயம் இவ்வளவு நாளும் பரவாயில்லை. பதிஞ்சு பாதி... பதி



யாமல் பாதி எண்டு பஞ்சமில்லை... முந்தநாள் தொடக்கம் புது அதிபர்...! கடிதம் போனகிழமை வந்திட்டுது.ஆள் இன்னும் வரவில்லை! அவர் கொஞ்சம்...கடும் பிடியான கெடுபிடி ஆளாம்... முந்தி இருந்த ஸ்கூல்ல பெரிய கரைச்சலான ஆளாம்! இங்கை வந்து சேரட்டும்... ஒழுங்காய் ஆளைப் பதப்படுத்துவம்!"

"கடும்பிடியெண்டால் நீங்கள் பதப்படுத்தத்தானே வேணும்!"

"யாழ்ப்பாணத்திலை அவற்றைஊர் கொஞ்சம் தண்டாமுண்டித் தனந்தான்!"

"அப்படியோ...? ஊர்க் குணத்தை மலைநாட்டிலையும் வந்து காட்டிறாரோ...? வந்த உடனேயே அடக்காமல் ஆளை விட்டியளோ... பிறகு கஷ்டம்...!"

இப்படியே பேசிக் கொண்டு இருந்து விட்டு ஆசிரியர் இருவரும் தங்கள் அறைக்கு வந்து சேர்ந்தனர்.

மறுநாள் வியாழக்கிழமை -

பாடசாலை அமைதி மணிஅடித்து, ஆரம்ப மணியும் அடித்தது. பதில் அதிபராகக் கடமை புரிந்த மூத்த ஆசிரியை அலுவலகத்திலிருந்து எங்களிடம் வந்து புதிய அதிபர் வந்துவிட்டதைக் கூறினார்.

**கா.அருளானந்தம்**
**(கீழ்க்கருணையூர்)**

புதிய அதிபர் எம்.வி. முதலாளியின் உறவினர் என்றும், அவரை முதலாளி தமது கடை மாடியில் தங்க வைத்திருக்கின்றார் என்றும் நேற்றுப் பிற்பகலே என்காதில் பட்ட செய்தி உண்மையாய் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

அன்று பாடசாலை 15 நிமிடங்கள் முன்னரே விடப்பட்டது. அதிபர் பத்தாம் வகுப்பு அறையில் ஆசிரியர்கள் எல்லாரையும் ஒருசேர சந்திக்க விரும்புவதாய் அறிவித்தல் வந்தது.

அதிபர் தன்னைச் சுருக்கமாய் அறிமுகஞ் செய்து கொண்டு சிரித்துச் சிரித்துச் சுவையாகப் பேசினார். நாங்களும் சிரித்தோம். பக்கத்து அறை ஆசிரிய நண்பர்களால் [illegible] னும் சிரிக்க முடியவில்லை. அவர்கள் முதல்நாள் இரவு எம்.வி. முதலாளி கடையில் இருந்த அதிபரை புகையிலை வியாபாரியார் என்று நினைத்து பேசிக் கொண்ட விஷயங்கள் பற்றியோ, அந்த வியாபார நபரே இப்போது அதிபராய் வந்துள்ளமை பற்றியோ எங்கள் எவருக்கும் அப்போது எதுவுமே தெரியாது.

அன்று பிற்பகல் பக்கத்து அறை நண்பர் இருவரும் எங்கள் அறைக்கு வந்து முதல் நாள் இரவு எம்.வி. முதலாளி கடையில் நடந்த செய்தி யாவும் ஒன்றுவிடாமல் உரையாடல் முழுவதும் கிரமமாய் சொல்லச் சொல்ல நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம்.

அன்றுடன் அவர்களது எம்.வி. கடை சல்லாப 'விஸிற்' நின்றுவிட்டது.

அதிபர் மற்றவர்களுடன் பழகுவது போன்றே அந்த இருவரிடமும் சகஜமாய்ப் பழகினார். எதையும் அவர் ஞாபகத்தில் வைத்திருந்ததாகத் தெரியவில்லை. ஓரிரு மாதத்தில் அவர்களும் அவருடன் ஒட்டிக்கொண்டனர்.

சிறந்த நிர்வாகியான, ஆளுமை மிக்க ஓர் அதிபரால்தான் இது இயலும் என்பதுதான் உண்மை.

அதிபரை மட்டுமா..?அவரது ஊரையும் சேர்த்தல்லவா இவர்கள் பாழ் படுத்தியிருந்தார்கள்!

## 'நைற் வாச்சர்'

எங்கள் ஊர்களில் கந்தவனம், வேதவனம் என்று பெயர்கள் இருப்பது போல 1960களில் மலையகப் பகுதிகளில் ஆண்களுக்கு நந்தவனம், சுகவனம், சமுத்திரம் போன்ற பெயர்களும் பெண்களுக்கு சந்தனம், குங்குமம் போன்ற பெயர்களும் வழக்கில் இருந்தன.

பொருளாதார நிலை மிகக் கஷ்டமான குடும்பத்தவரான சுகவனம் என்பவருக்கு, பாடசாலைப் பரிசோதகரின் அனுசரணையுடன் பாடசாலையின் இரவு நேரக் காவலாளியாக நியமனம் பெற்றுக் கொடுத்தார் அதிபர்.

சுகவனத்துக்கு 'ஆஸ்மா' தொந்தரவு இருந்ததால் பனியும் மழையுமான பருவகாலங்களில் அவர் இரவில் காவலாளியாகக் கடமைபுரிய இயலாதவராயிருந்தார். அக்காலங்களில் பகலில் பாடசாலை நேரத்திலேயே சில மணி நேரம் எடுபிடி வேலைகள் செய்து விட்டுச் செல்வார்.

ஒருநாள் சுகவனம் எங்களிடம் எல்லாரும் தன்னை,'டே வாச்சர்!' (DAY WATCHER) என்று அழைப்பதால் இரவு வேலையே பரவாயில்லை என்று 'நயமாகக்' குறைபட்டுக் கொண்டார்.

'டே வாச்சர்' அவருக்கு விருப்பம் இல்லாதிருந்தபோதும் அவர் பெயர் -அதாவது சுகவனம் - அவருக்கு மிக வாய்ப்பானதாக இருந்ததை நான் ஒரு சமயம் அறியக் கூடியதாய் இருந்தது.

எழுதுவினைஞர் இல்லாத பாடசாலையாதலால் ஓர் ஆசிரியரே லிகிதருக்குரிய கடமையையும் செய்து வந்தார். மாதம் முடிந்தபின் காவலாளியின் வரவு ஒப்பமிடும் பதிவேட்டைப் பார்த்து அம்மாதக் கொடுப்பனவுக்கான 'வவுச்சரைத்' தயாரிப்பார். காவலாளி அமய ஊழியராகையால் வவுச்சரில் கடமை புரிந்த திகதிகள் குறிக்கப்பட்டு கொடுப்பனவுக்குரிய நாள்கள் கணக்கெடுக்கப்படும்.

மாதத்தின் சகல நாளுமே கடமை செய்ததை வவுச்சரில் பார்த்தபோது 'சத்தியமின்மை' ஒன்று என் மனதில் பட்டது. அவரது வரவுப் பதிவேட்டைப் பார்த்தேன். ஒன்றன் கீழ் ஒன்றாகச் சகல திகதியும் எழுதப்பட்டு சுகவனம் என்று ஒப்பமும் இருந்தது.

இந்தச் சங்கதியைக் கூர்ந்து கவனித்தபோதுதான் அது எனக்குத் தென்பட்டது. ஆங்காங்கே 3 வெவ்வேறு திகதிகளில் 'சுகவீனம்' என்று இடப்பட்டிருந்தது. அந்த திகதிகளில் அவர் [illegible] அதற்கான காரணத்தைச் 'சுகவீனம்' என்று எழுதியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். சுகவனம், சுகவீனம் இரண்டுக்கும் 'வ' மீதுள்ள விசிறிச் சுழிப்பு மட்டுமே வேறுபாடாக உள்ளதால் வவுச்சர் தயாரித்த ஆசிரியர் 'சுவீனம்' என்பதை சுகவனத்தின் கையொப்பமாகக் கருதிவிட்டார் என்பது புலனாகியது.

ஆனாலும் சுகவனத்தின் மகனே பதில் காவலாளியாய் இருந்ததால் ஊதியத் தொகை முழுவதுமே சுகவனம் வீட்டுக்குரியதுதானே! அதனால் வவுச்சரில் காணப்பட்ட தவறு பற்றி நான் மௌனமாக இருந்து விட்டேன்.

தவறுக்கான காரணத்தில் நுட்பமான சிறுசுவை ஒன்று இருந்ததால் அச்சந்தர்ப்பம் என் நினைவில் நின்றுவிட்டது.

## கலைநிகழ்ச்சி

பாடசாலையில் நவராத்திரியின் இறுதிநாள் - சரஸ்வதி பூசை. பிரார்த்தனை, ஏடு தொடக்கல், பிரசாத விநியோகம்... முடிய, கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

பாட்டு, நடனங்கள் முடிந்து பலரும் அறிந்ததான பிரகலாதன் கதை நாடகமாக அரங்கேறியது. நகரின் கடை வீதி முதலாளிமாரின் குடும்பங்கள், பெற்றோர் மற்றும் வெளியார் என்று பலரும் கலை நிகழ்ச்சிகளுக்காகத் திரண்டு வந்திருந்தனர். நீளமான அந்த மண்டபம் நிரம்பி வழிந்தது.

நாடகத்தை எழுதி இயக்கிய ஆசிரியர் இரணியனாக 10ஆம் வகுப்பு மாணவன் ஒருவனையும் பிரகலாதனாக 5ஆம் வகுப்பு மாணவன் ஒருவனையும் தெள்ளி எடுத்திருந்தார். இருவருமே நல்ல குரல்வளமும்,வசன உச்சரிப்பு ஆற்றலும், தந்தையும் மகனுமான தோற்றப் பொருத்தமும் உடையவர்களாக இருந்தனர். பிரகலாதனைக் கொல்வதற்கான கொலையாளிகளும் தோற்றம்,வேஷப் பொருத்தம், நடிப்பு யாவற்றிலும் சிறந்திருந்தனர். முதல்நாள் ஒத்திகையின் போதே நாடகம் எங்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

இரணியன் தூணை வாளால் வெட்டும் போது, தூண் வெட்டுண்டு சரிய நரசிம்மம் வெளிப்படும் காட்சியமைப்பும் நுணுக்கத்தோடு சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

திரையமைப்பு, பக்க வாத்தியங்கள் சிறப்பான ஒலிவாங்கி, ஒலிபெருக்கி அமைப்புக்களுடன் நாடகம் விறுவிறுப்பாக நகர்ந்தது. எல்லாரும் மெய்ம்மறந்து பார்த்திருந்தார்கள்.

நாடகத்தின் இறுதிக் கட்டம் -


இரணியன் கோபத்தோடு கேட்கிறான்:-

"பிரகலாதா! உன் நாராயணன் இந்தத் தூணில் இருக்கிறானா?"

பிரகலாதன்:- "இப்ப இல்லை இரணியண்ணே...! அவனை இன்னும் தூணுக்குள்ள விட்டு 'செட்டப்'பண்ணலை! கொஞ்சம் அப்புறமா கேளுங் கண்ணே...!"

மண்டபத்துள் இருந்த மாணவர்களும் சனக் கூட்டமும் எழுப்பிய சிரிப்பலை ஓயவில்லை.

ஒன்றும் புரியாமல், மேடையில் நின்று திருதிருவென்று விழித்த பிரக



லாதன் மேடையிலிருந்து குதித்து ஓடிவிட்டான். எந்தத் திசையில் ஓடி மறைந்தான் என்பது எவருக்கும் தெரியவில்லை.

வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் வசனம் நினைவில் வைத்திருந்த வேறொரு மாணவனுக்கு அவசர அவசரமாக உடைகளைந்து ஒரு சால்வையைப் பஞ்சகச்சமாய்சசெருகி மேடையில் ஏற்றிவிட்டனர்.

பயத்தினால் அவனுக்கு கால்கள் இரண்டும் தாளமிட்டன... வசனம் பேச வராமல் நாக்குழறியது...சனக்கூட்டம் கண்டு பயத்தில் வெடவெடத்தான்... நாடகம் நொண்டியது!

நாடகப் பிரதியுடன் நின்ற மேல் வகுப்பு மாணவன் 'மைக்'ஒன்று வாங்கி... மறைவில் நின்று வசனம் பேசி... ஒருவாறு நாடகம் ஒப்பேற்றப்பட்டது.

இறுதிக் காட்சி பிசகிவிட்டாலும், நாடகத்தை அரங்கேற்றிய ஆசிரியருக்கு அந்த 'ஒறிஜினல்' பிரகலாதனின் திறமை மீதிருந்த அபிமானமும் பற்றும் கொஞ்சமும் குறையவில்லை.

"மேல் வகுப்பு மாணவன் கவனிக்கத் தவறிய நேரப் பிசகை அந்த ஐந்தாம் வகுப்பு மாணவன் திருத்த முயன்றான்... அவ்வளவே!" என்றார் ஆசிரியர்.

## உண்மையான உண்மை

நான் ஓய்வு பெற்ற பின்னர் - சமீபத்தில் - 1999 மே, மாதத்தில் பாடசாலைகளுக்கிடையியேயான தமிழ் மொழித்தின வலய்மட்டப் போட்டிக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் நடுவர் பணி ஒன்றுக்காக நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

அந்த மகளிர் கல்லூரியில் வெவ்வேறு மண்டபத்தில் ஒவ்வொரு துறை சார்ந்த போட்டியும் ஒரே நேரத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

போட்டிகள் யாவும் முடிவுற்றபோது 'நாட்டுக்கூத்து' நிகழ்ச்சி மாத்திரம் நாடக அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாடகத்திற்கேற்ற அமைப்பான அரங்கு, சிறப்பான ஒப்பனை, தேர்ச்சிபெற்ற பக்கவாத்தியங்கள் சகிதம் 'வெல்ல வேண்டும்' என்ற துடிப்பான ஆர்வத்துடன் மாணவர்கள் அருமையாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

எங்கள் கடமைகள் முடிந்து விடடதால் நாங்களும் அங்கே சென்று நடுவர்களின் பின்னே பார்வையாளர்களாய் அந்த மாணவக் கலைஞர்களின் நடிப்பாற்றலை ரசனையோடு பார்த்து நின்றோம். அரங்க மேடையில், அரிச்சந்திரா - மயான காண்டத்தை மாணவர்கள் உணர்ச்சிகரமாகச் செய்து காட்டினார்கள்.

தலைவிரி கோலத்தோடு லோகிதாசனைப் பிணமாய்ச் சுமந்து வந்த சந்திரமதி, மயானத்தில் மகனைககிடத்தி ஆற்றாமையால் அரற்றிப் புலம்புகிறாள். பிணத்தை எரிக்க விடாமல் தடுத்த அரிச்சந்திரன் ஈற்றில்... அவள் தன் மனைவி சந்திரமதி என்பதையும், இறந்து கிடப்பது தன் மகன் லோகிதாசன் என்பதையும் அறிந்து தாங்கொணாக் கவலையால் நெஞ்சு வெடிப்பது போன்று பெருங் குரலெடுத்துப் புலம்புகிறான். மகனின் பிணத்தருகே மண்டியிட்டு அமர்ந்து விம்மிப் பொருமிக் கதறி அழுகிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் - பார்வையாளரிடையே, ஆசிரியையான தன்தாயின் இடுப்பில உட்கார்ந்திருந்த அந்தச் சிறுவனுக்கு ஓர் உண்மையான உண்மை புரிந்து விடுகிறது.

மேடையில் அரிச்சந்திரனாக அழுகின்றதன் மாமனை நோக்கிக் கையை நீட்டி, சற்றே முன் சரிந்து உரத்துக் கத்துகிறான்:-

"சுதா மாமா...!சத்தமா அழாதைங்கோ...!அவன் இன்னுஞ் சாகயில்ல...! செத்தமாதிரி சும்மா கிடக்கிறான்...!" தாய் சிறுவனின் வாயைக் கையால் பொத்தி பிடித்துக் கொண்டார்.


நாங்கள் அனைவருமே சிரித்துவிட்டோம். சிறுவனின் வாய்மொழி, அந்த நடிப்புக்குக் கிடைத்த சிறந்த ஒரு விமர்சனம்; சிறந்த ஒரு பாராட்டு என்று மனத்துள் நினைத்துக் கொண்டேன்.

அந்த நேரம், ஏனோ எனக்கு... தெல்தோட்டை ம.வி.யில் மேடையை விட்டு இறங்கி ஓடிய பிரகலாதனின் நினைவு வந்தது. அது என் வாலிபத்தில் கிடைத்தது. இது என் ஓய்வு காலத்தில் கிடைத்தது.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# படைகளையும் நடுங்க




சுருட்டை பாம்பின் முதுகுப்புறத்தோற்றம்.




கபூன் பிடையன் (GABOON VIPER)



இரவு அடெர் (NIGHT ADDER)



பேர்சியாவிற்குரிய கொம்புள்ள பிடையன்.



ஜறறாக்குசு (JARARACUSSU) என்ற குழிப்பிடையன்.



மெக்சிக்கோவிற்குரிய மொக்கசின்- மொத்த உடலையும் மெல்லியவாலையும் கவனிக்க.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி.

ஆனால் உண்மையில் பாம்பு வகைகளில் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் கூடிய பாதிப்பை ஏற்படுத்துபவை பிடையன்களே. அதனாற்றான் போலும் தமிழ் பேசும் நல்லுல கிற்குரிய கிறெயிற்றுக்களில் (KRAITS) கொடியவற்றிற்கு புலிப்பிடையன், இரத்தப் பிடையன் என்று பெயரிட்டுள்ளார்கள்.

பிடையன்களின் விடம் குருதித்தொகு தியைப் பாதிக்கும். இவற்றின் விடபபற்கள் மேலலகின் முன்வாயில் வைக்கப்பட்டிருக்கும்; பெரியவை; அசையக் கூடிய வகையில் அல குடன் பொருத்தப்பட்டிருக்கும்; சாதாரணமாக உள்நோக்கி மடித்து வைக்கப்பட்டிருக்கும்; பாம்பு வாயைத் திறக்கும்போது இவை நிமிர்ந்து கொள்ளும். அதனால் இவை கொத்தும் போதும் (STRIKING) அதிக அளவில் விடம் ஏறும். கடிக்கும்போது (BITING) மேலும் அதிகளவில் விடம் ஏறும்.

நாகங்களுக்கு இருப்பது போல விடப் பற்களை மூடிச் சவ்வு இவற்றிற்கு இல்லை. மேலும் நாகக் குடும்பத்திற்குரிய பாம்புகளுக்கு விடப்பற்களில் உட்பக்கமாக கால்வாய் உண்டு. இதன் மூலமே விடம் பாயும். ஆனால் பிடையன்களில் பல்லுக்கு ஊடாக குழாய் போன்று கால்வாய் உண்டு . அதனால் விடம் சிந்தாமல் சிதறாமல் பாய்ச்ச வாய்ப்புண்டு; அதிக அளவில் விடமேறவும் வாய்ப்புண்டு.

பெரும்பாலான பிடையன் இனங்கள் முட்டையிடுவதில்லை. முட்டைகளைச் சூலகக்

ளவும் கூட இது உதவும். வெப்பத்தினாற் கவரப்பட்டு வரும் பாம்பு, கவர்ந்த விலங்கு எலி போன்ற சிறிய பிராணியாகவிருந்தால் பிடித்து உணவாகக் கொள்ளும்; மனிதன் போன்ற பெரிய விலங்காகவிருந்தால் எதிர் பாராமல் சில சமயங்களில் கடித்து விடவதுண்டு. இரையைத் தேடுவதற்கு இயற்கை கொடுத்த வரம், இளஞ்சூட்டுக்குருதி நிலையான விலங்குகளுக்கெல்லாம் பொதுவான பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

பிடையன்களுக்கெல்லாம் தலை முக்கோண வடிவமுள்ளதாக - அம்புத் தலை போல (ARROW HEAD) - இருக்கும்; முதுகு - வயிற்றுப்புறமாக நசுக்குப்பட்டு தட்டையாக இருக்கும்; கழுத்து ஒடுக்கப்பட்டிருப்பதனால் துலக்கமாகத் தெரியும். உடல் பருத்தது; குறு கியது; உடல் திடீரென ஒடுக்கப்பட்டு வால் தோன்றும். அதனால் வாற்பகுதி துலக்கமாகத் தெரியும். இவ்வுடலமைப்புக் காரணமாக மெய்யான பிடையன்களால் வேகமாக ஓட முடியாது; மரங்களில் ஏறமுடியாது; நீரில் நீந்த முடியாது. பிடையன்களின் முத்திரை அடையாளங்களைக் கொண்டும் நிறபேதங்களைக் கொண்டும் அவற்றை இனங்காணலாம்.

### மெய்யான பிடையன்கள் (TRUE VIPER)

முதலில் நம்நாட்டுக்குரியவற்றைக் கவனிப்போம். இவற்றுள் கொடுமையானது முத்திரைப் பிடையன் அல்லது கண்ணாடிப்பிடையன். றசல்ஸ் வைப்பர் (RUSSEL'S VIPER) என்று இதனை ஆங்கிலத்தில் அழைப்பார்கள். விஞ்

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

கான்களில் வைத்திருந்து அங்கு அவை பொரித்து குட்டிகள் வெளியேறும். இவ்வியல்பு சூற் பிள்ளை ஈனும் தன்மை (OVOVIVIPAROUS) எனப்படும். இங்ஙனம் பெற்றோருக்குரிய கவனம் (PARENTAL CARE) ஓரளவு விருத்தி அடைந்துள்ளது. [இவ்வியல்பு பாற்சுறா, கொடுக்கன், ஏபிட்டுக்கள் (அழுக்கணை) போன்ற சில விலங்குகளிலும் காணப் படுகின்றது.]


பிடையன்களை இரு வகைகளாக வகுக்கலாம். சாதாரண பிடையன்கள் அல்லது மெய்யான பிடையன்கள் (TRUE VIPERS) மற்றும் குழிப்பிடையன்கள்(PIT VIPER) .

குழிப்பிடையன்களில் பெரும்பாலானவை மர வாழ்க்கைக்குரியவை. அதனால் மர வாழ்க்கைக்குரிய விலங்குகளுக்கும் இலை குழையை உணவாகக் கொள்ளும் யானை போன்ற விலங்குகளுக்கும் இவற்றினால் பாதிப்பு ஏற்படுவதுண்டு.

-குகன்-

மேலும் இவற்றிற்கு மூக்குத் துவாரத்திற்கும் கண்ணுக்குமிடையே இரு பக்கங்களிலும் பக்கத்திற்கொன்றாக இரு குழிகளுண்டு. இது லோறியல்குழி (LOREAL PIT) என அழைக்கப்படும். இது ஓர் ஆறாவது உணர்ச்சி உறுப்பாகக் (SIXTH SENSE) கருதப்படும் வெப்பத்தை உணர இது உதவும். சூழலிலுள்ள இளஞ்சூட்டுக்கு குருதி நிலையான (WARM BLOODED) விலங்குகளை அறிந்து கொள்

ஞானப் பெயர் வைப்பீறா றசெலி(VIPERA RUSSELLI). தமிழில் விரியன் பாம்பு என்றும் இதனை அழைப்பார்கள். ஐந்து அடி நீளம் வரை வளரும். பொதுவான உடல் நிறம் மஞ்சள் கபிலநிறம். வயிற்றுப்புறம் வெண்மையானது. முதுகில் அழகான முத்திரை போன்ற அடையாளங்களுண்டு; நடுக்கோட்டுக்குரியதாக ஒரு வரிசையும், பக்கங்களுக்குரியதாக



சாதாரண ஐரோப்பிய பிடையன்.

ஒரு வரிசையும் இருக்கும். பக்கங்களுக்குரிய வரிசைகள் தனித்தனியானதாகவிருக்கும். நடுக்கோட்டுக்குரிய வரிசையின் முத்திரைகள் சில சமயங்களில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவிருப்பதுண்டு. அதிர்ச்சி ஏற்படும் போது




பாம்பு பிடிப்ப

உடலைச் சுருட்டி வளைத்து
ளும். பின் திடீரென்று எத்தி
இதனால் பாயமுடியும். இர
ஐந்தடிவரை இங்ஙனம் பாய
அடையாளங்களைக் கொ
சுலபமாக இனங்
அழகானஆனால் ஆபத்தான

நமது நாட்டில் சா
காணப்படும் மற்றொரு பிடை
ஆகும். ஆங்கி லத்தில்
பிடையன் (SAW-SCA
என்றழைப்பார்கள். விஞ்
எக்கிஸ் கறினேற்ற
CARINATUS) பொதுவான
தலையில் வெண்ணிற அம்புக்
முதுகுப்புறமாக, நடுக்கோ
வெண்ணிறமான பெரிய
ளுண்டு. (நீள்வட்டமாகவுமிரு
பக்கங்களிலும், வயிற்றுப்புறச்
மேலாக, வெண்ணிறக் கே
லைப்படுத்தப்பட்ட கபிலநிற
ளுண்டு. அதிர்ச்சி ஏற்படும்
சுருண்டு கொள்ளும். மேலு
செதில்களை உரசி ஒரு வகை
எழுப்பும். இவ்வொலி பாம்பின்
டிலும் சத்தம் கூடியதாகவிரு
வாகப் பிடையன்கள் ஊர்
போது, செதில்கள் உரசுப்படு
வகையான இரைச்சல் சத்தம்
கொண்டு இவற்றின் நடமாட்ட
கொள்ள முடியும்) சுருட்டை
ஆயினும் கடிப்பதற்குத் தய
இதன் விடம் ஆபத்தானதல்
பிரச்சினைதான். ஆனால் இற

அமெரிக்க பிடையன்களா



கிலுகிலுப்பைப் பாம்பின் கிலுக்கி (RATTLE)



வேர்-டீ-லான்ஸ் (FER-DE-LANCE) என்ற பாம்பு.



கிழக்கு அமெரிக்க வைர - கிலுகிலுப்பைப் பாம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவைக்கும் பிடையன்கள்




பாம்பு பிடிப்பவர்கள் பாம்பைக் கையாளும் முறை.

சுருட்டி வளைத்து வைத்துக்கொள்
திடீரென்று எத்திசை நோக்கியும்
பாயமுடியும். இரண்டடியிலிருந்து
இங்ஙனம் பாயமுடியும். இதன்
ங்களைக் கொண்டு இப்பாம்பை
இனங் காணமுடியும்.
னால் ஆபத்தான பாம்பு.
நாட்டில் சாதாரணமாகக்
மற்றொரு பிடையன் சுருட்டை
ங்கி லத்தில் வாட் - செதில்
(SAW-SCALED VIPER)
பார்கள். விஞ் ஞானப் பெயர்
கறினேற்றஸ் (ECHIS
US) பொதுவான நிறம் கபிலம்.
வெண்ணிற அம்புக்குக் குறியுண்டு.
மாக, நடுக்கோட்டிற்குரியதாக,
மான பெரிய வட்டப்புள்ளிக
ள்வட்டமாகவுமிருப்பதுண்டு). இரு
ம், வயிற்றுப்புறச் செதில்களுக்கு
வெண்ணிறக் கோடுகளால் எல்
ப்பட்ட கபிலநிற அரைவட்டங்க
திர்ச்சி ஏற்படும் பொழுது பாம்பு
காள்ளும். மேலும் சீறுவதுடன்
உரசி ஒரு வகையான ஒலியை
வ்வொலி பாம்பின் சீறலைக் காட்
ம் கூடியதாகவிருக்கும். (பொது
டயன்கள் ஊர்ந்து செல்லும்
தில்கள் உரசுப்படுவதனால், ஒரு
இரைச்சல் சத்தம் எழும், இதைக்
வற்றின் நடமாட்டத்தை அறிந்து
டியும்) சுருட்டை சிறியபாம்பு.
டிப்பதற்குத் தயங்குவதில்லை.
ம் ஆபத்தானதல்ல. கடித்தால்
ன். ஆனால் இறப்பு நேராது.
க பிடையன்களாகிய செப்புத்

தலையன்களும் (COPPER HEADS) பஞ்சு வாயன்களும் (COTTON MOUTHS) ஆபத்தானவை. மெக்சிக்கோவிற்குரிய மொக்கசினும் (MEXICAN MOCCASIN) ஆபத்தானது. வேர்-டீ-லான்ஸ (FER-DE-LANCE) என்ற பாம்பும் புது உலகத்திற்குரியது (அமெரிக்கா). இது மிகவும் கொடுமையானது. சாதாரண ஐரோப்பிய பிடையன்(COMMON EVROPEAN VIPER) ஐரோப்பாவிற்குரியது. மிதமான விடத் தன்மையுள்ளது;

பவ் அடேர் (PUFF ADDER) ஆப்பிரிக்காவிற்குரியது, ஓரளவு கொடிய விடமுள்ளது; இரவு அடேரும் (NIGHT ADDER) ஆபிரிக்காவிற்குரியது: பயந்த சுபாவமுள்ளது; விரைவில் சீற்றமடையவதில்லை. ஆயினும் இரவு கேபூன் பிடையனின் (GABOON VIPER) விடப்பற்கள் மிகப் பெரியவை; கொடிய விட முள்ளவை; கடித்தால் மிக விரைவாக இறப்பு ஏற்படும்; ஆயினும் இவை மென்மையான போக்குள்ளவை. கடிப்பது மிகக் குறைவு.

பேர்சியாவிற்குரிய கொம்புப்பிடையனின் (PERSIAN HORNED VIPER) தலையில்



பஞ்சுவாய் மொக்கசின் (COTTON MOU- TH MOCCASIN).

இரண்டு கொம்பு போன்ற முளைகளுண்டு. வனாந்திரத்திற்குரிய பாம்பு. அதனால் ஓரளவு விடமுள்ளது

விடமுள்ளது

**குழிப்பிடையன்கள்** (PIT VIPERS)

குழிப்பிடையன்களைப் பொறுத்தவரை இலங்கையில் மூன்று இனங்களுண்டு. அவை இரண்டு சாதிக்குரியவை. அகிஸ்றோடோன் ஹிப்னேல் (AGKISTRODON HYPNALE) பரவலாகக் காணப்படும் சிறியபாம்பு; பெரும்பாலும் நில வாழ்க்கைக்குரியது; சருகுகளின் கீழ் மறைந்து வாழும். உடல் நிறம் பல தரப்பட்டது; கபில நிறத்திலிருந்து மஞ்சள், செஞ்சிவப்பு நிறங்கள் வரை மாறுபடும்; ஆயினும் நிலையான கருமையான அடையாளங்கள் காணப்படும்.

அகிஸ்றோடான் நீப்பர் (AGKISTRODON NEPA) நிறத்தில் முன்னதிற்கு ஒப்பானது. அளவில் அதைக்காட்டிலும் சிறியது. இலங்கையில் பரவலாகக் காடுகளில் வாழும்.

திரிமெறெசூறஸ் திரிக்னோசெபாலஸ் (TRIMERESURUS TRIGONOCEPHALUS) பாம்பை ஆங்கிலத்தில் பச்சைக் குழிப்பிடையன் (GREEN PIT VIPER) என்று அழைப்பார்கள். இது மரவாழ்க்கைக்குரியது: நாலரையடி நீளம் வரை வளரக்கூடியது; மலை சார்ந்த பிரதேசங்களில் - ஆறாயிரம் அடி உயரம் வரை - காணப்படும். உடலின் பொதுவான நிறம் பச்சை. முதுகுப்புறமாக கறுப்புநிற அடையாளங்களும் அவற்றைச் சூழ மஞ்சள் நிறமும் காணப்படும்.

வட அமெரிக்காவில் பெருமளவில் மக்கள் பயப்படுவது கிலுகிலுப்பைப் பாம்பிற்குத்தான் (RATTLE SNAKE). இது பெரிதாக வளரக்கூடியது; பெரிய பற்களையுடையது; கொடிய விடத்தையுடையது; நிலவாழ்க்கைக்குரியது; சற்றும் எதிர்பாராமலே கடிக்கும் இயல்புடையது.


இதன் வால் முள்ளெலும்புகள் இளக்கமாயிருக்கும். இதைத்தான் இது கிலுக்கியாகப் பயன்படுத்தும். கிலுக்கி ஒருவித இரைச்சல் சத்தத்தைத் தோற்றுவிக்கும். பெரிதாகச் சீறுவதுடன் திடீரென்று கிலுக்கியையும் இயக்குவதால் எதிர்ப்பட்ட விலங்குகளெல்லாம் அதிர்ந்துபோய் நின்று விடும்.

கிலுகிலுப்பானுக்கு மக்கள் பெரிதும் பயந்தாலும் புஷ்மாஸ்ரர் (BUSH MASTER) தான் கூடியவிடமுள்ளது. பிடையன்களிலேயே பெரியது இதுதான். முட்டையிடுகின்ற ஒரேயொரு பிடையனும் இதுதான்.

அடர்த்தியான அமேசன் நதிக்காடுகளிலும் மரவாழ்க்கைக்குரிய குழிப்பிடையன்களுண்டு. பிறேசில் நாட்டுக் காடுகளில் காணப்படும் மரப்பாம்புகளில் பெரியவையும் கொடியவையுமாகக் கருதக்கூடிய சில இனங்களுண்டு; உதாரணமாக மத்திய அமெரிக்க மரக் குழிப்பிடையன் (CENTRAL AMERICAN TREE PIT VIPER), ஜறறாக்குசு (JARARACUSSU), ரோமிகொவ் (TOMMYGOFF). பொதுவாக மரவாழ்க்கைக்குரிய குழிப்பிடையன்களின் வால் ஆதாரத்தைப் பற்ற உதவும் (PREHENSILE TAIL).

விடமுள்ள பாம்புகளாக இருந்தாலென்ன, விடமற்ற பாம்புகளாக இருந்தாலென்ன, பாம்புகளை விரும்பி உண்ணும் மனிதர்கள் பல நாடுகளிலும் உள்ளனர். ஏன் இலங்கையிலும் கூட உள்ளனர்.


ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் மீன் சந்தை போன்று பாம்புச்சந்தைகளுமுண்டு. 'பாம்புதின்னும் ஊருக்குப்போனால் நடுமுறி எனக்கென்று கேளுங்கள்' என்ற பழமொழி அன்னியோன்னியத்திற்கு ஆரம்பப்படியாக அமையும்!



புஷ்மாஸ்ரர் (BUSHMASTER) பிடையன்களிலேயே பெரியது. முட்டையிடுகின்ற ஒரேயொரு பிடையன்.




இலங்கையின் குழிப்பிடையன்களில் ஒன்று.




பச்சைக்குழிப்பிடையன். வாலினால் கிளையைப் பற்றியிருப்பதைக் கவனிக்க.




பவ் அடேர் (PUFF ADDER)



சுருட்டை. நிற அடையாளங்களைக் கவனிக்க.



மேற்கு அமெரிக்கா வைர - முதுகு கிலுகிலுப்பைப் பாம்பு.



செப்புத்தலையன் (COPPER HEAD).



அமெரிக்க வைர - முதுகு கிலுகி
பு.



முத்திரைப்பிடையன்/கண்ணாடிப்பிடையன்/வீரியன்.



ரொமிகொவ் (TOMMY GOFF) என்ற குழிப்பிடையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**04 - 08 - 1999 இலிருந்து 10 -09 - 1999 வரை**

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | சந் |
| | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | புத வெ சூ |
| | செவ் | | |

**சட்டவரம்புக்கு அப்பாற்பட்டது அருள்நிலை. சக்திப் பிரவாகம் தரும் நல்லூர் கந்தப் பெருமானின் அருள் பொங்கும் திருவருளுக்கு வரம்பில்லை. அமைதி எங்கும் பொங்க அவர் பாதம் பணிந்து போற்றுவோம்.**

*மாற்றம்: மிருகசீரிடம் 3ஆம் பாதம் - சந்திரன் - மிதுனம் இராசியில் நிற்கும்.*

*அரசியலில் மாறிமாறி குழப்பநிலை. யுத்தநெருக்கடி திடீர் அழிவுகளுக்கு மத்தியில் பேச்சுவார்த்தைகளும இழையோடும். மாணவர்கள்,தொழிலாளர்கள் குழம்பியபடி இருப்பார்கள். இந்தியாவில், வடக்கில் ஆயத்தநிலை, யுத்த நெருக்கடி, நாடுமுழுதும் தேர்தல் சூடு, போட்டிகள் ஏற்பட்டபடிஇருக்கும். பாரதீய ஜனதாவுக்கும் - காங்கிரஸிற்கும் நல்ல வெற்றிகள் கிடைக்கும். தெற்கில் கலைச்செல்விக்கு செல்வாக்கு அதிகரிக்கும். அனுதாபஅலை முதலமைச்சர் கருணாநிதியை தடுமாற வைக்கும்.*

*உலக அரங்கில் மத்திய கிழக்கில் கொந்தளிப்புஏற்படும். மேற்குநாடுகளின் நெருக்கடிகளால் மத்திய கிழக்கு, கிழக்கு நாடுகளில் எதிர்பாராத பொருளாதார, யுத்த அழுத்தங்கள் ஏற்படும். இயற்கைப் பூகம்பம், வெள்ள அபாயம் கவலைதரும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

வேகமான உலகில் எத்தனை அழிவுகள் போட்டிகளால் திட்டமிட்டு ஏற்படுகின்றன. தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத திட்டமிட்ட நடவடிக்கைகளால் - பாதிக்கப்படுவீர்கள். சிலர் தூற்றுவார்கள். பொறுமையாகச் செயற்படவும். பொருள் சேர்ப்பதில் கவனமாக இருப்பீர்கள். எதிர்பாலார் நல்லதைச் செய்யவோ, சொல்லவோ மாட்டார்கள். தேவையற்றவிஷயங்களில் ஏன தலையிடுகின்றீர்கள்? விஷபீடைகள், வாய்வுத் தொல்லைகள், இழப்பு காயங்கள் என்பன ஏற்படும். மனப்பயம், யோசனை அதிகரிக்கலாம். பொதுக் காரியங்களில் தலையிடாதீர்கள் என்றால் கேட்கவா போகின்றீர்கள்? தலையிட்டு வேதனைப்படுவீர்கள். அரசியல் துறையினருக்கு நல்லதல்ல. விவசாயத்துறை, மருந்துத்துறை, பத்திரிகைத்துறை, செய்தித்துறை, ஆசிரியத்துறையினர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்ட நாள்:-திங்கள், புதன், வெள்ளி.*

# மகாதேவா ஜோதிடம்

## இடபம்

உலகில் அனைவருக்கும் சம உரிமை உண்டு. பிறருக்கு கஷ்டங்கள் செய்பவர்கள் தண்டனை அடைவார்கள். தொழில் ஸ்தானத்தில் தலை வணங்காமல் இதுவரை இருந்தீர்கள். ஆனால் புத்திரர்களால் கூனிக்குறுகிப் போவீர்கள். பாசத்தால் வேதனைப்பட இடமுண்டு. விதியின் சதி உண்டு. நெஞ்சுச்சளி, சலவருத்தம், கைகால் பிடிப்பு என்பன இருக்கும். நிர்வாகம், தொழில்நுட்பம், மருந்து, ரீ.வி., சினிமா, செய்தித்துறை, நகைத்துறை, புடைவைத்துறை போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும். கலைத்துறை, இசைத்துறைக்காக பொருள் செலவுகள் அதிகரிக்கும் பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்டநாள், புதன், வெள்ளி.*

## மிதுனம்

பெரியவர்கள் செய்யும் சிறுமைத் தனத்தால் அவர்கள் பிறருக்கு கெடுதி செய்வதுடன் தாமும் அழிவு, நஷ்டங்களை அடைகிறார்கள். செய்தபிழைக்கு இரங்கி, ஏங்கியாவது தீயபலனைக் குறைத்துக் கொள்ளலாம். அதனால் தப்ப இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் கலகலப்பு ஏற்படும். பக்தி சக்தியைத் தரும். சகோதரங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ ஓடியாடித் திரிவீர்கள். அரசியல்துறை, செய்தித்துறை, எழுத்து, பத்திரிகைத் துறை, குருத்துறை, போக்குவரத்துத் துறையினருக்கு அதிக மாற்றங்கள் கொடுத்துக்கொண்டிருக்கும். கடற்றுறையினர் அவசரப்படாமல் நிதானமாகத் தொழில் செய்யவும். தூரதேச இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

*அதிர்ஷ்டநாள்: புதன்.*

## கடகம்

பாசம் மிக்கவர்கள் மோசம் செய்தால் கோபம் வராமல் விடுமா? எதிர்பாலாருக்கு உதவுவீர்கள். சகோதரங்களுடன் வாக்குவாதப்படாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்பட இடமுண்டு. எதிர்பாலார்கள் குறை

# சோதிட சஞ்சீவி

சொல்லுவார்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கலாம். நெஞ்சுப்படபடப்பு, வாய்வுத் தொல்லை, கண்கூச்சம், அடிக்கடி யோசனை என்பன கொடுக்கும். அயலவர்கள் உதவி செய்தாலும் - நண்பர்களை நம்ப முடியாது. இடமாற்றங்கள் செய்யாதீர்கள். கடல்துறை, வியாபாரத்துறை, பத்திரிகைத்துறை, குருத்துறை, இரும்புத் துறை, போக்குவரத்துத்துறை சம்பந்தப்பட்டவர்கள் அதிக இலாபம் அடைவார்கள். பெரியவர்களை கனம்செய்து நடவுங்கள். அலட்சியத்தால் அவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

## சிங்கம்

மேலதிகாரிகளை காக்கா பிடித்து காரியம் சாதிப்பவர்கள் பலர். காசு கொடுத்து அலுவல் பார்ப்பவர்கள் சிலர். உண்மைப்படி நடந்து, செயற்பட்டு அடிவாங்குபவர்கள் ஒரு சிலர். எத்தனை வித்துவான்கள் இவ்வுலகில் இருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலரை தொழில் ஸ்தானத்தில் காண்பீர்கள். நியாயத்திற்காகப் போராடி உண்மைகளை அறிவீர்கள். அதில் வெற்றியும் கிடைக்கும். பொருள சிறப்பு ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். வாய்வால் நெஞ்சுநோ, முதுகு வலி, வரட்சிநிலை, கைகால் பிடிப்பு ஏற்படும். வியாபாரத்துறை, விவசாயத் துறை, தொழிநுட்பத்துறை, நிர்வாகத் துறை, கடல்துறையினருக்குப் பலவித அனுகூலங்கள் ஏற்படும். பிரயாணங்களால் நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

## கன்னி

உண்மையை எழுதுபவர்கள் பத்திரிகையாளர்கள். இவர்கள் மூச்சு நிற்கும் வரையும் எழுதிக்கொண்டுதான் இருப்பார்கள். உயிருக்குப் பயந்தால் உண்மைகளை எழுதமுடியுமா? எதையும் நீங்களும் உறுதியுடன் தொழில் ஸ்தானத்தில் நிலைநாட்ட முயற்சிப்பீர்கள். காசு இலேசில்வராது. எனவே அளவறிந்து செலவு செய்யுங்கள். கலக்கமானநிலை. பழக்கமானவர்கள் உதவி செய்வார்கள். நாரிவலி, விறைப்பு, நரம்புச்சோர்வு கொடுக்கும். சிரித்துச் சமாளிப்பது நல்லது. இடைக்கிடை கலகலப்பு இருக்கும். கோயில் வேலை, சட்டத்துறை, குருத்துறை, இரும்புத்துறை, வியாபாரத்துறை என்பனவற்றில் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். பிரயாணம் இடமாற்றங்களைத் தவிருங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள். புதன், வெள்ளி.*

## துலாம்

திட்டமிட்டு பாவத்தைச் செய்துவிட்டுச் சிலர் பழியை நல்லவர்கள் மீது சுமத்திவிடுகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருந்தாலும் முழுக்கமுழுக்க எல்லோரையும் நம்ப முடியாது. மேலதிகாரிகள் உதவாவிட்டாலும் சக நண்பர்கள் உதவுவார்கள். எதிர்ப்பாலார் புறுபுறுப்பர். ஏமாற்றம் கொடுக்கும். நரம்புத்தளர்ச்சி சிலருக்கு வரலாம். சளி, பிடிப்பு, கைகால் விறைப்பு என்பன கொடுக்கும். சிலருக்கு பிரயாண சுகம், வெளிநாட்டுச் செய்தி வரும் காலமாகும். மருத்துவத் துறை, அரசியல்துறை, பத்திரிகைத் துறை, போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை தொடர்பானவர்களுக்கு அதிக இலாபம், மாற்றங்கள் கொடுக்கும். இடமாற்றங்களைக் கண்டபடி செய்யாதீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## விருச்சிகம்

அரசனும் அரச அதிகாரிகளும் அதிகாரத்தால், சுயநலத்தால், அழிவுகள் தவறுகளைச் செய்கிறார்கள். நியாயமான கடமைகளைச் செய்பவர்களை தடுக்கின்றார்கள். ஆனால் திரும்பிச் செய்பலன் வருங்காலத்தில் அரசனோ, அதிகாரியோ தண்டனையைத் தாங்க முடியாததாக்கின்றது. எனவே தொழில் ஸ்தானத்தில் கோபத்தால் அதை இதைச் செய்துவிட்டுக் கலங்காமல் நல்லதைச் செய்துவாருங்கள். கலகலப்பான காலமாகும். செவ்வாய் உதயத்தில் இருப்பதனால் தாக்கம் அதிகமாகும். கலகம பிறந்து நியாயம் பிறக்கும். புத்தக வெளியீடு, செய்தித்தொடர்பு, நகைத்துறை, புடைவைக்கடை, எழுத்துத்துறை, கலைத் துறை, சட்டத்துறை தொடர்பானவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன், வெள்ளி.*

## தனுசு

பதற்றம், படித்தவர் - படியாதவர் என்று பார்த்தா வருகின்றது? தொழில் ஸ்தானத்தில் தடுமாற்றம் அடிக்கடி வரும். பொருள் கொடுத்து ஏமாறலாம். பிணை நின்று வாதாடலாம். மோகத்தால் பாசம் வரலாம். பாசத்தால் வேதனை தொடரலாம். இதெல்லாம் மாறிமாறி நடக்கும் காலமாகும். நாரிநோ, பிடிப்பு, உஷ்ணபீடை, வயிற்று வருத்தங்கள், வாய்வுத் தொல்லைகள் வரும். குருத்துறை, வைத்தியத்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும். தெய்வம் தெற்குப் பக்கத்தைப் பார்த்தால் - கிரகம் வடக்குப் பக்கத்தைப் பார்க்கும் என்று இருந்தால் இருதிசையிலும் எமக்குப் பாதுகாப்புத் தானே? அவர்களால் எமக்குத் தீங்கில்லாமல் இருந்தால் எவ்வளவோ மேல் அல்லவா?

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள். புதன், வெள்ளி.*

## மகரம்

குற்றம் செய்தவர்கள், குற்றத்தை உணர்ந்தவர்கள் பாவமன்னிப்புக் கேட்கும் பொழுது மன்னிப்பதுதான் தர்மம். தர்மத்தைச் சிந்திக்க மனம் வேண்டும். எல்லோருக்கும் நல்ல மனம் இருக்குமா? தொழில் ஸ்தானத்தில் வரும் தவறுகளை மன்னித்துவிடுங்கள்.மனித வாழ்க்கையில் மன்னிப்புக்கு வேதம், ஆகமத்திலிருந்து வரவேண்டும் என்னில்லை. எமது மனங்களிலிருந்து மன்னிப்பு வரவேண்டும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை, பொருள் கஷ்டம், வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். தொழில்நுட்பவேலை, வியாபாரம், பிரயாணம், வாகனத்துறை என்பனவற்றுடன் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். பிணிகாரனான இராகு உங்கள் இராசியைப் பார்ப்பதனால் அடிக்கடி படபடப்பு, மனச்சோர்வு வரும். இராகு, கேதுவை வேண்டுதல் செய்து ஏழைக்குத் தான தர்மம் கொடுக்கவும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, திங்கள், வெள்ளி.*

## கும்பம்

எண்ணக்குவியல், இன்பக்கிளுகிளுப்பு அடிக்கடி ஏற்பட்டு துன்ப வேதனையைத் தரும். தொழில் பீடத்தில் எதிரிகள் பாதகமாகத் திட்டமிட்டு இலாபத்தைக் குறைப்பார்கள். கண்டும் காணாமல் இருப்பீர்கள். காசு படிப்படியாகவும் வரலாம். திடீரெனவும் வரலாம். சகோதரங்கள், பெற்றோரின் பேச்சுக்கு ஆளாவீர்கள். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். சமியாக் குணம், கைகால்பிடிப்பு, நாரிநோ, வாய்வுத்தொல்லை என்பன ஏற்படி இருக்கும். அரசியல்துறை, சட்டத் துறை, தொழில்துறை, வியாபாரத் துறை, விவசாயத்துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் அடிக்கடி கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். வெளிநாட்டுச் செய்திகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.*

## மீனம்

கலியாணப் பொருத்தத்தில் ஒவ்வொரு சாஸ்திரிகளும் ஒவ்வொரு மாதிரிப் பார்ப்பதனால் பல குழப்பங்கள் வருவது உண்மைதான். சரியாக, நேர்மையாக உண்மை அறிவுடன் பார்க்கும் பொருத்தங்களை மக்கள் எடுத்துக் கொள்ளல் வேண்டும். அது போல் சரியாக நேர்மையுடன் உழைப்பீர்கள். ஆனால் சரியான ஊதியம் மட்டும் கிடைக்காது. தொழில் ஸ்தானத்தில் போட்டிகளால் பயம்,வேதனை என்பன வரச்செய்யும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு அடிக்கடி ஆளாக நேரிட்டு வருந்துவீர்கள். வாய்வுத் தொல்லை, கைகால்பிடிப்பு, சளிக் காய்ச்சல், தடுமாற்றம், பித்த அதிகரிப்பால் தலைச்சுற்று என்பன கொடுக்கும். உணர்ச்சி, கொந்தளிப்பு, பணப்பிரச்சினை யோசனை தரும். கடல் துறை, பிரயாணத்துறை, குருத்துறை, சட்டத்துறையினருக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, திங்கள்.*

# பல்லுயிர்க்கும் தாய் அன்னார்

பழந் தமிழ் புலவோர் அனைத்து மக்களும் அறத்தொடு கூடிய நல்வாழ்வை மேற்கொண்டு இன்பங்காண வேண்டுமென்று விரும்பினர். அமையம் வாய்க்கும் வழியெல்லாம், அறத்தொடு கூடிய நல்லொழுக்கத்தை வற்புறுத்தினர். வானக வாழ்வை வையகத்தே நிறுவ பெரிதும் விழைந்தனர். வள்ளுவப் பெருந்தகையார், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என மொழிந்து வைத்தார்.

சங்ககாலச் சான்றோர்களும் அவர் பின்வந்த பெரியோர்களும் 'ஆற்றின் ஒழுக்கு அறண் இழுக்கா இல்வாழ்வை' மக்களிடையே கண்டு களிப்பெய்துதலைக் தம் தலையாய கடனாகக் கொண்டிருந்தனர்.

சங்கம் மருவிய கீழ்க்கணக்கு நூல்களைப்பற்றி முன்பு தெரிந்திருக்கின்றோம். அவற்றுள் ஏலாதி என்பதும் ஒன்று. அதனை இயற்றியவர் கணி மேதையார். அவர் கணிமேதாவியார் என்று அழைக்கப்படுவதும் உண்டு.

செந்தமிழ் மாந்தர் சித்த மருத்துவத்துறையில் ஏற்றம் படைத்து நின்றவர்.அவர் கண்ட உயரிய மருந்துகளுள் ஏலாதி என்பதும் ஒன்று. தங்கம் முதலிய பொருள்களைக் கொண்டு அதனை இயற்றுவர். ஏலாதி கொடிய கொடிய உடற்பிணிகளைப் போக்கவல்லது. எங்கள் கணிமேதையார் உடற்பிணிக்கன்றி உயிர் பிணிக்கும் மருந்து கூறுகிறார். அவர் பலபல உயிர்களுக்கு தாயன்னாரைப் பற்றி என்ன கூறுகின்றார் என்று காண்போம்.

**தேன்கூடு**

தாய் என்னும் சொல் மிகமிக உயர்ந்தது. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்று பால வயதில் படித்தோம். மணிவாசகப் பெருமான் இறைவனைத் 'தாயேயாகி வளர்த்தனை போற்றி' என்று வாய்மொழிகின்றார். தொடர்ந்து, 'தாயாய் முலையைத் தருவானே' என்றும் 'தாயிற் சிறந்த தயவான தத்துவனே' என்றும் பிறவாறுமெல்லாம் கூறுவார். மூவர் முதலிகளும் இறைவனைத் தாயாகவே கண்டனர். பிற சான்றோரும் தாய்க்கு மகத்துவம் நல்குவர். நாம் காணும் அன்னையர் தங்குடும்பத்துடன் மட்டும் பெரும்பாலும் நின்றுவிடுகின்றனர். பரம்பரை என்னும் கயிறு இற்று விடாமல், புதல்வரை ஈன்று புறந்தந்து பணிபுரிகின்றனர். தாயானவள் அன்பின் கொள்கலம். அருளின் விளக்கம். தன் குழந்தைக்காக அவள் பத்தியம் காத்து மருந்துண்கிறாள். சேய்குற்ற வருத்தம் பொருளாய் ஏங்குகின்றாள். சேய் சிரித்தால் தான் சிரிக்கின்றாள். நிற்க. புலவர் கணிமேதையார், ஒருயிர்க்கன்றி பல்லுயிர்க்கும் தாயன்ன ஒருவரை எம்முன் நிறுத்துகின்றார். ஆம் அவரிடத்திலே, நிறையுடைமை, நீர்மையுடைமை, கொடையுடைமை, பொறையுடைமை, பொய்மையொடு புலால் மறுத்தல் ஆதி பொருவரும் குணநலங்கள் குடிகொண்டு இருக்குமாம்.

நிறையுடமை என்றால் என்ன? ஆசிரியர் நக்கீரர் 'காப்பன காத்து, கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்' என்பர். இதனை

**சிந்திப்போம் செயற்படுவோம்**

எளிமையாகக் கூறுவதாயின் உள்ளத்தை தீய வழிகளில் செல்லவிடாது தடுத்தல் என்று கூறலாம் இவ்வரிய குணத்தை எவரும் எந்த நேரததிலும் வாழ்வில் கடைப்பிடித்தல் வேண்டும்.

நீர்மை,உடமையைக் காண்போம். நீர்மை, தன்மை அது இனியசுபாவம். இனியசுபாவம் என்பது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் நீக்கி வாழ்வதாம். அழுக்காறாத இவை மனத்தை மாசுபடுத்தும். ஒருவர் செந்தண்மை பூண்டொழுக மனமாசற்றிருத்தல் வேண்டும். இனி நீர்மை என்பதற்கு ஒப்புரவு என்று பொருள்கோடலும் உண்டு.

அடுத்துவருவது கொடையுடமை. கொடையென்பது ஈகை. அது வறியார்க்கு ஒன்று கொடுத்து மகிழ்தலாகும். இந்நிலை முன்னைத் தவத்தாலேதான் வரும் என்பர். 'இரப்பார்க் கொன்று ஈயாமை அச்சம்' என்று நாலடியார் கூறும் பண்டைய கொடை வள்ளல்கள் ஈகைத்திறத்தால் பார் உள்ளளவும் பாராட்டப்படுவர்.

இனி, பொறையுடைமையை நோக்குவோம். ஒருவன் தனக்குப் பிழை செய்த வழி அதனைப் பொறுத்தல் - தாங்கிக் கொள்ளுதல் பொறையுடைமையாகும். தன்னைத் தோண்டுவாரை நிலம் தாங்குகின்றதே! அதே போல் தன்னை இகழ்வாரை பொறுக்க வேண்டும் என்பது நூல் துணிபு. பொறுத்தார் உலகாழ்வார்' என்பது பொன்மொழி.

பொய் பேசுதலும் புலன் மறுத்தலும் தீது பயப்பன என்பது நாம் அறிந்தனவே! வள்ளுவர் பெருமான் நிறையக் கூறியுள்ளார். பொய்யாமை என்னும் அறத்தினைக் கடைப்பிடிக்கும் ஒருவன் பிற அறங்களைச் செய்ய வேண்டுவதில்லை என மேலோர் கூறுவர்.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாஉயிரும் தொழும்' என்பது தமிழ் மறையாகும். எவரொருவர், நிறை, நீர்மை, கொடை, பொறை, வாய்மை, புலால் மறுத்தல் முதலியன உடையராய் இருக்கின்றாரோ அவர், தாயை ஒத்தவராவர். இனி பாடலை நோக்குவோம்.

நிறையுடைமை, நீர்மை உடைமை கொடையே
பொறையுடமை பொய்மை புலாற்கண் - மறையுடமை
வேயன்ன தோளாய்! இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்னன் என்னத்தகும் **ஏலாதி 6.**

(தொடரும்)

–சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மரணமும் சில மனிதர்களும்

அம்மம்மாவிற்கு நிலை கொள்ளாத மகிழ்ச்சியாக இருந்தது. கண்களூடு கரையப் பார்த்த கண்ணீர் வேறு.

"இந்தாடியம்மா, சாப்பிடு..... இதெல்லாம் அப்ப கொம்மா, தேடித் தேடிக் கொண்டந்து நட்டது தெரியுமே.... பார்..... இப்ப அது காய் ...க்கிற நேரம் அனுபவிக்கக் கொடுப்பினை இல்லை..."

நன்கு முற்றிப் பருத்திருந்த கொய்யாக்காய்களை நடுங்கும் விரல்களால் நயனியிடம் கொடுத்தபடி அவள் கைகளைத் தடவி அங்கலாய்த்தாள்.

"என்ரை குஞ்சு... எப்படி வளந்திட்டாய்...? பாத்து எவ்வளவு காலம்...?"

ராசாத்தி ஆவலோடு அக்காவின் மகளைப் பார்த்தாள். நெடுநாளினபிறகு வந்திருந்த பெறாமகளைப் பார்த்த சந்தோசத்தைக் காட்டிலும் அவள் கண்களில் கலக்கம் அதிகம் தெரிந்தது. அக்காவின் குடும்பம் வன்னிக்குப் புறப்பட்டதற்கான காரணம் அவளுக்குத் தெரியும். அதற்குப் பிறகும் மகிழ்வதெப்படி..?

குமரனும், வேலனும் தம் ஒன்றுவிட்ட அக்காவைக கண்டுவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்க, ராசாத்தி 'உஸ்....' என்று வாயில் விரல் வைத்து அவர்களை அடக்கினாள்.

நயனிக்கு ஏற்கனவே அம்மம்மாவில் பாசம் வேறு....'அம்மிம்மா' 'அம்மிம்மா' என்று பின்னாலேயே திரிந்தாள்.

"இதென்ன அம்மிம்மா காலெல்லாம் நிகம் பெரிசா வளந்திட்டுது. இருங்கோ நான் வெட்டி விடுறன்..." என்று சொல்லி கச்சிதமாய் நகங்களை வெட்டிவிட்டாள்.

அம்மம்மா மனங்குளிர்ந்து போய் பேத்தியைப் பார்த்தா.

"இனி இந்த நிமிசமெண்டாலும் சாகலாம்...."

"இதென்ன கதை அம்மிம்மா...." அவள் சிணுங்கியபடி முகம்சுழித்தாள்.

"சித்தப்பா எங்கை சித்தி?" ஞாயிற்றுக்கிழமையின் நினைவை மனதில் உள்வாங்கியபடி நயனி கேட்டாள்.

"ரவுணுக்குத்தான் போட்டார். இனி வந்திடுவார்..." என்றபடியே ராசாத்தி குமரனைக் கூப்பிட்டாள்.

"டேய் தம்பி, ஒருக்கா அந்தச் சந்திக்கடைக்குப் போட்டுவா அப்பு..."

"எனக்கப்பிடியொண்டும் விசேசமா வேண்டாம். நீங்கள் சாப்பிட்டுக் குடிக்கிறதே எனக்கும் காணும்...."

குமரனை அனுப்பிய சித்தியின் மன ஓட்டத்தை உணர்ந்து நயனி சொன்னாள்.

"சும்மா இரு நயனி, வராதனி வந்திருக்கிறாய்.... ஒழுங்காச் சாப்பிட்டுக் குடிச்சிருப்பியோ...?"

அம்மம்மாவின் கைப்பிடிக்குள் அடங்கியபடியே கதைத்துக் கொண்டிருந்த நயனி அம்ம்மாவின் கைகளை விலக்கிவிட்டு மெல்ல எழும்பிவந்தாள்.

"சித்தி...."

ராசாத்தி என்ன என்பது போல் ஏறிட்டாள்.

நயனி ஒன்றும் சொல்லாமலே சித்தியின் கண்களைப் பார்த்தபடி நின்றாள்.

"என்ன நயனி... என்ன கஷ்ரம் உனக்கு...?"

"ஒண்டுமில்லைச் சித்தி.... நான் இஞ்சை வந்து நிக்கிறதாலை உங்களுக்குக் கரைச்சல் ஒண்டும்...." அவள் முடிக்குமுன் சட்டென்று வாயை மூடினாள் ராசாத்தி.

"நீ.... எங்கட குடும்பத்துப்பிள்ளை. இதுவே குமரனோ, வேலனோவாய் இருந்திருந்தால் எங்களாலை மறுக்க ஏலுமே... ஆனா, நீ கவனம் நயனி. இந்த நேரம் உன்னைப் பத்திரமா வைச்சிருந்து, உன்ரை அப்பா, அம்மாட்டைத் திருப்பி அனுப்புவமோ எண்ட கவலைதான் நயனி....."

"நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்படாதையுங்கோ சித்தி. ஆனா நான் உங்களுக்கும் கரைச்சல் தர மாட்டன். இரண்டு, மூண்டு நாளிலை நான் போடுவன் சித்தி..."

"இப்ப வேறு கதையள் வேண்டாம். அவள் ஆறுதலாக் கொஞ்சம் இருக்கட்டும்..."

அம்மம்மா அடுப்படிக்குள் போய் எலுமிச்சப்பழம் கரைத்து வந்து பேத்திக்கு ஊட்டிவிட்டார்.

"எனக்கு எங்கடை வீட்டுக் கிணத்தடியிலை ஆசைதீர முழுகவேணும் போலை கிடக்கு...."

நயனி ஆசையோடு பழைய சனிக்கிழமை முழுக்குகளை மனதில் அசை போட்டாள்.

சின்ன வயதில் இந்த அம்மம்மா சனிக்கிழமை தோறும் தலை நிறைய எண்ணெய்அப்பி, ஊறவிட்டு அரைத்து வைத்த வெந்தயமும், சீயாக்காயும் தேய்த்துக் கதறக்கதற முழுக வார்ப்பது ஞாபகம் வந்தது.

சித்தி சீயக்காய் அவிப்பதற்காக உள்ளே போக, நயனி அம்மம்மாவின் மடியில் தலை சாய்த்தாள்.

"அம்மிம்மா....."

"என்ன பிள்ளை....?"

"எனக்கு முந்தி நீங்கள் சீயக்காய் தேய்க்கிற மாதிரி இனி எப்ப தேய்ப்பீங்களோ...?"

அம்மம்மா நடுங்கும் விரல்களால் அவளது தலைமயிரைக் கோதிவிட்டா.

"ஏன் எனக்கென்ன, நானே இண்டைக்கும் தேய்க்கிறன்..."

"வேண்டாம் அம்மிம்மா, உங்களாலை ஏலா..."

கொஞ்ச நேரம் பேத்தியின் முகத்தைப்பார்த்துத் தடவியபடியிருந்த அம்மம்மா சிறிது நேரத்தின்பின் மெல்லக் கேட்டா.

"நீ ஏன் பிள்ளை என்னை விட்டுட்டுப் போனனி..?"

நயனி தொண்டைக்குள் வலித்த வலியை கஷ்ரப்பட்டு விழுங்கியவாறே கண்களை மெதுவாக மூடிக்கொண்டாள்.

"ஏனடி இப்பிடிச் செய்தனி, இனியாவது விட்டிட்டுப் போகாதை என்ரை செல்லம்..."

அவள் ஒன்றும் பேசாதிருந்தாள்.

"அம்மாவைப் போய்ப்பாத்தியே அங்கை..."

"ம்...."

"என்ன மாதிரியங்கை..."

"சரியான கஷ்ரம்தான்...."

"கொண்ணன அங்காலை வெளிலை போறதுக்கு போனவனெல்லே... போய்ச் சேத்திட்டானே..."

"இல்லை இன்னும் கொழும்பிலை தான் நிக்கிறார்..."

"நீயும் ஓமெண்டிருந்தியெண்டா அவன் தீபன் சுவிசுக்கு உன்னை எடுப்பிச்சிருப்பான். நீதான் அதுக்கிடையிலை...."

"அம்மிம்மா...."

"என்ன செல்லம்?"

"நீங்கள் ஏன் அம்மிம்மா, சனமெல்லாம் இடம்பெயர்ந்து சாவச்சேரிக்குப் போகேக்கை போகேல்லை...."

"இது நான் பிறந்து வளர்ந்த மண். உன்ரை தாத்தாவோடை சேர்ந்து வாழ்ந்த இந்த மண்ணை விட்டு நான் போகன். போறதெண்டாலும் என்ரை சாவுக்குப் பிறகுதான்....."

"அது மாதிரித்தானம்மிம்மா எனக்கும். நான் பிறந்த இந்த மண்ணை அவலத்திலை விட்டிட்டு நான் மட்டும் தப்பிப்போக எனக்குப பிடிக்கேல்லை..."

அம்மம்மா விக்கித்துப் போய் நின்றாள்.

இவளோடு வாய்கொடுக்க முடியாது. சரியான வாயாடி. முன்பெல்லாம் உரத்தகுரலில் நியாயத்திற்கு வாதாடுவாள் அவள். இப்போது...... அவள் குரல் அடங்கி விட்டிருந்தது. ஆனாலும் உறுதி இருந்தது. அவள் மனதிற்குள் ஓடிய தீவிரம் என்னவென்பதை எளிதில் புரியமுடியாதிருந்தது.

சித்தி அடுக்களை வாயிலிலிருந்து எட்டிப்பார்த்தாள். அவள் பார்வையில் தவிப்புக் கலந்திருந்தது. அடிக்கடி நடத்தப்படுகின்ற சுற்றி வளைப்புகள் குறித்து அவள்அஞ்ச வேண்டியிருந்தது.

"நயனியக்கா...." என்று குதித்தபடி வந்த குமரனை சித்தி பெரும்பாடுபட்டு அடக்கவேண்டி வந்தது.

"உடுப்பை மாத்து நயனி, நான் சீயக்காய் அரைச்சு வாறன்...." என்றபடியே சீயக்காய் அரைத்த சித்தி கிணற்றடியில் நயனிக்குச் சீயக்காய் தேய்த்தும் விட்டாள். அந்த வேளையில் கிணற்றடியைச் சுற்றியிருந்த வேலிகள் இன்னும் சற்று உயரமாய் இருந்திருக்கக் கூடாதோவென்று மனதினுள் ஏங்கினாள்.

வேலிக் கதிகாலாயிருந்த பூவரசு பூக்களை வஞ்சகமில்லாமல் பூத்திருந்தது. அந்தப் பூவரசம் பூவொன்றில் நீலநிறவண்ணத்துப்பூச்சி செட்டை அடித்துப் படபடத்துக் கொண்டிருந்தது.

'நல்ல வடிவான வண்ணாதிப் பூச்சி...' மனதுக்குள் ரசித்தபடியே சுடுநீரும் சீயக்காயும் கலந்து, சித்தி தேய்துவிட்ட இதத்தில் முன்பு மாதிரியே கண்களை இறுக மூடிக் கொண்டாள் நயனி. கண்களுக்குள் காட்சிகள் விரிந்தன.

குமரன், வேலன், வதனி, உதயா, திவாகர் என்று எல்லாரும் அந்த வீட்டில் சொந்தங்களோடு வசித்திருந்த போது எவ்வளவு குதூகலமாய் இருந்தது?

சந்தோஷமாய் சின்னஞ்சிறிசுகளாய் ஆர்ப்பரித்து விளையாடி.....

இந்தக் கூடு குலைந்தது எப்படி...?

இந்த அம்மம்மாவோடு சித்தி குடும்பம் மட்டும்தானே இப்போது இருக்கிறது. இங்கே இவர்கள்.... அங்கே அம்மா, அப்பா, அத்தை, மாமா.... என்று எல்லோரும் பிரிந்திருக்க.... இன்னும் என்னென்ன கஷ்ரம் வருமோ?


அங்கேகூட கடைசியாய்ப் போன போது அம்மம்மாவைப் போய்ப் பார்க்கச் சொல்லி அம்மா சொன்னது ஞாபகம்....

இந்த அம்மம்மாவும் தாத்தாவும் சின்னனில் எவ்வளவு கதை சொன்னார்கள். இந்த உறவுகளையெல்லாம் பிரிவதென்றால்....

இமைகளை ஒரு நீர்த்திரை உடைத்துக்கொண்டு கொப்புளிக்க, நெற்றியில் அணையாக ஒரு கரத்தைச் சித்தி பிடித்துக்கொண்டிருந்த போதிலும் கன்னக்கரையோரம் வழிந்த சில சீயாக்காய்த் துளிகள் திறந்த இமைகளுக்கிடையில சிக்கிக்கொள்ள.... அவளது கட்டுப்பாட்டையும் மீறி தலை இருபுறமும் சிலிர்த்தது.

"என்ன நயனி..... கண்ணிலை பட்டுட்டுதோ..." சித்தி கவனமாய், பக்கத்தில் வைத்திருந்த தண்ணீரைக் கிண்ணத்தில் மொண்டு கொடுக்க கண்களில் அடித்துக் கண்ணீரைக் கழுவினாள் நயனி.

கண்ணீர்..... எவ்வளவு காலமாய்க் கட்டுப்படுத்தி வைத்திருந்த கண்ணீர்... ஒரு நிமிடப் பொழுதுள் கட்டுப்பாடிழுந்து கொட்டுவதென்றால்.... சித்திக்குத் தெரியாமல் முகத்தைக் கழுவுவது சுலபமாயிருந்தது. நல்ல வேளை கண்ணீருக்கும், தண்ணீருக்கும் சுவையைத் தவிர வேறெவற்றிலும் பேதம் காணமுடியாதது அவளுக்குத் திருப்தியாயிருந்தது.



தண்ணீர் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துமென்பது எவ்வளவு உண்மை! இரண்டு வாளி தண்ணீரை தலைக்கு ஊற்றிக் கொண்ட பிறகு மனதை இறுக்கிய உணர்ச்சிகள் இளகித் தளர்ந்துவிட ஒரு புத்துணர்ச்சி உடலெங்கும் பரவிட, முந்தைய காலங்களைப் போலவே அந்த முழுக்கையும் ஒரு ரசனைத்தனத்தோடு நீண்ட நேரம் செலவிட்டு முடித்து விட்டு வந்த போது சித்தி தலைதுவட்டுவதற்குத் தயாராக உலர்த்திய துவாயோடு காத்திருந்தாள். சித்திக்கு வாகாகத் தலையைக் கொடுக்கையில் அந்தப பரிவுக்கு இதமாக மீண்டும் மனம் கனக்கத் துவங்கிற்று. அம்மம்மா அடுப்புத் தணலை சாம்பிராணித்தட்டில் வாரிக் கொட்டிக்கொண்டுவர பக்கத்திலேயே சாம்பிராணித்தூள் பையோடு வேலனும் அவளைச் சூழ்ந்தார்கள்.

இறுகத்தட்டி, ஈரத்தைப் போக்கிவிட்டு சித்திநகர, சாம்பிராணித் தூளைத் தணலில் போட்டு பேத்தியின் கூந்தலுக்கருகே புகையை ஊடுருவவிட்டா அம்மம்மா.

"நல்ல வேளை இந்த அருமந்த தலைமயிரை நீ வெட்டேல்லை...." அம்மம்மாவின் வாய் மெல்ல முணுமுணுத்தது.

நயனி ஒன்றும் சொல்லாமலே கூந்தலை சீவிக்கொண்டிருந்தாள். வெட்டியிருக்கலாமோ.....? வெட்டியிருந்தால் இந்தச் சாம்பிராணிப் புகை போட்டிருக்க முடியாது. இப்படிப் பாசத்தைப் பொழிகின்றார்களே என்று உள்ளுக்குள் உருகிவழியவும் தேவையில்லை.

"என்னடா குமரா..."ஒன்றுமே பேசாமல் தன் மெலிந்து உயர்ந்த தோற்றத்தையும், தலைமயிரையும் பார்த்துக் கொண்டிருந்த தம்பியைப் பார்த்துக் கேட்டாள்.

"நீங்கள் நல்ல வடிவு. நயனியக்கா... பேசாமல் சுவிசுக்குப் போயிருக்கலாம்..."

சட்டென அவளிடத்தில் குறும்பு எட்டிப்பார்த்தது.

"அப்பிடியோ? என்ரை வடிவு இஞ்சை எடுபடாமத்தான் சுவிசுக்குத் தள்ளப் பாக்கிறியோ...?"

"ஐயய்யோ, அப்பிடி இல்லையக்கா, சிம்ரான் மாதிரியக்கா நீங்கள்..."

"சிம்ரான் மாதிரியோ?" எதிலோ தோற்றுவிட்டது மாதிரி அவளுக்கு ஓர் உணர்ச்சி தோன்றிற்று.

இந்தச் சின்னவன் முந்திய எல்லாவற்றையும் மறந்து சிம்ரானை அடையாளம் காண்கிற அளவுக்கு, அவனை சினிமா வியாபித்திருக்கிறதா..? அப்பிடியென்றால் இந்த மண்ணிலிருப்பவர்களுக்கு ஒரு மயக்கத்தைக் காட்டிவிட்டால் போதுமா? மதுவுண்ட மந்திகளாய் [illegible] கள்? இதிலே பிரிந்துபோன பழைய உறவுகளை நினைப்பது எங்ஙனம்..?

"படம் பாப்பியாடா...?"

"ம்...ஆனா அப்பா நெடுகப் பாக்க விடுறதில்லை..."

கொஞ்சம் பரவாயில்லைப் போலிருந்தது. ஆனாலும் நெஞ்சு வலித்தது. ஒருகாலம் இருந்தது - இங்கு ஒரு தமிழ்க்கலாசாரம் மணக்க... மணக்க அவள் யாழ்ப்பாணம் வருகிறபோது எவ்வளவு ஆவலோடு சொந்தமண் என்கிற பிடிப்போடு வந்தாள். எல்லாம் பற்றற்றுக் கழன்றது மாதிரி...

சித்தப்பா வந்துவிட்டார். நெற்றி நிறைய திருநீறை அம்மம்மா பூசிவிட்டுக் கும்பிடு பிள்ளை என்றபோதும் அவளுக்கு சித்தப்பாவோடு கதைக்க வேண்டும் என்ற அவசரத்தில் இறை நினைப்பில் மனம் ஒன்றவில்லை. என்றாலும் சோலையடி முருகன் கண்ணுக்குள் நின்றான்.

"இஞ்சை வந்திட்டும் முருகனைக் காணாமல் போறதென்டால அது ஏலாது. ஒருக்கா சோலையடிக்குப் போகவேணும்..."அவள் அம்மம்மாவுக்குக் கேட்க முணுமுணுத்தாள்.

"சோலையடிக்கோ..? நீயோ..?தயவு செய்து வீட்டாலை வெளிக்கிடாதையம்மா. முருகனுக்குத் தெரியும் உன்னைப்பற்றி. நீ வரேல்லையெண்டு கோவிக்கமாட்டான் முருகன். வீட்டிலையே இருந்து கும்பிடு..."

அம்மாவுக்கு அந்த ஊரைப்பற்றித் தெரியும். ஊருக்குள் அரசல் புரசலாய் கதை பரவினாலும் தன் பேத்தியைச் சூழவுள்ள அபாயத்திலிருந்து அவளைக் காப்பாற்றியாக வேண்டுமென்ற வேகத்தில் பேசினா.

"சரி அம்மம்மா... நான போகேல்லை..." என்று மனம் இல்லாமலே உரைத்து விட்டு சித்தப்பாவை நாடிப்போனாள் நயனி.

ஈரங்காயமல் விரித்த கூந்தலோடு, தன்னை நோக்கி வந்த மகளைப் பார்த்ததும் பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, கண்ணாடியை ஒரு முறை கண்களுக்கு மேலால் உயர்த்திப் பார்த்தபடி "வா நயனி,எப்ப வந்தனி...?" என்று வரவேற்றார் சித்தப்பா...

"என்ன சித்தப்பா யாழ்ப்பாணம் இப்படி மாறிப்போச்சு...?"

சித்தப்பா ஒருவேதனைச் சிரிப்பை உதிர்தார்.

**தாட்சாயணி**

தமிழாசிரியரான சித்தப்பாவின் தர்க்கரீதியான கதைகள் அவளுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் சித்தப்பாவோடு பேசிக் கொண்டேயிருக்கலாம் போல் தோன்றுவதுமுண்டு.

"ஒவ்வொரு நாடும், நகரமும் கூட சிலசில குறிப்பிட்ட காலங்களைக் கடந்துதான் நயனி செல்லவேண்டியிருக்குது. அதிலை யாழ்ப்பாணத்துக்கு இதுநல்லகாலமோ...?கெட்ட காலமோ..? எல்லாம் அவரவர் மனதைப் பொறுத்தது நயனி...!"

இப்படிச் சொன்னவர் அவளது மனதைத் துருவ முயலவில்லை. அவருக்கு விளங்கும். இளம் உள்ளங்களைப் புரிகிறசக்தி அவருக்குக் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. அதனால்தானோ அவரால பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுக்காமலும் அதிகம் கண்டிப்புக் காட்டாமலும் வளர்க்க முடிகிறது?

"முந்தி இருந்ததைக் காட்டிலும் மெலிஞ்சு போனாயம்மா..."

"நானோ...?"அவள் லேசாய்ச் சிரித்தாள்.

அப்படியே சித்தப்பா மேலும் பேசிக் கொண்டு போனார். அவளுக்கு மனதிலிருக்கிற எல்லாவற்றையுமே கொட்டிவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் அவள் தன் மனத்திற்கும் கொஞ்சம் அணைபோட வேண்டியிருந்தது.

அன்று சித்தியின் சாப்பாடு அவளுக்கு மிகவும் சுவையாயிருந்தது. அம்மம்மாதான் சோறு குழைத்துப் பெட்டிவிட்டா.

ஆறஅமர்ந்து வீட்டு சுகத்தை சந்தோஷமாய் அனுபவித்துச் சிரித்தாள் அவள். தம்பிகளோடு வாயடித்தாள். இனிப்பு செய்யப் போவதாய்ச் சொல்லிக் கொஞ்சம் நேரம் அடுப்போடு மாரடித்து தேங்காய்பூ இனிப்புச் செய்து வந்து எல்லோருக்கும் கொடுத்தாள். தானும் எச்சில் ஊறச் சாப்பிட்டாள். இடையிடையே தீவிரமாய் ஒரு யோசனை. மறுபடி கலகலப்பாகி விட்டாள்.

இரண்டு நாள்வரை இனிமையாகவே சென்றது. அப்படியும் எல்லோரிடமும் ஒரு கலக்கம்...

அடுத்தநாள் எல்லோரும் நிற்கின்ற சமயத்தில் புறப்படுவதற்கான ஆயத்தங்களுடன் அவள் வெளியே வந்தாள்.

"நா...ன்....போகப் போ..றன்..."

பொதுவாய்ச் சொன்னாள்.

எல்லார் முகத்திலும் அதிர்ச்சி. அந்தக் கலக்கம் விலகியிருந்தாலும் ஒரு கவலை முகத்தில் படர்ந்தது.

"எங்கை போவாய்..?"

"போக வேண்டிய இடத்துக்கு..."

"போகப் போ...றியோ...?" அம்மம்மாவின் குரல் வாய்க்குள்ளேயே எழுந்து அடங்கியது.

"சித்தி...நான் போறன்..."

"போறன் எண்டு சொல்லாதை போகப்போறன் எண்டு சொல்லு..."

சித்தியின் குரலை மீறி அவளிடம் ஒரு வறண்ட சிரிப்பு.

"கவனமாப் படியுங்கோ, படம் பாக்காமல்..."

அக்காவின் வார்த்தைக்குப் பதில் சொல்லமாட்டாமல் அவர்கள் நின்றிருக்க....

"போட்டு வாம்மா கவனமா..." சித்தப்பாவின் மென்மையான குரல் அவளை வழியனுப்பியது.

அவள் போய்விட்டாள்.

அம்மம்மா வாசல்படியோடு அப்படியே சாய்ந்து விட்டார்.

* * *

"நான் நம்பன்...!" அம்மம்மாதான் கிறீச்சிட்ட குரலில் முதலில் கத்தினா...

"அம்மா, கொஞ்சம் மெல்லமா... மெல்லமா... எங்களுக்கும் ரெண்டு இளம் பெடியள். இருக்கிறாங்கள்..."

ராசாத்தி வாய்க்குள் விக்கியபடி மெல்லிய குரலில் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் விழுங்கினாள்.

சித்தப்பாதான் உதயனில் படித்ததை விவரமாய்ச் சொன்னார்.

குமரன் பத்திரிகையை மௌனமாக வாசித்துவிட்டு வேலனிடம் கொடுத்தான்.

"அப்பா அது எங்கட நயனியக்காதான்..." வேலன் முணுமுணுத்தான்.

"இப்ப பேசாமலிக்கிறதுதான் நல்லம்....அக்கம் பக்கம் கூட அவள் இஞ்சை வந்துநிண்டது தெரிய வேண்டாம்..."

எவ்வளவோ இயல்பாகச் சொல்ல முனைந்ததும் சித்தப்பாவின் உதடுகளில் ஓர் இறுக்கம் விரவிப் பாய்ந்தது.

"இஞ்சை இவ்வளவு பேர் சொந்தமெண்டு இருக்க அவள் ஆஸ்பத்திரியிலை அனாதைப் பிணமா..."

அம்மம்மா முகம் கோணியபடி மூலைக்குள் உட்கார்ந்து விட்டாள்.

குமரனும், வேலனும் முகத்தைத் தொங்கப் போட்டபடி வெளிக்கிடாமல் இருந்தார்கள். ராசாத்தி அடுக்களைக்குள் அடிக்கடி யோசித்தபடியிருந்தாள். நாலுநாளாய் இறுக்கம் தளரவில்லை.

ஐந்தாவது நாள் விடிந்தபோது பக்கத்துவீட்டில் ஒப்பாரிச் சத்தங்களோடு விடிந்தது. கிணற்றடியில் தண்ணி அள்ளப்போன புவனம் கிறுதி சுற்றி கிணற்றில விழுந்து இறந்துவிட்டாளாம்.

வேலன் போய் விட்டு வந்து சேதி சொன்னான்.

அம்மம்மா விறுவிறென்று எழும்பி பக்கத்து வீட்டுக்குப் போனா. முற்றத்தில் குழுமியிருந்த பெண்களைப் விலக்கிக் கொண்டு உள்ளேபோனாள்.

"ஐயோ, என்ரை செல்லம் விட்டுட்டுப் போட்டியோ...கூடிக்கூடிக் குலவினதெல்லாம் விட்டிட்டுப் போகத்தானே... என்ன பாவம் செய்தமெண்டு இப்பிடித் தவிக்கவிட்டிட்டுப் போனனி...." அம்மம்மா கேவிக்கொண்டிருந்தா.

பக்கத்தில் ராசாத்தி..."உன்ரை தாய் தேப்பனுக்கு நாங்கள் என்ன பதில் சொல்ல. இப்படி விட்டிட்டுப் போட்டியோ..."

தூரத்தில் விக்கியழும் சத்தம்! இரண்டு பையன்களுமம ஓரமாய் நின்று... மெல்ல உதிர்ந்த நீரைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

சித்தப்பாதொண்டைக்குள விழுந்த முடிச்சை இறுக விழுங்கிக்கொண்டு... மனதுக்குள் ஓலமிட்டார்.

'ஐயோ என்ரை மகளே... உனக்காக வெளிப்படையா அழக்கூட ஏலாமல்...இதென்ன கொடுமை'

படலையடியில் பறைபலமாய் முழங்கத் தொடங்கிற்று.

அம்மாவுடையதும், ராசாத்தியினதும் குரல்கள் உச்சமாய் ஓங்கித் தளும்பின.

ஹேவென்ற இரைச்சல்... ஆரவாரம்...இங்கே...

இவையெல்லாம் இல்லாமல்... ஆஸ்பத்திரிச் சவச்சாலையின் தனித்த அமைதியான இருளுக்குள்... அவளது உடல்...!

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாஜனக் கல்லூரிக்கு 15லட்சம் ரூபா நிதி

வலி. வடக்கு, செப்.4

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி திருத்த வேலைகளுக்கென 15 லட்சம் ரூபா நிதி உடனடியாக கிடைக்கவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் 10 லட்சம் ரூபாவையும் வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரச்சபை 5லட்சம் ரூபா நிதியினையும் வழங்க முன்வந்துள்ளன.

மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை அம்பனைப் பகுதியில் மீண்டும் இயக்குவதற்கு சுமார் ஒரு கோடி ரூபா வரை தேவையேற்படும் என மதிப்பிடப் பட்டிருந்தது.

இந்நிலைமையில் உடனடியாக பாடசாலையை பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்கு நிதி உதவி வேண்டுமென வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் மற்றும், வலி வடக்கு பிரதேச செயலாளர், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ஆகியோர் கோரியிருந்தனர். (ஐ-86)

## சிங்கப்பூர் ஓய்வூதியம்

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஓகஸ்ட் மாதத்திற்குரிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவினால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தத்தமது வங்கிகளுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

# வல்லிபுராழ்வார் கொடியேற்றம்

வடமராட்சி, செப்4.

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 23ஆம் திகதி வியாழக் கிழமை சப்பறத் திருவிழாவும், 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை ரதோற்சவமும், 25ஆம் திகதி சனிக்கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும், 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கேணித் தீர்த்தமும் நடைபெறுவதுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும்.

பக்தர்களுக்கு வசதியாக இம் மஹோற்சவத்தை ஒட்டி விசேட போக்குவரத்து, சுகாதார வசதிகள் செய்யப் பட்டுள்ளன. உற்சவகாலத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-173-118-109)

# நீர்வழங்கு நிலையத்துக்கு ஜெனரேட்டர் வந்தது

யாழ்ப்பாணம், செப்.4

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.சற்) உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் கோண்டாவில் நீர் விநியோக நிலையத்துக்கென 14 லட்சம் ரூபா பெறுமதியான புதிய ஜெனரேற்றர் ஒன்று கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்த ஜெனரேற்றர் கடந்த முதலாம் திகதி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப் பட்டது.

அண்மையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 3 பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பொருத்தும் வேலைகள் , தற்போது கோண்டாவில் நீர் விநியோக நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருத்தும் வேலைகள் முடிவுற்றதும் இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான மின்சாரம் இந்த ஜெனரேற்றர் மூலமே பெறப்படும் என்றும்-

இதிலிருந்து 100 கே.வி வலு மின்சாரத்தை பெறமுடியும் என்றும் -

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன நீர்விநியோகப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

# வங்கிக் கடன் பெறும் விண்ணப்பப் படிவம்

யாழ்ப்பாணம், செப்.4

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ள கடனுதவியை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றவற்றின் ஊடாக 50 ஆயிரம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரை இக்கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தக்கடன்களைப் பெற விரும்புபவர்கள் தமது பகுதி கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கப்படும் விண்ணப்படிவங்களைப் பூர்த்தி செய்து பிரதேச செயலாளர் ஊடாக யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## இன்று

நெல்லியடி, செப்.4

பொலிகண்டி சனசமூக நிலைய மக்கள் படிப்பக பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சி.சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்வார். (ஐ-109)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம

## மங்கைப் பருவ மங்கள நீராட்டு விழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 19 ஆம் நாள் (05-09-1999) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.52 முதல் 12.00 மணி வரை வரும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

**எமது புதல்வி**
*** கோவிதா அவர்களுக்கு ***

பருவ மங்கள நீராட்டு விழாச் செய்ய இறையருள் கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

**தி. இராமநாதன் தம்பதிகள்.**

73/1, காரைக்காட்டு லேன்,
வண். வடமேற்கு, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

(68627)

ஓம் சரவணபவ

## கரம்பன் கிழக்கு வட்டுவில் முருகமூர்த்தி கோவில் புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம்

**04-09-99** (சனி) தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம்.

**05.09.99** (ஞாயிறு) காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல்.

**06.09.99** (திங்கள்) காலை 6 மணிக்கு தூபிகள் அபிஷேகம் தொடர்ந்து 6.45க்குள் மஹா கும்பாபிஷேகம்.

பிரதிஷ்டா குரு:
கிரியாகலாபமணி, கிரியாரத்னம்
**பிரம்மஸ்ரீ சி. சோமசுந்தரக்குருக்கள்**

* தெய்வீகப் பேருரைகள் இடம்பெறும் *

அடியார்கள் வந்து முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**ஆலயத் திருப்பணிச் சபை**

(68709)

## திருமண அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் சுபமங்களகரமான பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (04.09.1999) சனிக்கிழமை பிற்பகல் 1.40 தொடக்கம் 3.14 வரையுள்ள தனு இலக்கினத்தில் வரும் சுபவேளையில்

| | |
|---|---|
| **எமது புதல்வன்**<br>**திருநிறை செல்வன்**<br>**பத்மநாதன்**<br>**அவர்கட்கும்** | **எமது புதல்வி**<br>**திருநிறை செல்வி**<br>**நித்தியவதனி**<br>**அவர்கட்கும்** |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சிவன் கோயில் மண்டபத்தில் திருமணம் நடைபெறும் என்பதை உறவினர், நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். அத்தருணம் தாங்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

மணமகள் இல்லம்
**இ. சிவசுப்பிரமணியம் குடும்பம்**
**628, கண்டி வீதி,**
**அரியாலை.**

மணமகன் இல்லம்
**கிருஷ்ணன் குடும்பம்**
**சங்கரப்பிள்ளை வீதி,**
**ஆனைக்கோட்டை.**

(இருவீட்டார் அழைப்பு) (68731)

## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு
செட்டிக் குறிச்சியில்
(அம்மன் கோவிலடி)
**5 பரப்புக்காணி**
விற்பனைக்கு உண்டு
தொடர்பு கொள்ளவும்.
**திருமதி சூ. இரத்தினசபாபதி**
**பூதர்மடம், கோப்பாய்.**
* கொழும்பு:- 01-725377
(சி-8797)

## நாகம்ஸ்

**சுன்னாகம்**
**இளைய தளபதி விஜய்**
**தேவயானி, ரம்பா**
நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(68711)

உ

## புதுமனைப் பிரவேச வைபவ அழைப்பு

**பேரன்புடையீர்,**

நிகழும் பிரமாதி வருடம் ஆவணித்திங்கள் 20ஆம் நாள் (06.09.1999) திங்கட்கிழமை காலை 06 மணி முதல் 07.15 மணி வரையுள்ள சுபநேரத்தில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட **'ஸ்ரீநிவாசா'** என்ற மனையிற் புகுவதற்கு திருவருள் பாலித்துள்ளது. அவ்வேளையிலும் அன்றைய தினம் நடைபெறவிருக்கும் மதிய போசன வைபவத்திலும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*நன்றி.*

இங்ஙனம்,
**சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள்**
**குடும்பத்தினர்.**
(ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
துர்க்காபுரம்.)

8ஆம் கட்டை ஒழுங்கை,
தெல்லிப்பழை.

(C/8791)

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**நியூ விதுஷா** நகை மாடம் ஆதரவுடன்
**புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக**
வளர்ச்சிக்காக
**மாபெரும்**
**மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

இடம்:- **விக்கினேஸ்வரா சவாரித்திடல.**
காலம்:- 05-09-99 ஞாயிற்றுக்கிழமை
பி.பகல் 1 மணிக்கு

**பரிசாக தங்கப்பதக்கம் வழங்கப்படும்.**

**செயலாளர்.**

ஸ்ரீவிக்னேஸ்வரா வி.க
புத்தூர்.

விளம்பர அன்பளிப்பு:
**நியூ விதுஷா நகைமாடம்**
**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(68729)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்


யஸூநரி கவபட்டா

17

மேலைநாட்டு இலக்கியங்கள் எமக்கு எட்டியதைப்போல கீழைத்தேய - அதாவது தூரகிழக்கு தேசங்களின் - படைப்புக்கள் வந்து எட்டாமைக்குப் பல காரணங்களுள.

முக்கியமாக ஜப்பான், பொருளாதார, தொழில்நுட்ப, பண்பாட்டுத் துறைகளில் பெருவளர்ச்சி கண்ட நாடாக இருந்துங்கூட, அதன் படைப்பிலக்கியங்கள் பற்றி - ஜப்பானிய சினிமாவைப்பற்றி நாம் அறிந்துள்ள அளவுக்காவது - அறியமுடியாது போனமை துரதிர்ஷ்டமே. 'ஹைக்கூ' மட்டும் புறநடை. ஜப்பானிய மொழியின் பழமைமிக்க இந்த இலக்கிய வடிவம் கடந்த இரண்டு,மூன்று தசாப்தங்களில் தமிழ்க் கவிஞர்கள், கவிதை ஆர்வலர்கள் ஆகியோரின் அக்கறைக்குரிய ஒரு வடிவமாக மாறிவருகிறது.

புனைகதைகளைப் பொறுத்தளவில், யஸூநாரி கவபட்டா, யுகியோ மிஷிமா, ஷூஷாகு என்டோ ஆகியோர் பற்றி ஓரளவு அறியவும் அவர்களின் படைப்புகளில் அநுபவம் பகிரவும் வாய்ப்புக்கள் கிட்டின.

கவபட்டா,1968இல் நோபல் பரிசை வென்றதுடன் உலகின் கவனத்தை ஈர்த்தார். இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற முதல் ஜப்பானியரும் அவரே. 'தூங்கும் அழகிகளின் வீடு', 'கோட்டோ' - ஆகிய இரு படைப்புக்களும் அவருக்கு இக்கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தன. அவரது முதலில் வெளியான 'இஸூ நடனக்காரர்கள்' என்ற சிறிய நாவலுடன் தொடங்கிய படைப்புச் செயற்பாடு, தொடர்ந்த உற்சாகத்துடன் நீடித்தது.'பனி படர்ந்த நாடு' நாவல் அவர் நாவல்களில் மிகவும் அறியப்பட்டதொன்று. கவபட்டாவின் இலக்கிய அந்தஸ்தை நிலை நிறுத்த அந்நாவல் பெரிதும உதவிற்று.

இரண்டாம் உலகப் பெரும் போர் முடிவடைந்தபின் தொடர்ந்த ஆண்டுகள் அவரது படைப்பு உத்வேகம் பெற்ற காலமாகக் குறிப்பிடப்படுகின்றன. 'மலையின் ஒலி', 'வாவி' போன்ற நாவல்கள் இக்காலகட்டத்தில் உருவானவை.

1954இல் வெளியான 'வாவி',கதை சொல்லும் பாங்கினாலும், கையாளும் பொருளாலும் வாசகர்களைக் கவர்வது. ஜிம்பி என்ற ஆசிரியன் ஒருவனின் மிகநுணுக்கமாக உணர்வுகளைச் சுற்றிப் படர்கிற கதை, வாழ்வின் அழகற்ற தன்மைகளை அவன் எதிர்கொள்வதைக் காட்டுவதுடன், 'அழகு- அழகற்றது' என்பனவற்றையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

## சில குறிப்புகள்

கவபட்டாவுக்குக் கால்நூற்றாண்டு கழித்துப் பிறந்த யுகியோ மிஷிமாவும் ஜப்பானின் இந்த நூற்றாண்டு இலக்கியத்தில் தடம் பதித்தவராகக் கொள்ளப்படுகிறார். பதினைந்து நாவல்கள், ஐம்பதிற்கு மேற்பட்ட சிறுகதைகள், வெற்றிகரமாக அரங்கேறிய நாலு நாடகங்கள் போன்றவற்றை மிஷிமா படைத்தார். 'ஒரு முகமூடியின் ஒப்புதல்கள்', 'அலைகளின் ஓசை', 'தடை செய்யப்பட்ட நிறங்கள்', 'வசந்தகாலப் பனி','விடியலின்கோவில்' போன்ற அவரது படைப்புகள் பெரும் புகழ் பெற்றவை.

**சாந்தன்**

இவற்றுள் 'விடியலின் கோவில்', கீழைத்தேய சிந்தனைகள், நம்பிக்கைகள், தத்துவம் - இவற்றினடியாய் எழுந்தது. யதார்த்தத்திலிருந்து விலகி அதற்குமப்பால் தேடலைத் தொடர்கிற படைப்பு.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், மிஷிமா, அமெரிக்கா சென்றார்- 'பாட்டிஸான் ரிவ்யூ'அழைப்பின் பேரில். மிஷிமா சற்று மாறுபட்ட போக்குடைய படைப்பாளியாயிருந்தார். ஜப்பானிய ஏகாதிபத்திய அமைப்பினதும், அதன் இறந்தகால பாரம்பரியங்களிலும் அவருக்கு ஆர்வமிருந்ததாகச் சொல்லப் படுகிறது. இந்தப் பாரம்பரியங்கள், மேலைத்தேய தாக்கங்களால் இழக்கப்படுவதாக அவர் வருந்தினார். தம் உடலைப் பேணுவதிலும் அக்கறை காட்டி, தசைப் பயிற்சிகளையும், பளு தூக்குதல் போன்றவற்றையும் செய்து வந்த மிஷிமா, தம் நாற்பத்தைந்தாவது வயதில் சகா ஒருவருடன் இணைந்து பாரம்பரிய முறையிலான 'ஹரா-கிரி' சடங்கு மூலம் - தம் உயிரை மாய்த்துக் கொண்டதன் மூலம், உலகை வியப்பிலாழ்த்தினார்.

தமது இளைய சகாவின் இந்தத் தற்கொலை கவபட்டாவையும் பெருமளவில் பாதித்தது. இரண்டாண்டுகளுக் குள்ளாகவே, கவபட்டாவும், இதே முறையில் தம்முயிரை மாய்த்துக் கொண்டார்.

குறிப்பிட்டுச்சொல்லவேண்டிய இன்னொரு படைப்பாளியான ஷூஷாகு என்டோ, 'அமைதி', 'கடலும் நஞ்சும்', 'அற்புதமான முட்டாள்' போன்ற நாவல்களையும், 'துக்கப்பாடல்கள்', 'கண்ணாடி வில்லைகள்' போன்ற கதைத் தொகுதிகளையும் எழுதினார். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மிகவும் அறியப்பட்டவராகவும், விரும்பி வாசிக்கப்படுபவராகவும் குறிப்பிடப்படும் என்டோவின், 'போர்த்தலைமுறை' என்ற சிறுகதை மிகவும் பிரபலம் பெற்றது.

இக்கதை, இரண்டாம் உலகப் போரை வைத்தெழுதப்பட்டது. போரில் நேரடியாகப் பங்குபற்றாவிட்டாலும் அதன் தாக்கங்களுக்குள்ளானவர் என்டோ. போரிலிருந்து வேர்விடும் மனிதப் பலவீனங்களையும் முனைப்புகளையும் இப்படைப்பில் அவர் ஆராய முற்படுகிறார். இப்படித் தனிப்பட்ட முறையிலும், தேசமென்ற ரீதியிலும், பாதிக்கப்பட்டது என்பதே மிகவும் நுணுக்கமாகவும், மிகுந்த கலையழகுடனும், மனதை ஈர்க்கும் விதத்தில் எழுதப்பட்ட கதை 'போர்த்தலைமுறை'.

ஜப்பானுக்கு அடுத்ததாக - தூர கிழக்கு நாடுகள் மட்டில் - பிலிப்பைன்ஸ் பற்றி சற்று அறிய முடிகிறது. பிலிப்பைன்ஸின் இலக்கியம் பல்வேறு மொழிகளில்படைக்கப்படுகிறது. அங்கு பேசப்படும் கிளை மொழிகளுள் அறியப்பட்டவை மட்டும் எண்பத்தேழு. அறியப்படாதவை இன்னுமிருக்கலாம் என்கிறார்கள். இவற்றில் நாலோ ஐந்தில்தான் ஓரளவேனும் படைப்பிலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இந்த மொழிகளை விட மேலதிகமாக அங்கு வழக்கிலுள்ள - காலனியாதிக்கவாதிகளால் புகுத்தப்பட்ட - மொழிகள் இன்னுமிரண்டு. அவை ஆங்கிலம், ஸ்பானிஷ். இம்மொழிகளில் குறிப்பிடத்தக்க படைப்புக்கள் சில உருவானதாயும், அவை வெளியுலகின கவனத்தை ஈர்த்துள்ளதாயும் கூறப்படுகிறது. இந்த எழுத்துக்கள் மேலைத்தேயத் தாக்கங்கட்குட்பட்டவையாகவும் இருப்பதில் வியப்பில்லை.

எனினும், பிலிப்பைன்ஸின் படைப்பாளிகள் தமக்கென்றொரு அடையாளத்தை நிறுவவும், அந்த அடையாளத்துடன் சர்வதேச அரங்கில் தம்மைப் பொருத்திக்கொள்ளவும் முனைப்புடன் செயற்படுகிறார்கள். இதற்குச் சான்றாக, அறுபதுகளின் பிற்பகுதியில் வெளியான 'உணர்ச்சிக் காற்றுகள்' என்ற தொகுப்பு நூலைக் குறிப்பிடலாம். இந்த நூற்றாண்டில் இனங்காணப்பட்ட படைப்பாளிகள் பலரது சிறுகதைகள், கவிதைகளைக் கொண்டதாக அத்தொகுப்பு வெளியாயிற்று.

(தொடரும்)

---

# காவோலைகள்

**இராஜேஸ்கண்ணன் (வதிரி)**

"சீ...இண்டைக்கு நல்லா அலைக் கழிஞ்சு போனன். விடியக்காத்தாலை வெளிக்கிடேக்கையே மோட்டார் சைக்கிள் வேலையைக் குடுத்திட்டுது" என்னோடு கூடவே பஸ் பிடிப்பதற்காக பதகளித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்த அவருக்குச் சொல்லிக் கொண்டே நடந்தேன்.

நல்ல வேளை ஒரு பஸ் - கடைசி பஸ்தான் 'ஸ்ராண்டில்' நின்றது. பெரிதாக சனமும் இல்லை. சீற்றுக்காக அடிபடுமளவுக்கு சனமே இல்லை.

"எங்கடை நல்ல நேரம்தான் பாருங்கோ சனமும் பெரிசாய் இல்லை. அஞ்சரையாகுது. 'செக்பொயின்ற்' வழியவும் இறக்கமாட்டார்கள் அலுப்பில்லாமல் போய்ச் சேர்ந்திடலாம்"

அவர் சுகப் பயணத்துக்கு ஆயத்தமானார். ஆமோதித்துத் தலையை அசைத்தவாறு அசுவாசமாக 'சீற்றில்' அமர்ந்து காலையில் நுனிப்புல் மேய்ந்த உதயன் பேப்பரை விரித்துப் புரட்டினேன்.

"வல்லையில் கண்டிகட்டி மீன் பிடிக்க சென்ற வயோதிபர் மரணம்..."

பத்திரிகையைப் புரட்டியவுடன் இந்தச் செய்திதான் கண்ணிலே பட்டது.

என் இதயத்தினுள் இனம் புரியாத ஒரு பாரம். ஏதோ ஒன்றை இழந்து விடப் போகிறேன் என்ற ஏக்கம்; உடலில் ஒருவித படபடப்பு.

"ஒருவேளை 'சிங்களக் கந்தப்பு' தானோ...?"எனக்குள் நானே கேள்வியானேன். திரும்பவும் வாசித்தேன்.

"வழமையாக வல்லைப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் அந்த வயோதிபர் உவர்நீரில் பிணமாகக் காணப்பட்டார். யாரும் உரிமைகோராத நிலையில் போதனா வைத்தியசாலை சடலத்தை பொறுப்பேற்றது"

அங்கொன்று இங்கொன்றாக சிதறிய என் சிந்தனை விறைத்து நின்றது.

'சிங்களக் கந்தப்பு - அவரும் அனாதைதானே. அந்தக் கிழவனும் கண்டிகட்டித்தானே வல்லையிலை மீன் பிடிக்கிறது'

என் மனம் தன்னைத்தானே துருவிக்கொண்டது.

'நாலஞ்சுநாளா அந்தக் கிழவன் தவறணை வாசலுக்கு வரவேயில்லை. மற்றும்படியெண்டால் மத்தியானம் இரண்டு மணிக்கே கிழவன் வந்து விடும். வல்லையிலை கிடந்தது ஒரு வேளை சிங்களக் கந்தப்புவின்ரை...?

'சீச்சீ...அப்படி இருக்காது. அந்த மனிசனை எண்டால் எல்லாருக்கும் தெரியும். ஆராவது உரிமைகோர இருப்பினம். அதுவேறையாரோ போல்லை.

இறந்த கிழவன் நிச்சயமாக சிங்களக் கந்தப்புவாக இருக்கக்கூடாது என்பதில் என்மனம் விடாப்பிடியாக நின்றது.

வேலைக்குப்போய் வரும்போதெல்லாம் பூவரசடித் தவறணையிலே ஒருக்கால் இறங்கி ஒரு ஒண்டரை இரண்டு அடிச்சு வருவதுதான் எனது வாடிக்கை.

இந்தப் பழக்கம் கள்ளின் மேல் உள்ள விருப்பினால் வந்ததோ சிங்களக் கந்தப்புமேல் கொண்ட ஈடுபாட்டால் வந்ததோ என்று பிரித்தறிய என்னால் முடியவில்லை.

சிங்களக் கந்தப்பு தான் பிடித்த மீன்களையும் கள்ளுக குடிப்பவர்களுக்கான சில 'ரேஸ்ற்'களையும் பூவரசடித் தவறணை வாசலில் வைத்து விற்று வாழ்க்கை நடத்துபவர்.

அந்தக் கிழவனுக்கென்று உறவுகள் யாருமில்லை.

"எட பொடியா...என்ரை மனிசி செத்து இரண்டு வரிசமாச்சுதடா. அந்தக் கிழவி போனதோடை பொடி



பெட்டை இல்லாத என்னை ஆரடா கவனிக்கினம்? உந்த ஆச்சிரமத்திலை போய் பேசாமல் படுக்கலாமடா. ஆனால், என்ர பாட்டிலை இதுகளை வித்து மூண்டு நேரமும் பாணைத் திண்டிட்டு இந்த தவறணை விறாந்தையிலையே படுத்து எழும்புறது ஒரு தங்கத்தும் ஆக்கினை இல்லைத்தானே" - என்று கூறும் கந்தப்புவின் வார்த்தைகள் இப்பவும் என்காதில் ஒலித்துக் கொண்டே உள்ளன.

கந்தப்பு தானும் குழந்தையிலேயே நுவரெலியாவில் வேலைசெய்த சீனியர் என்பவரால் அங்கிருந்து கொண்டு வரப்பட்டு அவரின பிள்ளையாக வளர்க்கப்பட்டவர்.

"பொடியா... சிங்கள நாட்டிலை வேலைசெய்த என்ர அப்பு சீனியர், அங்கை ஒரு கள்ளப் பெண்டில் வைச்சிருந்தாராம். இங்கை என்ரை அம்மாவுக்கு பிள்ளை ஒண்டுமில்லை. அதாலை அங்கத்தேல் பெண்டிலின்ரை மூண்டாம் பிள்ளை என்னை இங்கை கொண்டு வந்தாராம்"

என்று சீனீயன் கந்தப்பு சிங்களக் கந்தப்பு என்று வழங்கப்படுவதன் காரணத்தைக் கிழவன் தானே ஒரு சமயம் கூறிவைத்தார்.

சிங்களக் கந்தப்பு நல்ல தொழிலாளியாக இருந்தவர். தன்னுடைய உறவுகளுக்கு உழைத்த காலத்தில் வாரி இறைத்தவர். பிள்ளை இல்லாத குறைபோக்க தனது மனைவி இராசமணியின் தங்கையின் மகளை சின்ன வயதிலிருந்தே கலியாணம் முடிச்சு வைத்து மூத்த பேரப்பிள்ளை பிறக்கும் வரைக்கும் எல்லாம செய்துவைத்தவர்.

"எடே தம்பி...இராசமணி இருக்கும் வரை செல்வாக்குத்தானடா. அவள் போன உடனேயே நான் தனிச்சுப் போனனடா"...

என்று கந்தப்புக் கிழவன் சொன்ன போது கண்கள் பனித்ததை, அவர் மறைத்துக் கொண்டதை நான் கண்டேன்.

இப்ப ஒரு ஐந்தாறு மாதத்துக்கு முன்னர் கந்தப்புவுக்கு சரியான காய்ச்சல். நடுங்கிக் கொண்டே தன்னுடைய வியாபாரத்துக்கு வந்திருந்தார்.

"அப்பா...மருந்து எடுக்கேல்லையே"

"டேய்..... கண்டதுக்கெல்லாம் மருந்து தின்னுறதேயடா"

"அப்ப உப்பிடி நடுங்குது"

"பொடியா....மருந்தெடுக்கப் போய் ஆசுபத்திரிலை நிண்டால் என்ரை வயித்துப் பாட்டை ஆர்பாக்கிறது? ஆசுபத்திரிக்கு நடக்கிறதெண்டால் எவ்வளவு கரைச்சல்?ஆரெடா என்னை கூட்டிக் கொண்டு போக இருக்கினம்?.."

"அப்பா இப்ப பொழுதுபடுது. நாளைக்குக் காலமை நான் மோட்டார் சைக்கிளை. இவடத்துக்கு வாறன் நிக்கிறியே. கொஞ்சம் முந்தி வந்து உன்னை ஆஸ்பத்திரீலே விட்டுட்டு வேலைக்கு போறன்"

"போடா...அதொண்டும் வேண்டாம். பனடோல் போட்டால் எல்லாம் சரி. நாளைக்குப் பாரன் என்னை...."

உண்மைதான். முதல்நாள் இப்படி என்னோடு கதைத்த மனுசன் அடுத்த நாள் உசர்ராக இருந்து வியாபாரம் நடத்தினார். அந்தக் காலத்துச் சாப்பாடு அப்பிடி.

அன்று பின்னேரம் சம்பளம் எடுத்த காசோடு வந்த நான் ஐம்பது ரூபாவை எடுத்து கந்தப்புவின் மடியில் திணித்தேன்.

"அப்பு. வச்சிரணை. வெத்திலை சுருட்டுக்காதல்.."

"டேய் பொடியா இப்படியெல்லாம் செய்யாதை. நீயும் குடும்பகாரன்....?"

எனக்கு ஏதோ பெரிய கொடை செய்துவிட்ட திருப்தி.

அதன் பின்னர் தீபாவளிக்கு முதல் நாள் பூட்டுமார்க் சாரம் ஒன்று வாங்கி வந்து கொடுத்தேன். கிழவன் அந்தச் சாரத்தை வாங்கும் போது வாய்விட்டு அழுதே விட்டார்.

"பொடியா...என்னையும் மதிக்க நீ ஒருத்தன் இருக்கிறாயெடா. நீ என்ன என்ரை உறவே? என்ரை உறவுகள் அதுகள் நன்றி கெட்ட நாயளெடா. அவள் பொடிச்சி என்ரை வளர்ப்பிணி. அடே...நான் அந்த மூதேசியை வளர்ப்பிணி என்று ஒரு நாளும் குறைவிடேல்லையடா. ஏயெல்வரை படிப்பிச்சனான்ரா. நல்ல ஒருதோட்டத் தொழிலாளி மாப்பிள்ளை பாத்து நான்தான்ரா கலியாணம் முடிச்சு வைச்சனான். என்ர உழைப்பிலை எட்டு தங்கப்பவுண் நகை போட்டனானடா. நான் உழைச்சு வாங்கின காணி, உழைச்சுக் கட்டின வீடெல்லாம் அவளின்ரை பேரிலை ஒரு யோசினையும் இல்லாமல் எழுதி வச்சனானெடா. அப்படியெல்லாம் செய்த என்னை இராசமணி போன உடனை வீட்டை விட்டுக் கூட திரத்திப் போட்டுதுகளடா... நான் அனாதையாப் போனனடா."

கிழவன் குழந்தைப் பிள்ளைபோல விக்கி விக்கி அழுதார்.

"ணேய். அழாதை. நீ உன்ரை பாட்டை பாக்கிறாய்தானே ஒரு மூதேசியளும் உனக்கு வேண்டாம்."

என்னால் கந்தப்புவை சமாளிக்க முடியவில்லை.

"அப்பா...கேக்கிறனெண்டு என்னைக் குறைப்படாதை. உன்னை உந்த ஆச்சிரமத்திலை சேத்து விடுறன். இருக்கிறியே?"

இப்படி கேட்கக் கூடாது போலத்தான் இருந்தது. இருந்தும் கேட்டு வைத்தேன்.

"பொடியா...என்னாலே எழும்பி நடக்கக் கூடியளவும் இதுகளவித்து சாப்பிடுறன். வேணுமெண்டால் அப்பிடி ஏலாமல் போக கேட்கிறன். கொண்டு போய் சேத்துவிடன்"

அந்த கிழவனின் வைராக்கியம் இந்தக் கால இளசுகளிடமே இல்லை.

அன்று கந்தப்பு விட்ட கண்ணீர் என்னை வாட்டியது. இப்படி எத்தனை கந்தப்புமார்.?...

வளர்த்துவிட்ட தாய் தகப்பனுக்கு வெத்திலை கூட வாங்கிக் கொடாத பிள்ளைகள். அந்தப் பிள்ளையார் கோயிலடியில் கச்சான் விற்கிற கிழவன், அந்த ஹோட்டலில் ஏச்சு வாங்கி வாங்கி மேசை துடைக்கும் கிழவன், தோப்பு வளவில் பெட்டி பொத்தி விற்று சீவியம் நடத்தும் பொன்னாத்தைக் கிழவி எல்லாரும் என்கண்முன் வந்து இதயத்துள் கரைந்தனர்.

"எடே பொடி...காசு பணம் இல்லாமல் போகலாமடா. கடைசிக் காலத்திலை கவலைப்படாமல் போய்ச்சேர வேணுமடா. என்ரை கவலையள், என்ரை தேவையள் எல்லாத்தையும் சொல்லக் கேட்க ஒருத்தரெண்டாலும் இருக்க வேணுமெடா...."

என்று அடிக்கடி கந்தப்புக் கிழவன் சொல்லும் போதெல்லாம் தோப்பு வளவு பொன்னாத்தை சொல்லுவது தான் ஞாபகம் வரும்.

"டேய் தம்பி.... என்ரை பொடிச்சியை 'கூழ் குடிச்சு எத்தினை வரிசமாச்சு கொஞ்சம் காச்சித் தாவன் பிள்ளை' என்று கேட்டால் 'வயசு போகப் போகத்தான் சுதி கேக்குதோ' எண்டெல்லே ஏறி விழுறாள்" என்று அந்தக் கிழவி சொல்லி வேதனைப் படுவதே ஞாபகம் வரும்.

பாவம் இந்தக் கிழடுகள் இப்படி வேதனைப் படுவதைவிட ஐம்பது வயதுக்குப்பிறகு செத்துப் போக வேணும். என்ரை பிள்ளைகள் கூட இப்படித் தானோ...?

"பூவரசடி இறக்கம்"

யாரோ கூவிய சத்தம் கேட்டு நினைவு மீண்டேன். பஸ் ஜன்னலால் எட்டிப் பார்க்கிறேன். தவறணை வாசலில் இன்றும் கந்தப்பு இல்லை.

அவசர அவசரமாக எழுந்தேன். பஸ் புறப்பட்டு விட்டது. மீண்டும் மணியை அடித்து "இவ்வளவும் என்ன கனவே கண்டுகொண்டு இருந்தநீர்?" என்று கொண்டக்ரிடம் ஏச்சும் வாங்கி இறங்கி விட்டேன்.

தவறணையுள் புகுந்து கந்தப்புவை விசாரிக்கிறேன்.

"அண்ணை அதையேன் கேக்கிறியள். நாலுநாளா உப்புத் தண்ணீக்கையே செத்துப்போய் கிடந்தது. என்ன நடந்ததோ தெரியாது. பாவம். கிழவன்ரை வளர்ப்பிணிப் பெட்டை கூட போகேல்லை. பெரியாஸ்பத்திரிக் காறன்தான் கொண்டு போனாங்கள்...

எனது இதயம் மாத்திரமல்ல புத்தியும் இடிந்து போய் நின்று விட்டேன். எங்கோ ஒரு தொலைவில் நான் ஏறி வந்த கடைசி பஸ் போவது தெரிகின்றது. அடுத்த பஸ் நாளைக்கென்றாலும் வரும் தானே....!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நல்லூரான் காத்தருள்வான் நம்பு

பாவக் குளத்தில் பரிதவிக்கும் ஆன்மாவே......!
சேவற் கொடியோனின் சீரடி சேர் - சா... வந்தால்
செல்லாத காசிந்தச் சீழ்மேனி; உள்ளுயிரை
நல்லூரான் காத்தருள்வான் நம்பு.

எள்ளி நகைக்கும் எமனுறவை நீறாக்க
வள்ளிபாகன் தானே வரவேண்டும் - துள்ளிவரும்
வேற்படையோ துன்பமதன் வேரறுக்கும்.....சூரகுலம்
தூளாகும் நம்பித் துதி.

பணம்பதவி சிற்றின்பம் பாராளும் வேட்கை
தினமும் புகழ்ப்பூவா தேவை....? - பிணமானால்
நீரொடு சாம்பல்நாம் நிம்மதிக்கு நல்லூரான்
தேரடியே என்று தெளி.

'எல்லாம் அவன் செயல்' ஈசன்மகன் செயல்
'பொல்லாப்பும் இல்லை'யெனப் போற்றிநில் -
நல்லூரான்
துன்பக் கடல்நடுவில் சூரசங்காரம் செய்வான்
வெண்புறாவை வென்றுதரும் வேல்.

சிங்கமுகா.... ஏனிந்தச் சிற்றறிவு...? ஆணவத்தில்
பொங்குவதா....? பின்பு பொடிப்பொடிதான் - செங்
கொடியோன்
தேவர் துயரழிக்க தீவிந்தில் வந்துதித்த
கோபப் புணர்ச்சியின் கோன்

தமிழ்ச் சங்க கர்ப்பமே! தந்தைக்குரு நாதா...!
திமிர்கொண் டசுரர்செய் தீங்கில் உமிழ்ந்தவனே
இன்றெழுந்த சூரர் இனமழிக்க ஈழத்தில்
புண்ணியனே போர்க்கோலம் பூண்

- உச்சிக்கிழான் -

## தேரேறி வந்து சிரி!

தேரேறி அட்ட திசைகளெல்லாம் பூப்பூக்க
வா தமிழே! எங்கள் வசந்தத்தின் காவலனே!
நூறாயிரம் பக்தர் நோன்பிருந்து வரவேற்க
ஆறுமுகச்சொலிப்பில் அருள் பொழியும் மெய்ப்பொருளே!
பாரோடும் விண்ணாய்ப் பரந்தாலும் 'நல்லூரில்'
வேர்கொண்டு எங்கள் வினையறுக்கும் கந்தையா!
பாராமுகம் விட்டு..... பசி விரதம் பிடிக்கும் இந்தப்
பாவிகளைத் தொட்டுப் பதம்காட்டி வாழ்த்தாயா?

தேவர்களாய் நாமும் சிறைப்பட்டம்; பொருளிழந்தம்;
காவியுயிர் சுமந்தம்; கறைப்பட்டம்; இன்றுன்னை
மேவி..... ஒருமார்க்கம் வேறில்லை எனத்தெளிந்து
ஆவிதனை உருக்கி ஐயா... நின் தாள் பணிந்தம்.
தேவிகளைப் பற்றி, தேரேறி, வேல் சுழற்றி
நீவர... நாம் உந்தன் வடந்தொட்டிழுக்க நின்றம்
சேனாதிபதியே....! உன்சேய்கள் எமையும் மீட்டு
சாப விமோசனத்தைத் தர இன்னும் ஏன் சுணக்கம்?

பன்னீரில் குளித்தாய்; பனிநிகர்த்தாய்; நாம் அழுத
கண்ணீரில் கரைந்தாய்; காயமுற்று நாம் சொரிந்த
செந்நீரிலும் திளைத்தாய்; திருவிழாவில் 'பத்மநாதன்'
சிந்தும் குழல் மழையில் நனைந்திரம் சுவறி உள்ளாய்;
உண்மையிலே உனக்குத்தான் 'சுரம்' வரணும்!
ஆனால் எம்
மண்ணில் 'சுரம்' மலிந்த மருமத்தைப் பார்த்தாயா?
இன்னும் மருந்தின்றி எத்தனைநாள் நீளுமடா?
புன்னகைத்துத் தேரேறிப் புதிரவிழ்த்து வாழ்த்தாயா?

- அருணன் -

## முத்தமிட்ட அவள்!

கண்ணடித்தாள் ~ தன்
இதழ் கடித்தாள்
கட்டியென்னை முத்தமிட்டாள்
சின்னச் சிரிப்பில் ~ எனை
சிலிர்க்க வைத்தாள்
'கண்ணே!' என்றேன்
'கனியமுதே!' என்றேன்
'என்னுயிர் நீ!' யென்றேன்
நான் செய்ய எண்ணியவை
அத்தனையும் அவள் செய்தாள்
என்ன தவம் செய்தேனோ ~ பெண்ணே
உன்னைப் பெறுவதற்கு!
கிளிச் சொண்டை திறந்து ~ அவள்
'குட்நைட் டாடி!' என்றாள் ~ ஐந்து
வயது அடையாத என்
மகள் ஆரணி......!

- முத்துமாரி -

## பாதையேதும் தெரியுதோ பார்

பாதை திறப்புப்போர் பகிடிக்கிட மாகிவிட்
வாதையின் கடுமையால் வழிமாறி - போதையில்
வேதையின் தாக்கத்தால் விழிபிதுங்கி முனகினர்வேறு
பாதையேதும் தெரியுதோ பார்!

வங்காளக் கடலில் வழிமறிக்கும் நோக்கிற்கு
பங்காளராய் வரமறுத்தார் பாரதத்தார் - இங்காளும்
மேதைகளின் கடத்தல்களை மிறையுறுத்தித் தடுத்திட
பாதையேதும் தெரியுதோ பார்!

தரைமட்ட மாகிவிட்ட தாயகத்தின் வீடுகள்
அரைமட்ட மாகிநிற்கும் மதிற்சுவர்கள் - உரைமட்டக்
கோதையின் வார்த்தைகளாய் கொடுமைகள் களைபடுமோ
பாதையேதும் தெரியுதோ பார்!

அகதிகளா யலைந்து அவலங்களுக் குள்ளாகி
சகதியில் உழன்று சஞ்சலத்தால் - மிகுதியாம்
வாதையின் துன்பம்பொறார் வாழ்ந்திட்ட இல்லமேகப்
பாதையேதும் தெரியுதோ பார்!

தென்னிலங்கை செல்வதெனில் தீராத அலைச்சலுடன்
இன்னலுமாம் அனுமதிதான் பெற்றிட - அன்னமுறைத்
தீதையார் உணர்த்திடுவார் இரக்கமற்ற மேலோர்க்கு
பாதையேதும் தெரியுதோ பார்!

அதிகரிக்கும் கட்சிகள் அதற்கெனத் தலைவர்கள்
மதிகருக்கும் திகைப்புநிறை மக்கள் - விழிபெருக்கும்
காதையால் நொந்து கையறக் கேட்கின்றார்
பாதையேதும் தெரியுதோ பார்!

வெளிநாட்டில் நிதிசேர்க்க விடுதலை இயக்கத்திற்கு
வழிகாட்டும் குழுக்களை வழிதிருப்பி - குறிநாட்டும்
சூதையவர் மேற்திணிக்கும் சூழ்ச்சியும் பலிக்கவில்லை
பாதையேதும் தெரியுதோ பார்!

காணாமற் போனோர் கணக்குகள் பெருகலன்றி
வீணாகிப் போய்விடும் விசாரணைகள் - நாணாமற்
தீதையவர்க் கிடித்துரைக்கும் திடமன மற்றார்வேறு
பாதையேதும் தெரியுதோ பார்!

தீர்வுப் பொதியுண்டாம் தீர்த்திடப் பிரச்சினையை
ஆர்வமிகக் கூறுகிறார் அடித்தடித்து - தீர்ப்புப் பெற
கோதைக்குப் பெரும்பான்மை ஒவ்வாதாம் பேரவையில்
பாதையேதும் தெரியுதோ பார்!

திட்டங்கள் யாவும் திசைமாறித் தோற்றுவிட
இட்டமுடன் முடிவாக இயம்பினார் - போட்டியின்றி
தீதைநாம் நினையோம் இசைவாகப் போய்வரலாம்
பாதையேதும் தெரியுதோ பார்!
(மிறையுறுத்தி - அச்சமுறச் செய்து
மதிகருக்கும் - திட்டும்)

- பழையூர் சுந்தரம்பிள்ளை

## வேலி ஓணான் கதைக்கின்றேன்.....!

கந்தப்பு வீட்டுக் கொங்கிறீற்றுக் கல்லு மதில்
குண்டுபட்டு எப்போதோ குட்டிச் சுவரானதால் ~ அப்பு
கிடுகுவைத்துக்கட்டி இப்போ(து) கிழிந்து விட்ட வேலியிலும்
குடியிருக்கும் ஓணான் நான் கதைக்கின்றேன் கேளுங்கள்!
நல்லபடி நான் பிறந்தேன் நானிலத்தில் வாழ்வதற்காய்
அல்லற்பட்டு அலைகின்றேன் அடுத்தடுத்துச் சோதனைகள்!
கல்லால் எறிகின்ற 'காலிப்பயல்கள்' சிலர் ~ கறையானின்
புல்லரிக்க வைக்கும் புற்றுநோய்த் தாக்கங்கள்!
சொல்லிமாளாது சோகங்கள் இன்னும் பல ~ என்றாலும்
இராப்பொழுதில் என்பாடு கொண்டாட்டம்!
ஊரடங்கி எல்லோரும் உயிர்காத்து அடங்கிவிட ~ எந்தன்
காரெடுத்து (?!) வீதியெலாம் கலக்கிடுவேன் கணப்பொழுதில்!
'ஏன்'? என்று கேட்க 'எட! இறங்கிப் போ' என்று சொல்ல
நான் கொடுக்கேன் சந்தர்ப்பம் 'நைஸாக' நழுவிடுவேன்!யாரோ
கண்பட்டு விட்டதய்யா, கடந்த ஒருகங்குலிலே கொஞ்சம்
'மப்படித்து'ச் சென்று மதிகலங்கி மோதிவிட்டேன்
அப்படியே அந்தச் சந்தியிலே உள்ள 'ட்றம்'மில்!
'குப்'பென்று வியர்க்க முன்பே குண்டு மழை துரத்தி வர~
கடுகதியாய்
கால்கிளறி கணப்பொழுது சுணக்கமின்றி
புகுந்துவிட்டேன் ஏதோ புண்ணியத்தில் கிடுகினுள்ளே!
இப்போது எடுத்துவிட்டேன் 'இனி எங்கும் இரவினிலே
அப்புவின் கிடுகை விட்டு அகல்வதில்லை' எனும் முடிவு!!

- அனலையூர்ச் சேந்தன் -




## இதயத்தில் எழுதிவிடு!

இதயமெனும் பேரேட்டில்
இயன்றவரை கவியெழுது
துதிப்பாடல் கேட்டாலும்
தூற்றுமொழி கேட்டாலும்
விதப்படுத்தி ஒதுக்காமல்
வேண்டாமை விரும்பாமல்
எதையெழுத நேர்ந்தாலும்
இதயத்தில் எழுதிவிடு!
புதுமைக்கு வித்திட்டு
புகழுக்குப் பாதையிடும்
இதயத்தின் பரப்பளவோ
எழுதுமட்டும் விரிவடையும்!
உதிக்கின்ற கருத்துக்கள்
உலகறிய வெளிவருமுன்
இதய த்துப் பேரரங்கில்
ஒத்திகையாய் இயக்கிவிடு
உலகுறவின் அனுபவத்தை
உள்ளத்தில் ஏற்றுவதால்
புலமைக்கும் தேறாத
புதுக்கவிதை பிறப்பெடுக்கும்
சிலகாலம் கருப்பைக்குள்
சிறையடங்கி வளரும்புள்
வலிமையினைப் பெற்றுயிர்த்து
வானறியப் பறக்காதோ?

- பிருந்திரன் -

## சொல்லும் செயலும்

சத்தி யம்சமா தானம் பிறக்குமாம்
தர்ம சக்கர ஆட்சி சிறக்குமாம்
எத்துணை நலம் அம்மையார் வாக்கிலே
இங்கு நடப்பதோ நேர்எதிர்ப் போக்கிலே!

குண்டு வீழ்ந்தெங்கள் வீடுகள் சாய்ந்தன
குடியி ருப்புக்கள் பற்பல மாய்ந்தன
பெண்டு பிள்ளைகள் வீதியில் போயினார்
பிச்சை ஏற்பவர் ஆயிரம் ஆயினார்.

புதிதாய் வந்தவர் பூசலைத் தேக்கினார்
புதிய வேகத்தில் தமிழரைத் தாக்கினார்
வதிவி டங்களைச் சுற்றி வளைத்தனர்
வலுவில் தங்கள் முகாகமுக் கழைத்தனர்.

தலைகீ ழாய்க்கட்டிச் சாக வதைத்தனர்
சாக டித்தபின் தரையில் புதைத்தனர்
நிலை கலங்குது நேர்ந்தவை கேட்கவே
நீச ரோடேது நிம்மதி வாழ்க்கையே.

பதறிடப் பலர் தோலை உரித்தனர்
பாவியர் கோவில் தேரை எரித்தனர்
சிதறி ஓடவும் தீர்த்தனர் வேட்டினை
தேடி யாரிடம் சொல்வதிக் கேட்டினை?

காலங் காலமாய் காத்த பெருநிதி
கருதித் தமிழினம் சேர்த்த பெருநிதி
நூலகம்; அதைத் தீயிட்ட வஞ்சமே
நோக்கி வேகுதே சான்றோரின் நெஞ்சமே.

வேட்டுக் கள்தமை வீட்டுக்குள் தீர்த்தனர்
வீட்டைத் தீயிட்டு வேடிக்கை பார்த்தனர்
நாட்டி லேபெரும் யுத்தம் நடக்குது
நங்கையர் ஆட்சி "நல்லாய் இருக்குது!"

வீடு சிற்சில பாதிகள் மிஞ்சின
மிகுதி பற்பல முற்றும் அழிந்தன
சூடு பட்டிங்கு மாண்டவர் பற்பலர்
தூர ஓடிப் பிழைத்தவர் சிற்சிலர்

தெருக் கிணற்றினில், ஓடையில், ஏரியில்
செந்தமிழ்ப் பிணம் நாறின சேரியில்!
உருக்கு லைந்து கிடந்த ஓர்பால்
உருசி பார்த்தன நாயினம் ஓர்பால்!

தோட்ட மண்ணிலே சூரை படர்ந்தது
தோணி மேட்டிலே சும்மா கிடந்தது.
காட்டி லேதமிழ் மக்கள் ஒதுங்கினர்
காடையர் அவர் வீட்டில் பதுங்கினர்.

மைந்தனோ மேலை நாட்டிலே ஏங்குவான்
மங்கையோ மானம் காப்பதற் கேங்குவாள்
தந்தையோ பாதி வீட்டிலே தூங்குவார்
தாயவள் இதை எப்படித் தாங்குவாள்?

புத்தன் ஆணையில் தர்மத்தைக் காப்பதும்
போத வேஅதி காரத்தைச் சேர்ப்பதும்
சத்தியம் எனில், யாவரும் பார்க்கவே
தாமதம் ஏனோ பூசலைத் தீர்க்கவே!

- வ.சின்னப்பா-
(தனங்கிளப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாட்டிற்கு ஆகமத்தில் இடமுண்டு!

கடந்த வார சஞ்சீவி பத்திரிகையில் வெளியான பேராசிரியர் வை. இரத்தினசபாபதியின் கட்டுரையில் கூறப்பட்டுள்ள சிலவிடயங்கள் தொடர்பாக சர்வதேச இந்துமத குருபீடம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

சைவ சமயத்தில் பிரதான இடம் வகிக்கின்ற நவக்கிரக வழிபாடு பற்றி மிக இழிவாகக் கூறியிருப்பது இந்துக்களது மனத்தைப் புண்படுத்தியுள்ளது.

மேற்படி கட்டுரையைப் பிரசுரித்த 'சஞ்சீவி' சிறிய தவறு ஒன்றைச் செய்துள்ளது. மேற்படி கட்டுரையை எழுதிய ஆசிரியரது பெயர் மட்டுமே தரப்பட்டுள்ளது. எப்போது, எந்த மலரில் அல்லது நூலில் அக்கட்டுரை பிரசுரமாகியது போன்ற இன்ன பிற விடயங்கள் தரப்படவில்லை.

இக் கட்டுரையை எழுதிய ஆசிரியர் இரு பிரதான விடயங்களை அடிப்படையாக வைத்து கட்டுரையை தொடர்கிறார்.

1. "சைவாலயம் உட்பட எந்த ஆலயத்திலும் நவக்கிரகங்கள் பரிவார ஆலயமாக இருப்பதற்கு எந்த ஆகமத்திலும் எந்த சாஸ்திரத்திலும் இடமில்லை"

2. "நவக்கிரக வழிபாடு இழிவழக்காகும்."

எந்த ஆகமம் அல்லது சாஸ்திரத்திலும் நவக்கிரகம் சைவாலயத்தில் அமைய சான்றுகள் இல்லை எனக் கூறுகிறார். ஆகமம் எனின் எந்த ஆகமம் என்றும், சாஸ்திரங்கள் என்பதில் "இந்த சாஸ்திரம்" எனவும் வரையறை செய்து கூறாததால் அவரது கருத்துக்கள் மழுப்பல் கருத்துக்களாகின்றன.

ஏனெனில் இந்து மதத்திற்கு அனேக ஆகமங்களும் சாஸ்திரங்களும் உள.

ஆனால் உத்தர காரணாகமம் "பிரகார லஷண" விதிப் படலத்தில் ஈசான திக்கில் வைரவர் சந்நிதிக்கெதிரே சற்று விலத்தி நவக்கிரகத் தலம் அமைய வேண்டுமெனக் கூறுகின்றது. இவ்வாறே ஏனைய ஆகமங்களான காமிகம், சுப்பிரபேதம் என்பனவும் சைவாலயத்தில் நவக்கிரக தலம் இருக்க வேண்டியதன் அவசியத்தையும், அமைவிடம், அவை பற்றிய கிரியை என்பனவற்றையும் வரையறை செய்து கூறுகின்றன.

இவ்வாறு பல ஆகமங்கள் நவக்கிரக வழிபாட்டுத்தலம் பற்றிய சான்றுகளைத் தர "எந்த ஆகமத்திலும் குறிப்பில்லை" எனக் கூறுவது ஆசிரியரின் ஆகம அறிவின் மீது ஐயங்கொள்ள வைக்கின்றது.

மேலும் அவர் நவக்கிரக வழிபாடு இழிவழக்காகும் என்கிறார். இறைவனால் அருளப்பட்ட வேதங்களில் ஒன்றான "யஜுர்" வேதப் பிரமாணமான தைத்திரிய உபநிஷிதம் சூரிய நமஸ்காரத்தையும் நவக்கிரக உபாசனையையும் விரிவாகக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு மந்திரத்தைக் குறிப்பிடுகின்றது.

"அருண ஹேதுகம்" என்ற பகுதி நவக்கிரக நாயகரான சூரியபகவானைப் போற்றிப் புகழ்கின்றது. மேலும் "நித்ய பூஜா பரார்த்த விதி" எனும் நூலில் சூரிய,சந்திரர் இல்லாத காலத்தில் செய்யும் வழிபாடுகள் பலன் அளிக்கமாட்டா என்கிறது. ஆகமங்கள் யாவும் நித்யபூஜையின் போது உஷத் கால, உச்சிக்கால பூஜை முதலில் சூரிய பகவானுக்கே நிகழ வேண்டுமென்கின்றன. மேலும் காயத்ரி மந்திரம் சூரியபகவானையே பிரார்த்திக்கின்றது.

இவ்வாறு வேதாகமங்கள் சூரிய வழிபாடு, நவக்கிரக வழிபாடு பற்றி விதந்தோத, கட்டுரையாசிரியரான பேராசிரியரோ நவக்கிரகங்களை வழிபடுதல் சைவ சமயத்தில் இல்லை என்றும், அது இழிவழக்காகும் என்றும் கூறியிருப்பது மிக அபத்தமாகும்.

வைஷ்ணவ தலங்களில் நவக்கிரகங்களைக்காண முடிவதில்லை என்கிறார். வைஷ்ணவ மரபுப்படி விஷ்ணுவின் அவதாரங்கள், அவற்றோடு தொடர்புடைய கடவுள்களைத் தவிர சிவன், பார்வதி, விநாயகர் முதலிய கடவுள் திருவுருவங்களையே காண முடிவதில்லை. இந்நிலையில் அங்கு நவக்கிரக தலம் இருக்குமென எதிர்பார்க்கமுடியாது.

சமய குரவர்களில் ஒருவரான ஞானசம்பந்தர் நவக்கிரக வழிபாட்டைப் புகழ்ந்து கூறியுள்ளார். மாறாக நவக்கிரக வழிபாட்டை இழிவுபடுத்திக் கூறவில்லை.

"நாளுங் கோளும் நல்லனவே செய்யும்" எனக்கூறுவதிலிருந்து அவர் நவக்கிரக வழிபாட்டை போற்றியுள்ளமை புலப்படும். மேலும் அப்பர் சுவாமிகள் நவக்கிரகங்களில் ஒன்றான சூரியபகவானை வழிபட்டால் சிவனை வழிபட்டதை ஒக்கும் என்கிறார். இதன் மூலம் நவக்கிரக வழிபாட்டை சிவவழிபாட்டிற்கு நிகராகக் கூறியிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் நித்ய கர்மாவஷ்டானம் பற்றிக் கூறும்போது, நீராடி சூரியபகவானைப் பிரார்த்தித்தே ஏனைய கருமங்களை ஆற்ற வேண்டும் என்கிறார். அந்தணர்களின் நித்திய கர்மாக்களில் ஒன்றான 'சந்தியாவந்தனம்' சூரிய வழிபாடாகும். இவ்வாறு சைவசமயத்தில் முக்கியம் பெற்ற வழிபாடாக சூரியவழிபாடும் நவக்கிரக வழிபாடும் அமைந்துள்ளமை குறிப்பிட்டுக் காட்டக்கூடியது.

இந்துக்களின் வாழ்வில் "சுபநேரம்" என்பது நல்லகாரியம் செய்யும் பொழுது பார்க்கும் நேரமாகும். மங்கல காரியமான திருமணம், ஆலய கும்பாபிஷேகம், கிரகப்பிரவேசம் என்று பல முக்கிய நிகழ்வுகளில் 'நவக்கிரக வழிபாடு' கட்டாயம் நிகழும். ஆறவம் வேதாங்கங்களில் ஒன்றான ஜோதிடம் கிரக சஞ்சாரங்களை வைத்து நல்ல காரியஞ் செய்வதற்கான சுபநேரத்தைக் கூறுகின்றது. இதில் இருந்து முகிழ்த்ததே சோதிடம் எனும் அறிவியற்துறைசார் கலையாகும்.

நவக்கிரக தோஷம் என்பது ஒருவருடைய சாதகத்தில் செல்வாக்குச் செலுத்தும். இத்தோஷங்கள் நீங்க சிவன் கோயிலுக்குச் சென்று நவக்கிரகங்களுக்கும், சிவனுக்கும் அர்ச்சனை வழிபாடுகள் புரிவர். திருநள்ளாறு "தர்ப்பாரண்யேசுவரர்" ஒரு சிவன் கோயிலாகும். எனினும் அங்கு முதன்மை பெற்றிருப்பவர் சனிபகவானாவார். ஒவ்வொரு நவக்கிரகத்திற்கும் ஒவ்வொரு தலமுண்டு. கோயில் நிர்வாகம் வருமானங் கருதி நவக்கிரக தலம் அமைப்பதில்லை. ஆகம விதிகளின் பிரகாரமே அவ்வாறு செய்யப்படுகின்றது.

இவ்வாறு இந்துக்களின் வாழ்வில் செல்வாக்கு பெற்று விளங்கும் நவக்கிரக வழிபாடு பற்றி மிக இழிவாகக் கூறியிருப்பது சைவ உலகத்தையே மனம் நோக வைத்துள்ளது.

எனவே நவக்கிரக வழிபாட்டிற்கு ஆகமத்தில் இடமுண்டு. அத்துடன் உதயன் - சஞ்சீவி ஆசிரிய பீடத்தினருக்கும் சிறு வேண்டுகோள்.

இந்து சமயம் சம்பந்தமாக வெளிவரும் கட்டுரைகளை தரமறிந்து, சமயத்தை வளர்க்கக் கூடிய - சமயத்தின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்யக்கூடிய - சமயத்தின் பால் மக்களை ஆற்றுப்படுத்தக்கூடிய - நல்ல கருத்துக்களடங்கிய கட்டுரைகளைப் பிரசுரிப்பதை விடுத்து, ஆராய்ச்சி என்ற பெயரில் அரை வேக்காட்டுத்தனமான - அபத்தமான- கட்டுரைகளை பிரசுரிக்க வேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது சர்வதேச இந்து மத குருபீடம்.

**சிவ.நித்தியானந்தக் குருக்கள்**
(யாழ் மாவட்ட அமைப்பாளர் - சர்வதேச இந்துமத குருபீடம்)



தமிழகத்தின் புகழ்பெற்ற தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கோயம்புத்தூரிலிருந்து மாதாந்தம் வெளிவருவது 'ஓம் சக்தி' என்ற ஆன்மீகமலர். சைவ சமயக் கருத்துக்களை தெளிவுபடுத்தி வரும் அந்த இதழின் கடந்த தீபாவளி மலரில் இடம் பெற்ற- பேராசிரியர் வை.இரத்தினசபாபதி 'நவக்கிரக வழிபாடு நமது வழிபாடா?' என்ற தலைப்பில் வரைந்த - கட்டுரை கடந்த வார சஞ்சீவியில் மறுபிரசுரமாகி பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமான மூவரின் கட்டுரைகள் இங்கு பிரசுரமாகின்றன.
(ஆ-ர்)

# நவகோள் வழிபாடு சிவாகமத்தில் இல்லை

தமிழ்தம் தனி நெறியாக - தொன்நெறியாக - விளங்குவது சிவநெறியாகும். அதனைச் சார்ந்து விளங்குவது திருமால் நெறியாகும். இவ்விரு நெறிகளும் காலம் கடந்ததாகும்.

நம் சமய வழிபாட்டில் இடையிடையே பல்வேறு வழிபாடுகள் கலந்துவிட்டதோடு முறையான வழிபாடு பின் தங்கிவிட்டது வேதனைக்குரியதாகும்.

பண்டை நாளில் திருக்கோயில்களில் சிவலிங்கம் மட்டுமே இருந்தது. அம்பிகை கூட பின்னர் வந்ததுதான். நம் பன்னிரு திருமுறைகளில் அம்பிகைக்கு என்று தனியான வழிபாட்டுப் பாடல் கிடையாது. "அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே" என்பார் ஞானசம்பந்தர். இவ்வாறு இருந்த சிவ வழிபாட்டில் மிகப் பிற்காலத்தில் வந்தது நவகோள் (நவக்கிரகம்) வழிபாடாகும்.

நம் திருமுறைச் செந்நெறியில் இதற்குண்டான வழிபாடும் கிடையாது. திருமால் நெறி வழிபாட்டில் நவக்கிரக வழிபாடு இல்லை. ஆனால், சைவ வழிபாட்டில் நீங்கா இடம் பெற்றது. அதுவும் எப்படி என்றால், சிவ வழிபாட்டினை மறக்கும் அளவிற்குச் சென்றுவிட்டது வேதனைக்குரியதாகும்.

பழமையான திருக்கோயில்களில் சனிக்குத் தனிஇடம் கிடையாது. திருநள்ளாற்றில் கூட (கோஷ்ட்ட) விமான மூர்த்தமாகத்தான் உள்ளது. சனிக்கு மந்தன், சனைச்சரன் என்ற பெயர்களும் உண்டு.

சனைச்சரன் என்பதுதான் கால வெள்ளத்தில் சனீஸ்வரன் என்று மாறி, சிவனுக்கு இணையாகக் கூறிப் பல புனைந்துரைக் கதைகளும் வந்தன.

நளன் சனியின் துன்பம் நீங்க நள்ளாறப்பரை வணங்கி நலன் பெற்றான். ஆனால், அங்கு செல்லும் மக்கள் நள்ளாறப்பரை மறந்து சனியை மட்டும் வணங்கி வருவது வேதனைக்குரியதாகும். 'நாள்களும், கோள்களும் சிவனடியார்களை ஏதும் செய்யா' என்று ஞானசம்பந்தர் 'வேயுறு தோளி பங்கன்' என்ற பாடலைப் பாடியருளினார். அப்பாடலில் நவகோள்களும் அடியவர்களுக்கு நன்மையே செய்யும்; அதன் சேட்டை செல்லாது என்று பாடியருளினார்.

திருவாரூருக்கு அண்மையில் உள்ள அருட்தலம் திருக்கோளிலி. இக்கோயிலில் உள்ள நவகோள்கள் (நவக்கிரகம்), கோளிலிப் பெருமானை நேர்வரிசையாக நின்று கைகூப்பிய வண்ணம் உள்ளது - பெருமான ஆணை கேட்டு. ஆம்! நவகோள்களும் கோளிலிப் பெருமானை வணங்க, நாம் போய் கோள்களை வணங்க வேண்டுமா?

முதல் அமைச்சரே நம் நண்பரானால் காவற்காரனுக்குக் கையூட்டு கொடுத்து அவனோடு சமமாக இருந்து பேசுவோமா? அவன்தான் பேசுவானா?

இக்கோளிலிப் பாடலில் ஞானசம்பந்தப் பெருமான், 'அன்பர்களே! இங்கு குடிகொண்டிருக்கும் கோளிலிப் பெருமானை வணங்குங்கள்' என்றார். உடனே நம்மவர், 'வணங்கினால என்ன பலன்? என்று கேட்டனர். பலன் இன்றிச் செயல்படுவோமா நாம்?

ஞானசம்பந்தர், 'அன்பனே! கோள் இல்லாப் பெருமானை வணங்கினால் என்ன பலன் என்றா கேட்கிறாய்? அவர்தான் கோள்களே இல்லாதவராயிற்றே! நவகோள்களும் அதனால் வரும் கேடுகளும் உன்னை மட்டுமல்ல; உன்மகன், உன் பேரப்பிள்ளைகளுக்குக்கூட தீங்குசெய்யாமல் தடுக்கும் சக்தி அவருக்குத்தான் உண்டு.' என்கிறார்.

இதோ அப்பாடல்:-

*நாளாய போகாமே நஞ்சனியும்*
*கண்டனுக்கே*
*ஆளாய அன்பு செய்வோம்*
*மடநெஞ்சே அரன் நாமம்*
*கேளாய நம் கிளை கிளைக்கும்*
*கேடுபடாத்திறம் அருளி*
*கோளாய நீக்குமவன் கோளிலி*
*யெம் பெருமானே.*

*- ஞானசம்பந்தர் -*

திருக்கோளிலி என்ற இத்திருத்தலம் திருவாரூர் எட்டுக்குடிசாலையில் திருவாரூரிலிருந்து 19 ஆவது மைலில் உள்ளது. தற்போது திருக்குவளை என வழங்கப்படுகிறது.

நவகோள்களும்பெருமான் ஆணை வழி நடப்பவை. அவற்றை மாற்றவோ, கூட்டவோ, குறைக்கவோ முடியாது. அப்படி மாற்றம் செய்வதானால் சிவ பெருமான்தான் செய்ய வேண்டும்.

**த.விசுவநாதன்**

அப்படியிருக்க, நவகோள்கள் எப்படி முக்கிய இடம் பிடித்தன? அது நம் அறியாமையாகும். வடமாநிலத்தில் சிவாலயம் எதிலும் நவகோள்களுக்கு இடம் இல்லை. 12 சோதிலிங்கத் திருத்தலங்களில் தமிழக சோதிலிங்கம் உள்ள இராமேஸ்வரத்தில் மட்டுமே நவகோள்கள் உண்டு.

இறைவனிடத்தில் பக்தியிருக்குமானால், இவை ஏதும் செய்யா. அதனால்தான் அருணகிரியார் "நாள் என் செய்யும், வினைதான் என் செய்யும் எனை நாடி வந்த கோள் என் செய்யும்?" என்றார்.

சிவ ஆகமம் எதிலும் வேதத்திலும் நவகோள்கள் வழிபாடு பற்றிக் கூறப்படவில்லை. திருமுறைகளிலும் கூறப்படவில்லை. சங்க இலக்கியங்களில் வினை பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நவகோள் பற்றிய குறிப்பேதும் இல்லை. சிவநெறியில் நவகோள்களுக்கு இடம் இல்லை.

(- 'ஓம் சக்தி' மார்ச் 1999 இதழிலிருந்து)

# நவக்கிரக வழிபாடு மக்களுக்குத் தேவை

சைவ சமய ஆரம்ப காலத்தை எவராலும் திட்டவட்டமாகக் குறிப்பிட முடியாது. ஏனைய சமயங்களின் ஆரம்பகாலம் குறிப்பிட முடியும்.

சிந்துவெளியின் அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த சிவலிங்கங்கள், சிவவழிபாடு ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென எடுத்துக் காட்டுகின்றன.

வேதங்கள் சைவத்தின் முதனூல்கள். இவை வடமொழியில் உள்ளன. வேத அங்கங்கள் சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம்,சந்தசு என ஆறுபகுதிகளாக உள்ளன.

சோதிடம் நவக்கிரக அடிப்படையில் ஆக்கப்பட்ட பகுதியே. எனவே நவக்கிரக வழிபாடு சைவ நெறியுடன் இணையவில்லை என்பதைக் கூற முடியாது.

இந்தியாவில் நவக்கிரக கோயில்கள் பெரிய கட்டடங்களில் அமையாவிடினும் ஒன்பது நவக்கிரகங்களுக்கும் பின்வருமிடங்களில் கோயில்கள் இருப்பதை, விசேட வழிபாடு இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

சூரியனுக்கு ஆடுதுறை; சந்திரனுக்குத் திருப்பதி; செவ்வாய்க்குப் பழனி; புதனுக்கு மதுரை; வியாழனுக்கு திருச்செந்தூர்; சுக்கிரனுக்கு ஸ்ரீரங்கம்; சனிக்குத் திருநள்ளாறு; இராகு, கேதுவுக்கு ஸ்ரீ காளகாஸ்- என்ற இடங்களில் விசேட விழிபாடுகள் உண்டு.

நீண்ட காலம் சோதிட ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் எமது குடும்பம் தங்கள் ஆய்வுகளுக்காகத் தமிழ்நாடு செல்வது வழக்கம். தமிழ் நாடெங்கும் நவக்கிரக வழிபாடு மேலோங்கி வளர்ந்து கொண்டே இருக்கிறது.

இலங்கையிலும் நவக்கிரக வழிபாடு வளர்ந்து வருவதை - புரட்டாதி மாதச் சனிவாரங்களில் சனிபகவான் முன் நிற்கின்ற பக்தர்களின் கூட்டத்தைக் கொண்டு தீர்மானிக்கலாம்.

சோதிடத்தில் கிரகங்களின் பங்களிப்பு நூறுவீதம் காணப்படுகின்றது. ஒருவரது ஆயுள், கல்வி, செல்வம், திருமணவாழ்வு, உத்தியோகம், வீடுகள், காணிகள், வெளிநாட்டுப் பிரயாணங்கள், புத்திரப்பேறு இவற்றை ஆராய அவை உதவுகின்றன.

அன்றாட நிகழ்ச்சிகளான பதவியேற்கும் வைபவம், குடிபுகும் வைபவம், வித்தியாரம்பம் போன்ற எக்கருமமாயினும் சுபநேரம் கணிக்கப்பட்டே செய்யப்படுகின்றன.

அழிவுப் பாதையில் உள்ள எரிமலைகள், பூகம்பநாசம், போர்கள், அணுக்குண்டு வீச்சு, கிபீர்விமானக் குண்டு வீச்சு இவையும் கிரக சாரத்தால் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியவில்லை.

**சோதிட கலாநிதி**
**ஐயாத்துரை சரவணபவன்**
(கொக்குவில்)

சிவனை, பிள்ளையாரை, முருகனை, உமையை வழிபடுங்கள். ஆனால் எமது பரம்பரைகளது வழிபாட்டில் தொடர்ந்து வருகின்ற எந்த வழிபாட்டையும் கைவீடாதீர்கள். கைவிட்டால் அழிவு உண்டு.

அட்டம சனியில், ஏழரை[illegible] மரணமடைவதையும் 6 இல், 8 இல் குருவரும் போது வீடுகள் கொள்ளையிடப்படுவதையும் நான் நன்கறிவேன்.

எத்தனையோ பேரறிஞர்கள் பல நூல்களையும், உபதேசங்களையும் செய்து மனிதன் பின்பற்றும் செயல்களைக் குறை கூறுகின்றனர். பேரறிஞர் இங்கர்சால் 'மூடக் கொள்கைகள்' என்ற புத்தகத்தையே எழுதியுள்ளார். டாக்கர் ஏபிரகாம் கோவூர் இலங்கையில் பல இடங்களுக்கும் சென்று "பேய், பிசாசு, சூனியம் என்று ஒன்றும் இல்லை. நீங்கள் பயப்படுவது தவறு!" எனத் தனது சீவிய காலம் மட்டும் கூறினார். சில ஆராய்ச்சிகளையே செய்து காட்டினார். ஆனால் மக்களைத் தங்கள் கொள்கைக்குக் கொண்டுவர முடியவில்லை.

நவக்கிரகங்களால் ஒரு நாட்டை ஆக்கவும் முடியும். அதை இரண்டாகப் பிரிக்கவும் முடியும். 1945இல் இரண்டாகிய ஜேர்மனி 1998இல் ஒன்றாகியது.

இந்தியா வருடந்தோறும் தேர்தல் நடத்துகின்றது. இது சனிபகவானின் சுற்றோட்டத்தால் ஏற்படும் தாக்கமே.

அரசியல் வாதிகளின் மூளையில் ஏறும் சனிபகவான் சந்தர்ப்ப வாதப் பேச்சுக்களைப் பேசவைத்து அவர்களால் நாட்டையும் மக்களையும் அழிக்கின்றார்.

எனது மதிப்புக்குரிய பேராசிரியர் வை.இரத்தினசபாபதி அவர்களுக்கும் சஞ்சீவிக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

நாம் நவக்கிரகங்களைத் தினந் தோறும் வழிபட்டும் மூலமூர்த்திகளையும் வழிபட்டும் வாழ்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்பின் நிறம் கறுப்பு

அழகிய சங்கீத உலகமாய் வகுப்பறை. அகரம் முதல் எழுத்துக்களை அறிமுகப்படுத்த வேண்டிய ஆரம்பக் கல்விக் கூடம் அது. பொன்னாணயச் சிதறல்களாய் குழந்தைகளின் கலகலத்த சிரிப்பு. கல்விக் கூடத்துக்குரிய அமைதி பேணும் எத் தனிப்புக்களாய் இடையிடையே ஆசிரியர்களின் கண்டிப்புக் கலந்த கட்டளைகள். உண்மையில் குழந்தைகள் மிருதுவான இசைக்கருவிகள். அதிலும் வளிக்கருவிகள். அவர்களை மீட்டுகின்ற இளந்தென்றலாய் ஆசிரியர்கள் அமைந்து விட்டால் அற்புதமான சிருஷ்டிப்புக்கள் குழந்தைகளிடமிருந்து பிறக்கும் - நிச்சயமாக.

தமிழ் ஆசிரியர் வந்து கொண்டிருந்தார். கம்பீரமான தோற்றம். கனிவு கண்களில் தேங்கிக் கிடந்தது. கட்டளையிடாதே வகுப்பில் அமைதி படர்ந்தது. எனினும் கற்றலுக்குரிய ஆர்வம் பிஞ்சு முகங்களில் படிந்திருந்தது.

"குழந்தைகளே! இன்று நாங்கள் நிறங்கள் பற்றிப் படிப்போம்"

ஆரம்பித்த கற்பித்தலோடு குழந்தைகளின் மழலைக்குரல்கள் இணைய



பிள்ளைமையக் கல்வி முழுமையாய்த் தொடர்ந்து கொண்டிருந்தது. பூக்களையும் பழங்களையும் வரிசைப்படுத்தி அவற்றின் நிறங்களைச் சொல்லுவதாய், விளையாட்டுத்தனமாய் அறிவுப்பரம்பல் நிகழ்ந்து கொண்டிருந்தது.

பாடவேளை முடியும் நேரம் குழந்தைகளின் எழுத்துப் பயிற்சிக்கானது. ஏதாவது பிடித்தமான மூன்று பொருள்களை எழுதி அவற்றின் நிறங்களையும் எழுதி வரும்படியான ஆசிரியரின் பணிப்புப் பிறந்தது. தொடர்ந்து திருத்தத்துக்காக நீட்டப்பட்ட கொப்பிகளுடன் குழந்தைகளின் நிரல் நகர்ந்து கொண்டிருந்தது. திருத்திக்கொண்டிருந்த ஆசிரியர் சடுதியாய் நிமிர்ந்தார்.

மாம்பழம் - மஞ்சள்
மல்லிகைப்பூ - வெள்ளை
அன்பு - கறுப்பு

முதலிரு சரிகளுக்குப் பிறகு ஆசிரியரின் பேனா ஸ்தம்பித்து விட்டது. முன்னே ஆதித்தன். சுடர்விழிகள். மாறாத ஏழுவயதுக்குரிய மழலைத்தனம் "உணர்ச்சிகளுக்கு நிறம் இருக்காதே...." மெதுவாய்ச் சொன்னார்.

"அன்பு எண்டா அம்மாதானே சேர். அதுதான் சேர்.... மூண்டு மாதத்துக்கு முன்னம் செத்துப்போன என்ரை அம்மா. கறுப்பு... சேர்..... அப்பிடியெண்டா..... அன்பு - கறுப்பு எண்டு...." பிள்ளையின் பிஞ்சுக் குரல் அவரது வார்த்தைகளை இடை வெட்டிற்று. சிந்தனைத் தெளிவில் கை சரி குறித்து ஆதரவாய் பிள்ளையின் முதுகு தடவிற்று. ஏனோ அவரது மனம் பாறையாய்க் கனத்தது.

சிந்தனைக் கரு:

**தாய்மையின் சிறப்பு.**

## ஜெயலலிதா - லாலுபி....

( XVI ஆம் பக்கத் தொடர்ச்சி)
கின்றன. ஜனதாதள் கட்சிக்கே வீழ்ச்சி அதிகம். 1991 தேர்தலில் 59 தொகுதிகளில் வென்ற இந்தக் கட்சி 1996 தேர்தலில் 46 தொகுதிகளிலும் 1998 தேர்தலில் 6 தொகுதிகளிலுமே வென்றது.

தற்பொழுது மீண்டும் பிளவுபட்டு பலவீனமடைந்து விட்டது. ஒரு காலத்தில் காங்கிரஸை விட்டால் இந்த நாட்டுக்கு வேறு கதியே இல்லை என்ற நிலைமை இருந்தது.

ஆட்சி தமது கையில் என்ற ஆணவம், பதவி மோகம், பிராந்திய உணர்வுகளை மதிக்காத தன்மை, சரியான தலைமை இல்லாமை போன்ற காரணங்களால் காங்கிரஸ் கட்சி வீழ்ச்சியின் விளிம்பில் வந்து நிற்கிறது.

இந்த முறை மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் நாட்டில் ஒரு தலை உருளுவது நிச்சயம். பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பதவிக்கு வந்தால் ஜெயலலிதாவுக்கு மீள முடியாத வீழ்ச்சி ஏற்படும். அதே போன்று காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும் கருணாநிதி பதவியில் நீடிக்க முடியாது.

### தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டில் நாளை நடைபெறும் முதலாவது கட்டத் தேர்தலில் தி.மு.க.மற்றும் அ.தி.மு.க, த.மா.கா. தலைமையில் மூன்று கூட்டணிகள் போட்டியிடுகின்றன்.

நாளையும் 11ஆம் திகதியும் இரண்டு கட்டங்களாக தமிழ் நாட்டில் நடைபெறும் தேர்தலில் மொத்தம் 39 தொகுதிகளிலும் 362 வேட்பாளர்கள் போட்டியிடுகினறனர். சகல துறைகளிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் தமிழ் நாட்டின் பெரும்பாலான கட்சிகள் ஒருமித்த கருத்தை கொண்டிருந்த போதிலும் 362 வேட்பாளர்களில் 16பேர்மட்டுமே பெண்கள்.

கடந்த காலங்களில் பெண்களுக்காக குரல் கொடுத்த வந்த அ.தி.மு.க. ஒரு பெண் வேட்பாளரை மட்டுமே தேர்தலில் நிறுத்தி உள்ளது. காங்கிரஸ் ஒரு பெண் வேட்பாளரையும் தி.மு.க இரு பெண் வேட்பாளர்களையும் புதிய தமிழகம் கட்சி இரு பெண் வேட்பாளர்களையும் நிறுத்தி உள்ளன.

பாரதீய ஜனதா ஆட்சிக் கவிழ்ப்பில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகித்ததால் சகலரதும் பார்வை தமிழ்நாட்டுப் பக்கம் திரும்பி உள்ளது.

## மலையகத்துக்கு.....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)
காப்புத் தரப்பினருக்கு பெரும் சவாலாக மாறியுள்ளது.

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை கைவிடப்பட்டதாக அரசு அறிவித்தது முதல் புலிகளின் தாக்குதல்கள் கடந்த சுமார் ஏழு மாத காலமாக ஓய்ந்திருந்தன.

தற்பொழுது வடக்கிலும் கிழக்கிலும், தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளிலும் புலிகளின் தாக்குதல்கள், செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. ஜூலை 29ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் புலிகளின் தாக்குதல் அலை கொழும்பினுள்ளும் பரவியுள்ளது. தலைநகரில் அரசாங்க அதியுயர் பிரமுகர்கள், படை உயர் அதிகாரிகள்,தமிழக்கட்சிகளின் தலைவர்கள் மீது தற்கொலைத் தாக்குதல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கடந்த சில வாரங்களில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் வெளியிட்ட தகவல்களின்படி புலிகள் ஆரம்பித்துள்ள புதிய தாக்குதல் அலை பல இலக்குகளைக் கொண்டிருப்பதை தெளிவாகக் காட்டுவதாகப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளகப் புலனாய்வுப் பணியகம் திரட்டிய தகவல்களின்படி புலிகள் ஆரம்பித்துள்ள புதிய தாக்குதல்கள் வெறுமனே இராணுவ, பொலீஸ் நிலைகளை மட்டும் இலக்காகக் கொண்டவை அல்ல என்பதும் அதியுயர் பிரமுகர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் புலிகளின் முக்கிய இலக்குகள் என்பதும் அத்துடன் முக்கிய பொருளாதார இலக்குகள் மீதும் புலிகள் குறிவைத்துள்ளனர் என்பதும் தெளிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் உத்தரவுகளுக்குக் கட்டுப்படாதோர் மீதும் புலிகளின் கவனம்திரும்பி இருப்பதாகவும் உள்ளகப் புலனாய்வுப் பணியகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

இப்பத்தியை எழுதிக்கொண்டிருந்த சமயம் வவுனியாவில் பெரும் குண்டுத்தாக்குதல் ஒன்று இடம்பெற்றிருந்தது. புளொட் அமைப்பின் உப தலைவரும் அந்த அமைப்பில் சக்தி மிக்கவராகக் கருதப்பட்டவருமான என்.மாணிக்கதாஸன் இத்தாக்குதலில் பலியானார். அவருடன் புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி இளங்கோ (தர்மலிங்கம் தேவராஜா - வயது 30, தாண்டிக்குளம்) என்பவரும் போரதீவுப்பற்று பிரதேசசபை உபதலைவராக இருந்த புளொட் உறுப்பினர் வினோ(முருகேசு குணரட்ணம் - மட்டக்களப்பு) என்பவரும் பலியாகினர்.

றம்பைக்குளம் பகுதியில் உள்ள புளொட் அமைப்பின் லக்கி முகாம் எனப்படும் பொதுமக்கள் தொடர்புப் பணிமனையில் தங்கியிருந்த சமயமே மாணிக்கதாஸனும் ஏனையோரும் குண்டுத் தாக்குதலில் பலியாகினர்.

நண்பகல் 12.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் சிக்கியே மாணிக்கதாஸன் பலியானதாக வவுனியாவில் இருந்து முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன. சில வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் உட்பட பல செய்தி ஊடகங்கள் அது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்றே செய்தி வெளியிட்டன.

சம்பவம் நடந்தவேளை மாணிக்கதாஸன் அலுவலகத்தின் மேல்தளத்தில் தங்கியிருந்தார். அச்சமயம் கீழே நின்றிருந்த உறுப்பினர் வினோ மாடிப்படிகளில் ஏறி மாணிக்கதாஸனிடம் சென்றவேளை பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்துள்ளது. வினோ அந்த இடத்திலேயே உடல்கருகிப் பலியானார். கீழ்தளத்தல் நின்றிருந்த புளொட் உறுப்பினர்கள் மாடிப்படிகள் வழியே மேலே ஓடிச் சென்றபோது கருகிய நிலையில் - தலை வேறாக அடையாளம் காணமுடியாத நிலையில் - வினோவின் சடலம் கிடந்துள்ளது.

அச்சடலம் தற்கொலைக் குண்டுதாரியினுடையது என்ற சந்தேகம் முதலில் ஏற்பட இதுவே காரணமாகியது.

இத்தாக்குதல் அலுவலக மேற்கூரையில் மறைத்துப் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் ரக குண்டு ஒன்றின் மூலமே நடத்தப்பட்டிருப்பதாக இதனை எழுதும் சமயம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்தத்தாக்குதல் சம்பவத்துக்கு புலிகளே காரணமாக இருந்திருக்கலாம் என பொலீஸார் நம்புகின்றனர். அண்மைக்காலமாக மோசமடைந்து வந்த வவுனியா பாதுகாப்பு நிலைவரத்தினை இச்சம்பவம் மேலும் கேள்விக்குரியதாக்கிவிட்டது.

யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்ட மாணிக்கதாஸன் 1970களின் பிற்பகுதியில் புளொட் அமைப்பில் இணைந்தார். அந்த அமைப்பின் தலைவர்கள் பலர் அடுத்தடுத்து கொல்லப்பட்டதைத்தொடர்ந்து அமைப்பின் பொறுப்புக்களை படிப்படியாக ஏற்ற அவர் இறுதியில் அந்த அமைப்பின் உப தலைவராகவும், இராணுவத் தளபதியாகவும் விளங்கினார்.

40 வயதான மாணிக்கதாஸன் வவுனியாவில் திருமணம் செய்தவர். அவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

அண்மையில் அவர் வெளிநாடுகள் பலவற்றுக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து அவர் நாட்டைவிட்டு இரகசியமாக வெளியேறிவிட்டதாக இங்கு தகவல்கள் பரவியிருந்தன. ஆனால் அவர் மீண்டும் நாடு திரும்பி அந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மாணிக்கதாஸசன் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு புலிகள் மீதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

புலிகளே இத்தாக்குதலை நடத்தி இருப்பின் கூரைக்குள் பொருத்திய குண்டு மூலம் புலிகள் வெற்றிகரமாக நடத்திய இரண்டாவது தாக்குதல் சம்பவமாக இது இருக்கும்.

கடந்த ஆண்டு நல்லூரில் இதே பாணியில் நடத்தப்பட்ட கூரைக் குண்டுத்தாக்குதலில் யாழ்.மாநகரசபை மேயர் பொன். சிவபாலன், யாழ்.நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் மெண்டிஸ் உட்பட பல படைஅதிகாரிகள் கூண்டோடு பலியாகினர்.

யாழ். மாநகரசபை பணிமனையாக இயங்கிய இந்து விடுதிக் கட்டடத்தின் கூரை சீலிங்கிற்குள் மறைத்துப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சக்தி மிக்க கிளைமோர் குண்டு வெடித்ததில் அந்த அனர்த்தம் நேர்ந்தது தெரிந்ததே. *

## விடைகள்

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வித்தியாசம் தெரிகின்றதா?


1. முகில்.
2. பறவையின் நிறம்.
3. மாணவனின் தோள்பை.
4. தேங்கி நிற்கும் வெள்ளம்.
5. கட்டடம்.
6. மாணவியின் சட்டையில் பூ அடையாளம்.

### பொருத்தமான கால்கள் எவை?

1 - C
2 - D
3 - A
4 - B

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.118



### சொற்சிலம்பம் இல. 118

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

..........................இங்கே வெட்டுக..........................

முடிவுத் திகதி:- 10-09-1999

### இடமிருந்து வலம்

1. அரசியல்வாதிகளுக்கு உள்ளது இது. 5. வேக`வை. 7. களவெடு. 8. கரத்தில் உள்ளது. 10. அந்தரி. 12. சுவை பார். 13. ஒளியுள்ளவேளை உருமாற்றம். 17. கவ்வு. 18. சமதளத்தில் விரிப்பது. 19. எரிந்தால் மிஞ்சுவது. 20. படி. 21. பெருக்கல் குறி. 22. ஓர் இந்திய மாநிலம். 23. தீயைத் தொட்டால்.....

### மேலிருந்து கீழ்

1. அச்சு நிலையம். 2. மரம். 3. விட்டுவிடல். 4. சமிக்ஞை. 5. ராணி. 6. கற்கால ஆயுதம். 9. ஆசைப்படல். 11. புத்திசாதுரியம், 14. அரிப்பு. 15. வாய் வீச்சு. 16. மிடுக்கு. 19. மாட்சிமை. 20. இதுவும் எரிந்தால் மிஞ்சுவதுதான். 21.மறி.

### சொற்சிலம்பம் 116 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. முகத்துதி. 5. தலை. 6. தடு. 7. மிருகம். 9. லாம்பு. 11. வணபிதா. 13. கவளம். 15. அல்லர். 16. மாமா. 17. பாரதம். 18. மின்ன. 19 .தாவல். 20. பரு. 21 திணை 22. மிகுதுயர்.

### மேலிருந்து கீழ்

1. முதலாளி. 2. கடும். 3. துமி. 4. திருவளர். 5. தம்பி. 8. கணம். 10. புகல். 12. தாயுமானவர். 14. வலம். 15.அரவணை. 16. மான். 17. பாதாதி. 18. மிருது. 20. பகு.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு** :- வி.பிரான்சீஸ்,
93, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு** :- ஞா.இராஜதேவி,
'பெதனி'
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**மூன்றாம் பரிசு** :- யோகறட்டினேஸ்வரி நூபவரதன்
நெசவு நிலைய வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 117 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா - லாலுபிரசாத் வலையில் விழுந்த சோனியா!

இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நாளை ஆரம்பமாகின்றது. தேர்தல் நான்கு கட்டங்களாக நடத்தப்படுகிறது. முதலாவது கட்டமே நாளை நடைபெறுகிறது. நாளை நடைபெறும் முதலாவது கட்டத் தேர்தலில் தமிழ் நாட்டிலும் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

தமிழ் நாட்டில் 39 தொகுதிகளில் 19 தொகுதிகளில் நாளை வாக்குப் பதிவு நடைபெறும். இரண்டாவது கட்டத் தேர்தல் 11ஆம் திகதி நடைபெறும்போது எஞ்சிய 20 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு இடம்பெறும்.

தேர்தல் நடைபெறவுள்ள சமயம் இந்திய அரசியலில் இடம்பெற்ற முக்கிய திருப்பங்களில் ஒன்று, காங்கிரஸ் தனது தனிக்கட்சி ஆட்சிக் கோஷத்தைத் தொப்பென்று கைவிட்டதுதான்.

ஜெயலலிதாவினதும் லாலுபிரசாத் யாதவ்வினதும் வலையில் சோனியா விழுந்து விட்டார்.

### கூட்டணிக்குள் முரண்பாடு

தேர்தல் நடைபெற உள்ள இந்த சமயத்தில் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தமிழ்நாட்டிலும் பிஹாரிலும் அதன் பிரதான கூட்டணிக் கட்சிகளுடன் ஏற்பட்ட

**உலக உலா**
**என்.பி.சீலன்**

முரண்பாடுகளே. தமிழ்நாட்டில் அ.தி.மு.க பொதுச்செயலர் ஜெயலலிதாவையும் பிஹாரில் ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் லாலுபிரசாத் யாதவ்வையும் சமாதானப்படுத்துவதற்காகவே மத்தியில் தனியாட்சி என்ற தனது முன்னைய நிலைப்பாட்டை காங்கிரஸ் மாற்றிக்கொண்டுள்ளது

## மத்தியில் தனிக்கட்சி ஆட்சி என்ற கோஷம் புஸ்வாணம்

போன்று தெரிகிறது.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலைமை ஏற்பட்டால் மத்தியில் கூட்டணி அரசு அமைப்பது குறித்து காங்கிரஸ் பரிசீலனை செய்யும் என்று சோனியா அறிவித்திருப்பதற்கு ஜெயலலிதாவினதும் லாலு பிரசாத் யாதவ்வினதும் நிர்ப்பந்தமே காரணம் என்பதில் சந்தேகமில்லை.

"பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அளிக்கும் வாக்கு நாட்டில் ஸ்திரமின்மையை உருவாக்கும் வாக்கு. காங்கிரஸுக்கு அளிக்கும் வாக்குத்தான் நிலையான அரசுக்கான வாக்கு" என்று காங்கிரஸ் பிரசாரம் செய்து வந்தது. இனி இந்தக் கோஷம் எடுபடாது. ஆட்சிக்கு வர முன்னரே சோனியாவுக்கு தொல்லை ஆரம்பித்துவிட்டது. ஆட்சியைக் கைப்பற்ற நேர்ந்தால் வாஜ்பாய் எதிர்நோக்கிய நெருக்குதல்களைவிட மோசமான நெருக்குதல்களை சோனியா எதிர்நோக்கலாம்.

ஜெயலலிதாவுக்கு எதிராகவும் லாலுபிரசாத்துக்கு எதிராகவும் ஊழல் வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆட்சியில் நேரடிப் பங்குவகிப்பது மூலமே வழக்குகளிலிருந்து தப்புவது உட்பட தமது நோக்கங்களை நிறைவேற்றலாம் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

விழுப்புரம் கூட்டத்தில் சோனியாவுடன் ஒரே மேடையில் தோன்றுவதற்கு ஜெயலலிதா தவறி இருந்தார். இதற்காக ஜெயலலிதா தெரிவித்த காரணம் ஏற்கக்கூடியதல்ல.

விழுப்புரம் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்னையில் இருந்து தாம் புறப்பட்டதாகவும், தாம் பரம் செல்வதற்கே பல மணி நேரம் கடந்து விட்டதாகவும், சமுத்திரம் போன்று திரண்ட மக்கள் கூட்டத்தை விட்டுப்போக தமக்கு மனம் வரவில்லை என்றும் ஜெயலலிதா சமாதானம் கூறுகிறார்.


இந்த உண்மை சோனியாவுக்குத் தெரியும் என்றும் ஆனால் கலகம் மூட்டிவிட கருதுபவர்களுக்கு இது தெரியாது என்றும் ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜெயலலிதாவுக்கு அக்கறையில்லை

ஆனால் விழுப்புரம் கூட்டம்நடந்து மூன்று நாள்களின் பின்னர் நெல்லூர் செல்லும் வழியில் சோனியா மீண்டும் சென்னை வந்தார். அவரது மகன் ராஹுல் காந்தியும் அவருடன் வந்திருந்தார். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து ஹெலி மூலம் அவர்கள் நெல்லை சென்றனர்.

விழுப்புரம் கூட்டத்தில் ஏற்பட்ட விரிசலைச் சமாளிப்பதற்காக ஜெயலலிதா விமான நிலையம் வந்து சோனியாவைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா வரவில்லை. முன்னாள் மத்திய அமைச்சர் சேடப்பட்டி முத்தையாவையும் மற்றும் அ.தி.மு.க நிர்வாகிகளில் ஒருவரான சத்தியமூர்த்தியையும் ஜெயலலிதா விமானநிலையத்திற்கு அனுப்பியிருந்தார்.

சோனியாவும் ஜெயலலிதாவும் ஒரேமேடையில் பேசும் வகையில்




இன்னொரு கூட்டத்தை ஏற்பாடு செய்யலாம் என்று இவர்கள் இருவரும் சோனியாவுக்கு யோசனை தெரிவித்தனர். ஆனால் சோனியா இதற்கு சாதகமாகப் பதில் அளித்ததாகத் தெரியவில்லை.

### காங்கிரஸ் தொண்டர் மனக்கசப்பு

விழுப்புரம் கூட்டத்தில் சோனியாவுடன் ஒரே மேடையில் பேச ஜெயலலிதா தவறியமை, அதன் பின்னர் சென்னை வந்தபோது சோனியாவைச் சந்திக்கத் தவறியமை ஆகியவை காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் மனவேதனையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கூட்டத்திற்கு திட்டமிட்டபடி முன்கூட்டியே சென்னையில் இருந்து புறப்பட்டிருந்தால் ஜெயலலிதா உரிய நேரத்தில் விழுப்புரம் வந்து சேர்ந்திருக்க முடியும். ஆனால் மிகுந்த தாமதமாக சென்னையில் இருந்து புறப்பட்டு விட்டு நடுவழியில் மக்கள் கூட்டத்தை கடந்து வர முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்ட விளக்கத்தை காங்கிரஸ் தொண்டர்கள் ஏற்கவில்லை.

### சோனியா முதலில் விரும்பவில்லை

அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைப்பதற்கு ஆரம்பத்திலிருந்தே சோனியா அதிக அக்கறை காட்டவில்லை. காங்கிரஸில் இருந்து பிரிந்து செல்வதற்கு முன்னர் சரத்பவாரே இந்த விடயத்தில் ஆர்வம் காட்டி வந்தார்.

சரத்பவார் பிரிந்து சென்ற பின்னர் இந்த விவகாரத்தை காங்கிரஸ் பிற்போட்டு வந்தது. அ.தி.மு.க.வை கைவிட்டு மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸுடன் கூட்டணி அமைப்பது குறித்து காங்கிரஸ் தீவிரமாக ஆலோசனை செய்து வந்தது.

1998 மக்களவைத் தேர்தலின் போது பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்திருந்த சமயம் சோனியாவை ஜெயலலிதா கீழ்த்தரமாக விமர்சித்து வந்தார். "அரசியல் அனுபவம் இல்லாத சோனியா பிரதமர் பதவிக்கு ஆசைப்படுவது ஒரு நப்பாசை" என்று ஜெயலலிதா தெரிவித்தார். 'சோனியாவை ஓர் அரசியல் தலைவராகவே நான் கருதவில்லை. நூறுகோடி மக்கள் உள்ள நாட்டில் நம்மை ஆள ஓர் இந்தியனுக்குக் கூடத் தகுதி இல்லையா? என்று அப்பொழுது ஜெயலலிதா கேள்வி எழுப்பினார். இதனால்தான் சோனியாவைப் பிரதமர் ஆக்குவேன் என்று தற்போதைய பிரசாரக்கூட்டங்கள் எதிலும் ஜெயலலிதா இன்னும் பேசவில்லை.

தேர்தலுக்குப் பின்னர் சுதந்திரமாக முடிவுகளை எடுக்கும் வாய்ப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே தற்போது சோனியா விடயத்தில் எந்தக் கருத்தும் கூறாமல் கவனமாக இருக்கிறார் ஜெயலலிதா.

### பிஹார் நிலவரம்

பிஹாரில் தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக காங்கிரஸுக்கும் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சிக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. பிஹாரில் ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைமையிலான கூட்டணி ஒதுக்கிய தொகுதிகளை விட கூடுதலாக இரண்டு தொகுதிகளில் போட்டியிட காங்கிரஸ் முடிவு செய்திருப்பதே

## நாளை முதலாவது கட்ட வாக்களிப்பு ஆரம்பம்.

இந்த விரிசலுக்கு காரணம்.

இந்த இரு தொகுதிகளும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள். தொகுதிப் பங்கீட்டில் அதிருப்தி கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ராஷ்ட்ரிய ஜனதாதள் கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டது. தற்போது இந்த இரு தொகுதிகளிலும் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியும் தனது வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

பிஹாரில் ராஷ்ட்ரிய ஜனதாதள்-காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக சமதாக் கட்சி, ஐக்கிய ஜனதாதள், பாரதீய ஜனதாகட்சி ஆகியவை கூட்டணி அமைத்துள்ளன. இந்திய மாநிலங்களில் இம்முறை பெருமளவு தேர்தல் மோசடிகள் இடம் பெறலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கின்றன. பிஹாரில் போலியான எண்களைக் கொண்ட வாக்குப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. பிஹாருக்கு அனுப்பப்பட்டிருந்த வாக்குப் பெட்டிகளில் ஆயிரத்து 387 வாக்குப் பெட்டிகளில் போலி எண்கள் குறிப்பிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### 10 ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றம்

114 வருடங்கள் பழைமை வாய்ந்த காங்கிரஸ் உட்பட ஏழு தேசிய அந்தஸ்துள்ள கட்சிகள் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றன. காங்கிரஸ், பாரதீய ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, பகுஜன் சமாஜக் கட்சி, ஐக்கிய ஜனதாதளம், ஜனதா தளம் (எஸ்) ஆகியவையே இந்தக் கட்சிகள்.

இவற்றில் இரண்டு ஜனதாதள் கட்சிகளுக்கும் தற்காலிகமாகவே தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தலில் கிடைக்கும் வாக்குப்பலத்தை வைத்தே தேர்தல் கமிஷன் நிரந்தர அந்தஸ்து வழங்கும்.

கடந்த பத்து ஆண்டுகளாக தேசிய கட்சிகளுக்கு எதிரான பிராந்திய கட்சிகள் புதிய உத்வேகம் பெற்று வந்துள்ளன. 1991, 1996, 1998 தேர்தல்கள் இதனை நன்கு நிரூபிக்

(XV ஆம்பக்கம் பாக்க)

---

இம்முறை சோனியாவுடன் சேர்ந்து அவரது மகள் பிரியங்காவும் மகன் ராஹுலும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 1998 மக்களவைத் தேர்தலில் சோனியா போட்டியிடாவிட்டாலும் காங்கிரஸ் வேட்பாளர்களுக்காக நாடு முழுவதும் பிரசாரத்தில் ஈடுபட்டார். சோனியாவுடன் பிரியங்காவும் சென்றார். இம்முறை மகன் ராஹுலையும் சோனியா அழைத்துச் செல்கிறார்.

இம்முறை கர்நாடக மாநிலம் பெல்லாரித் தொகுதியில், உத்தரப் பிரதேசம் மாநிலம் அமேதி தொகுதியிலும் சோனியாவுடன் சேர்ந்து தீவிரப்பிரசாரத்தில் ஈடுபட பிரியங்கா முடிவு செய்துள்ளார். பெல்லாரியில் பாரதீயஜனதா வேட்பாளர் சுஷ்மாஸ்வராஜின் பிரசார வேகமும் உத்தியும் காங்கிரஸ் தலைவர்களை கவலையடைச் செய்துள்ளது.

சுஷ்மா ஸ்வராஜ் பெல்லாரித் தொகுதியிலேயே முகாமிட்டிருந்து பிரசாரக் கூட்டங்களை நடத்திவருகிறார். அத்துடன் பிரசாரக் கூட்டங்களில் அவர் கன்னட மொழியில் பேசுவது அவருக்கு வரவேற்புக் கிடைக்க மற்றொரு காரணம்.

சுஷ்மா ஸ்வராஜுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தனது பிரசாரம் அமையவேண்டும் என்பதற்காக பிரியங்கா தன்னைத் தயார் படுத்தி வருகிறார். மக்களைக் கவரக்கூடிய விதத்தில் முக்கியமான கன்னட வார்த்தைகளை கற்று வருகிறார்.

தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கலந்துகொள்ளச் செல்லும் இவர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படுகிறது. சோனியா பேசும் கூட்டங்களில் நான்கு பேர் மட்டும் அமரக்கூடிய உயரமான மேடை அமைக்கப்படுகிறது. மேடையைச் சுற்றி குண்டு துளைக்க முடியாத கண்ணாடிகள் பொருத்தப்படுகின்றன. பொது மக்கள் மேடையில் இருந்து 200 அடி தூரத்திலேயே இருக்க முடியும். கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொதுமக்கள் நவீனஇயந்திரம் மூலம் சோதனை செய்யப்பட்டே கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

கூட்டம் நடைபெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன் சென்றே பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். வெளிநாட்டு அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பைவிட இது கூடுதலானது.

---

சோனியாகாந்தி குறித்து மத்திய அமைச்சர்கள் இருவர் தெரிவித்த கருத்துக்கள் தற்பொழுது இந்திய தேர்தல் அரங்கில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளன.

சோனியா நாட்டுக்குச் செய்த பங்களிப்பு நாட்டின் சனத்தொகையில் இரண்டு பேரை அதிகரிக்க செய்தது மட்டும்தான் என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார். அத்துடன் காங்கிரஸ் கட்சியை அலிகளின் கட்சி என்றும் பெர்னாண்டஸ் கேலி செய்திருந்தார்.

இதற்காக அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் கோரினர். ஆனால் பெர்னாண்டஸ் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டார். தாம் உண்மையைத் தான் சொன்னதாகவும் அவதூறாக எதனையும் பேசவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு மத்திய அமைச்சர் பிரமோத் மகாஜன் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. சோனியாவை மொனிக்கா லுவின்ஸ்கியுடன் ஒப்பிட்டதாக காங்கிரஸ்காரர்கள் பிரமோத் மகாஜன் மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஆனால் தாம் அப்படிச் சொல்லவில்லை என்று பிரமோத் மகாஜன் கூறுகிறார். வெளிநாட்டவரான சோனியா இந்தியாவில் பிரதமராக வர முடியுமானால் ரொனி பிளயரோ பில்கிளின்ரனோ அல்லது மொனிக்கா லுவின்ஸ்கியோ ஏன் இந்தியாவில் பிரதமராக வரமுடியாது என்று கேட்டதாகவே பிரமோத் மகாஜன் தெரிவித்தார்.

வாக்களிப்பு நடைபெறவுள்ள சமயம் இந்த இரண்டு விவகாரங்களையும் கிளப்பி பெண்களின் வாக்குகளைப் பெறுவதில் காங்கிரஸ் நாட்டம் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனித் தட்டுப்பாடும் அதன் பின்னணிகளும்;

# உணவு விநியோக முறை நேர்சீராவது எப்போது?

யாழ்ப்பாணத்தில் இப்போது எங்கும் சீனி என்பதே பேச்சாக உள்ளது. கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக சீனிக்கு பெரும் தட்டுப்பாடு உண்டாகி உள்ளது. வெளிச்சந்தையில் 32 ரூபாவாக இருந்த 1 கிலோ சீனியின் விலை இருந்தாற்போல கிடுகிடுவென உயர்ந்து முதலில் 45 ரூபா முதல் 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. பின்னர் அது 60,70,75 என்று மளமளவென உயர்ந்து இந்த வாரத்தில் சில இடங்களில் 80 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் கடந்த வியாழக்கிழமை வரை அதனை நிறுத்த - கணிசமான அளவு சீனியையேனும் சந்தைக்கு விடுவதற்கு - தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கொழும்பில் இருந்து தனியார்துறையினர் சீனியை தருவித்தால் மட்டுமே அதன் தட்டுப்பாட்டையும் விலையுயர்வையும் தடுக்கலாம் என்றாகி விட்டது. இதற்கிடையில் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் 2,000 மெற்றிக்தொன் சீனியை கப்பல்களில் எடுத்துவர ஏற்பாடாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

கப்பலில் சீனி கொண்டு வருவதற்கிடையில் அதன் விலை நூறு ரூபாவுக்கு உயர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று ஆத்திரப்பட்டார்கள் பாவனையாளர்கள் - மக்கள். சீனி மக்களின் அன்றாடத் தேவைக்குரிய அத்தியாவசியப் பொருள்களில் ஒன்று. அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா என்ற அத்தியாவசிய உணவுப் பஞ்சப்பட்டியலில் அது அடங்குகிறது.

இந்த ஐந்தும் இல்லாவிடில் பஞ்சம், பட்டினி உண்டாகும் என்பது அரசாங்க மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட, வகுக்கப்பட்ட ஒன்றாகும். இயற்கை அனர்த்தம் ஒன்று திடீரென உண்டாகிவிட்டாலும் இந்தப் பஞ்சப்பட்டியல் பொருள்கள் கையிருப்பில் இருந்தால் மக்கள் கஷ்டப்படமாட்டார்கள் என்று கருதப்படுவது வழக்கம். அதில் உண்மையும் உண்டு.

ஆகையால் இந்த அத்தியாவசியப் பொருள்கள் எல்லா நேரங்களிலும் எவ்வித தட்டுப்பாடும் இன்றி கிடைக்க - அவை தாராளமாக சந்தையில் கிடைக்க - ஏற்பாடு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் - பொருள்கள் விநியோகத்திற்குப் பொறுப்பான - அதிகாரிகளின் கடமை.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தரைவழிப்போக்குவரத்து இருந்த காலத்திலேயே, குறிப்பாக மாரிகாலங்களில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது உண்டு. ரயில் போக்குவரத்தும் லொறிப் போக்குவரத்தும் தாராளமாக நடைபெற்ற காலத்தில் கூட இப்படித் தட்டுப்பாடுகள் உண்டாக்கப்பட்டன.

மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை - ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு தேவையான பொருள்களை - கையிருப்பில் வைத்திருக்க - அவை தாராளமாக சந்தையில் கிடைக்கக்கூடிய - ஏற்பாடு முன்னேற்றப்பாடாகவே செய்யப்பட வேண்டும் என்பது அடிக்கடி வற்புறுத்தப்படும் ஒன்றாகும். அரசாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள் கூட இது குறித்து இரண்டு மூன்று தடவைகளாக சொல்லி வருகிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறுவர்.

ஆனால் அத்தகைய ஒரு கையிருப்பை திட்டமிட்ட முறையில் பேணும் நடைமுறை நிலையைக் காணமுடியவில்லை. அதில் அரசாங்கமும் அதிகாரிகளும் அக்கறையாக இருப்பின், அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காவது எந்த வேளையிலும் தட்டுப்பாடு, பற்றாக்குறை, திடீர் விலை உயர்வு ஏற்படாது என்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

தரைப் போக்குவரத்துத் தாராளமாக நடைபெற்ற காலத்திலேயே இத்தகைய நிலை பேணப்படாத தன்மை, ஒருவகை "வியாதி" அரச அதிகாரிகளிடம் இருந்தது. அது பரம்பரை வியாதி

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

யாகி போக்குவரத்துக் கஷ்டம், மிகுந்த இந்தக் காலத்துக்கும் தொற்றி இருப்பது மக்களின் துரதிர்ஷ்டம்.

மக்களின் இந்தத் துரதிர்ஷ்டத்துக்கு அரச அதிகாரிகளின் அசமந்தம் அல்லது சம்பளத்துடன் கிம்பளமாக தொகைப்பணத்தை உழைப்பது ஆகிய இரண்டில் ஒரு காரணம் இருக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட தேற்றமாகும். அதனால் உணவு மற்றும் பாவனைப்பொருள் விநியோகத்தில் குறைகள் உண்டாகும் போது மக்கள் இந்தத் தேற்றத்தையே மனதில் இருத்தி அரச அதிகாரிகளையும் வர்த்தகர்களையும் மனதுக்குள்ளும் வெளிப்படையாகவும் வசைபாடுவது உண்டு. மக்களின் கஷ்டங்களே அவர்களின் வாயிலிருந்து வசைகளாக வருகின்றன என்பது அதிகாரிகளுக்குத் தெரியாததல்ல.

### பரம்பரை வியாதியா?

எனினும் அவர்களைப் பீடிக்கும் "வியாதி"க்குத் தகுந்த சிகிச்சை வழங்க வேண்டிய, தம்மைத் தாமே மக்கள் காவலர்கள், மக்கள் நலன் நாடிகள் என்று தம்பட்டம் அடிக்கும் அரசியல்வாதிகள் கண்டும் காணாதவர்களாக இருந்து விடுகிறார்கள். அதிகாரிகளுக்கு உள்ள அசமந்தம் அல்லது கிம்பளம் என்ற "வியாதி" இவர்களுக்கும் பெரிய அளவில் தொற்றிக் கொள்கிறது.

கொழும்பு தொடக்கம் பொத்துவில் வரைக்கும், பருத்தித்துறை தொடக்கம் தேவேந்திர முனை வரைக்கும் இந்த வியாதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த வியாதியின் பாதிப்புக்களை இரகசியங்களை வெளிப்படுத்தப் பத்திரிகைகள் முனையும் போதெல்லாம், அவற்றைத் தமது பகைவர்களாகப் பார்க்கிறார்கள் அரசியல்வாதிகள். ஆகையால் லஞ்சமும் ஊழலும் அசமந்தமும் இந்த நாட்டில் இருந்து ஒழிக்க முடியாதவை ஆகிவிட்டன.

இலங்கைக்குப் பொதுவான இந்தவகை "வியாதி" பெரும் சாபக்கேடாகும். போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கையும் இந்தச் சாபக்கேடு தொடர்ந்து கவ்விக் கொண்டிருப்பது மேலும் கவலைக்குரியது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை எல்லாத் துறைகளிலும், அர்த்தங்களிலும், சின்னாபின்னாப்பட்டுப் போயிருக்கிறது. அவற்றோடு மேலதிகமாக அவர்களது அத்தியாவசிய தேவைகளும், சேவைகளும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகி விழுந்து காயப்படுவதும் இப்போதைக்குக் குறையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

யார் யாரைத் தட்டிக் கேட்பது என்ற எவ்வித நியாயமும் இன்றி, அலுவல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறைபாடுகள் என்று வந்ததும் அவற்றை நியாயப்படுத்தக் காரணங்கள் கண்டு பிடிப்பதும் பிரச்சினைகளில் இருந்து தப்பிக் கொள்வதும் அல்லது நழுவிக் கொள்வதும் "நவீன வரன்முறைகளாகி" விட்டன. இவற்றை மாற்றிக் கொள்வதும் மக்கள் நலன் உள்ளார்ந்த ரீதியாகப் பேணப்படுவதும் இனி இயலுமோ என்ற பரிதாபகரமானதும் படுபாதகமானதுமான சூழ்நிலையிலேயே தொடர்ந்து வாழும் நியதி ஆகிவிட்டது. "நவீன வரன்முறைச்" சூழல் மாறும் என்று நம்பிக்கை கொள்வதற்கான ஏதுக்கள் எதுவும் புலப்படவில்லையே!

சரி சீனி விடயத்திற்கு வருவோம். அரசாங்கத்தின் நிர்வாகம் குடாநாட்டில் சீராக முழுமையாக இயங்கத் தொடங்கி மூன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் பொருள்களை கொண்டுவருவது இன்னும் நேர்சீராகவில்லை. கொழும்பில் கப்பலில் பொருள்களை ஏற்றுவது தொடக்கம் அவை பருத்தித்துறையில் இறக்கப்படுவது வரை தாமதங்களும் மற்றும் பலவகை அந்தரங்கங்களும் அரங்கேறுகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் பொருள்களில் அடிக்கடி பற்றாக்குறை ஏற்படுவதும் செயற்கைத் தட்டுப்பாடு உண்டாவதும் அதனால் மக்கள் அதிக விலை கொடுக்க நேரிடுவதும் தடுக்க முடியாதவையாக, தவிர்க்கமுடியாதவையாகிவிட்டன.

உணவுப் பொருள்களைத் தருவிப்பதில் செயலகம், கூட்டுறவுத்துறை, தனியார்துறை என்று முத்தரப்பும் சம்பந்தப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கிடையே வேண்டிய ஒருங்கிணைப்பும், திட்டமிடலும், நல்லுறவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருதரப்பு அடுத்தவர் மீது குறைகூறுவதும் தனிப்பட்ட செல்வாக்கை அல்லது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக தவறு கண்டுபிடிப்பதில் முனைவதாகவுமே உள்ளது. அதனால் மக்களே பாதிக்கப்படுகிறார்கள். உணவுப்பொருள்களை தருவிப்பதிலேனும் திட்டமிடலும், ஒருங்கிணைப்பும், ஒருமுகப்படுத்தலும் இல்லை. அத்தகைய செய்நெறி ஒன்று இருக்குமாயின் இப்போதைய சீனித் தட்டுப்பாடு வந்திருக்க நியாயம் இல்லை.

சீனியைத் தருவிப்பதில் யாழ். செயலகம் மட்டுமே ஈடுபட்டுள்ளது. அவ்வாறு தருவிக்கப்படும் சீனி இதுவரை காலமும் - கடந்த (ஜூலை) மாதம்வரை உலர் உணவு நிவாரணத்திற்கும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. ப.நோ.கூ.சங்கங்கள் நிவாரணம் பெறாத ஏனையோருக்கு விநியோகித்து வந்தது. குடாநாட்டு மக்களின் சீனித் தேவை 810 மெற்றிக் தொன்னாகும்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமும் சீனியைத் தன்பாட்டில் தருவித்து விற்கிறது. கொழும்பில் ஒருகிலோ சீனியின் மொத்த விலை 27 ரூபா 50 சதம். யாழ்ப்பாணத்திற்கு அதனைக் கொண்டு வருவதற்கான கப்பற் கட்டணம் சுமார் 7 ரூபாவாகும். அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் கையாள்வதால் சீனி, அரிசி போன்ற உணவுப் பொருள்களுக்கு கப்பல் கட்டணம் அறவிடப்படுவதில்லை. அது சலுகையாகச் செய்யப்படுகிறது. அதனால் செயலகம் மூலம் வழங்கப்படும் சீனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஒரு கிலோ 29 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

தனியார் துறையினர் கொண்டு வருவதானால் அவர்களின் சீனிக்குரிய கொள்விலை (மொத்த விலைக்கு) 34ரூபா 50சதமாக இருக்கும். சில்லறை விலை ஆகக் குறைந்தது 36 ரூபா வேனும் நிர்ணயிக்க நேரிடும். ப.நோ.கூ. சங்கக்கிளைகளில் ஒரு கிலோ 29 ரூபாவாக விற்கப்படும்போது கூடிய விலைக்கு சீனியை விற்பது கஷ்டம். அதனால் தனியார் வியாபாரிகள் சீனியைத் தருவிப்பதில் அக்கறை கொள்ளுவதில்லை.

உலர் உணவு நிவாரணமும் வழங்கப்பட்ட போது, சீனி தாராளமாகப் பாவனையில் இருந்தது. பற்றாக்குறை உண்டாக வாய்ப்பிருக்கவில்லை. காரணம், ஐந்து பேர் கொண்ட சராசரிக் குடும்பம் ஒன்று 10முதல் 15கிலோ சீனியைப் பெற்று வந்தது. நிவாரணத்துக்குச் சீனி வழங்கப்பட்டதால் அது குடாநாட்டின் மாதாந்தத் தேவையில் அனேகமாக அரை வாசியை ஈடு செய்ததாகக் கணக்கிடப்படுகிறது.



கூட்டுறவு மொ.வி.ஸ்தாபனத்தில் மக்களுக்கு அரைக்கிலோ சீனிப் பங்கீடு நடைபெறுகின்றது.

மிகுதித் தேவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் ஆகியவற்றினால் நிறைவேற்றப்பட்டது. அதனால் சீனிக்குத் தட்டுப்பாடு உண்டாகும் சூழ்நிலை பெரிதாக உருவாகவில்லை. எனினும் சென்ற தடவையும் நல்லூர்த் திருவிழாக் காலத்தில் சீனிக்குப் பற்றாக்குறை நிலவியதாக அன்பர் ஒருவர் நினைவு படுத்தினார்.

### கையில்நெய்யிருக்க

ஒகஸ்ட் மாதத்தில் 90,000 குடும்பங்களுக்குரிய உலர் உணவு நிவாரணம் அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் வழங்கப்படவில்லை.

## வரலாற்றுப்பதிவாக மாறப்போகும் புதைகுழிகள் தோண்டும் பாரிய பணி

நிவாரணத்தை மீண்டும் வழங்குவதற்கு, தொடர்வதற்கு அரசாங்கம் கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது என அறியப்பட்டதால் நிவாரணத்துக்குரிய சீனியை வெளியே விடவில்லை.

நிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை வழங்குமாறு திடீரெனக் கொழும்பிலிருந்து உத்தரவு வந்தால் என்ன செய்வது என்ற கேள்வியுடன், சீனிக் கையிருப்பை வெளிச் சந்தைக்கு விடமுடியாமற் போயிற்று எனச் செயலக வட்டாரங்கள் காரணம் கூறுகின்றன. அதன் வகையால் 1,045 மெற்றிக் தொன் சீனி செயலக உணவுக் களஞ்சியத்தில் உண்டு.

ஆனால் இந்தக் காரணத்தை ஏற்றுக்கொள்வதற்கோ அதனைக் கேட்டுத் திருப்தி கொள்வதற்கோ எந்தப் பாவனையாளரும் தயாராக இல்லை. உலர் உணவு நிவாரணத்துக்குரிய சீனியை வழங்க முடியாது என்ற நிலையில், அதனை ஈடுசெய்யும் அளவுக்கு சீனியை அவசரமாகத் தருவித்திருக்க வேண்டும். தங்களுக்கு அது இயலாத காரியம் எனக் கண்டால் இப்போது செய்திருப்பது போலக் கூட்டுறவுத்துறை சீனியைத் தருவிக்க ஒழுங்கு செய்திருக்க வேண்டும். வெள்ளம் வருவதற்கு முன்னர் அணையைக் கட்டாது, மழை பொழிந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிய பின்னர் மண்ணைத் தேடித் திரிவது போலவே செயலக அதிகாரிகளின் செயற்பாடு அமைந்திருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள். இது கையில் நெய்யிருக்க வெண்ணெய்க்கு அலையும் நிலையை உண்டாக்கியதை அதிகாரிகள் நியாயப்படுத்த முனைவது எந்தவகையிலும் நியாயமில்லை என்று மக்கள் விசனப்படுகிறார்கள்.

மக்கள் நலனை நாடி, யாழ். செயலக அதிகாரிகளும் கூட்டுறவுத் துறையினரும் ஒருங்கிணைந்து, ஒருமுகப்பட்டு திட்டமிட்டுச் செயற்பட்டிருந்தால் மக்களுக்கு, பாவனையாளர்களுக்கு இப்படி ஓர் அந்தரமும், அதிகாரிகளுக்கு அவசரமும் ஏற்பட்டிருக்கமாட்டா.

மேலும் சீனியைத் தருவிக்கும் மூன்றாவது தரப்பான கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கையிருப்பில் இருந்த முழு அளவு சீனியும் நியாயமான முறையில் தட்டுப்பாடு உண்டான ஆரம்பத்திலேயே பாவனையாளருக்குப் பங்கிடப்பட்டிருந்தால் பதுக்கலையும் விலை உயர்வையும் ஓரளவிலேனும் கட்டுப்படுத்தி இருக்கலாம் என்றே ஸ்ரீமான் பொதுசனம் சொல்கிறார். தட்டுப்பாடு உச்ச நிலையை அடைந்த பின்னரே கூ.மொ.வி. ஸ்தாபனக் கிளை பாவனையாளருக்குச் சீனியைப் பங்கீடு செய்யத் தொடங்கியதாகக் குறை கூறப்படுகிறது.

மொத்தத்தில் சீனித் தட்டுப்பாட்டு விவகாரம் கையில் நெய்யிருக்க வெண்ணெய்க்கு ஊரெல்லாம் அலையும் நிலை போல ஆகிவிட்டது. பதுக்கலுக்கும் விலை உயர்வுக்கும் அதுவும் ஒரு காரணம்தான்!

### சொந்தக்காலில் நிற்பதற்கு....

சீனித் தட்டுப்பாட்டை எதிர்நோக்கிய மக்களுக்கும் இது ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். எங்கள் உள்ளூர் பனங்கட்டி எந்த வகையிலும் சீனிக்கு இளைத்ததல்ல. பனங்கட்டியில் மருத்துவக் குணாம்சங்கள், நோய்த் தடுப்பு சிறப்புக்கள் எல்லாம் உண்டு. ஆனால் நாம் அதனை ஆசைப் பண்டமாகவே பார்க்கிறோம்: பயன்படுத்துகிறோம்.

சீனிக்குப் பதிலாக மாற்றாக அதனை கடந்த இரண்டு வாரங்களாகப் பலர் நாடுவதை அவதானிக்க முடிந்தது. ஆனால் சீனி வந்ததும் அதனை நிச்சயம் மறந்து விடுவோம். மீண்டும் ஆசைப் பண்டமாக்கி விடுவோம். சீனிக்குப் பதிலாக முழுக்க முழுக்கப் பனங்கட்டியைப் பாவிப்பதற்கு நாகரீகத்தின் பால் எழுந்த வெட்கம் தடுக்கலாம். சீனி வந்த பின்னரும், எமது குளுக்கோஸ் சத்து அல்லது இனிப்புச் சுவைக்கு பனங்கட்டியை ஒரு குறிப்பிட்ட வீதமேனும் பயன்படுத்தப் பழகவேண்டும்.

பனங்கட்டியை சிறிய அளவிலேனும் நாளாந்தம் பாவித்து வந்தால் அது எமது பனைவளத்தை மேலும் பெருக்குவதற்கு ஓர் உந்துதலாக அமையும். அதாவது பனங்கட்டி உற்பத்தியை முன்னரைப் போன்று வருவாய் தரும் குடிசைக் கைத்தொழிலாக மாற்றக் கூடிய சக்தி எங்கள் பிரதேச மக்களுக்கே உண்டு. அதன் மூலம் எங்கள் பொருளாதாரம் சிறக்கும். பலருக்கு வேலை வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும்.

இவ்வாறு சுதேச உணர்வுடன் சிந்திக்காமல் எங்கள் உணவுத் தேவைக்கு கொழும்புக் கப்பலையும் அரசின் நிவாரணத்தையும் நம்பி எத்தனை காலத்துக்கு இவ்வாறு ஒருவகையில் சோம்பேறி வாழ்க்கையும், இன்னொரு வகையில் கடமைப்பாட்டு வாழ்க்கையும் வாழப்போகிறோம்?

எமது காலை எமது மண்ணில் பதித்து - ஆழமாக ஊன்றி - சொந்தக் காலில் எப்போது நிற்கப் போகிறோம்? தூர நோக்குடன் செயற்படவும் வழிநடத்தவும் வல்ல அரசியல் தலைமைகள் எமது மத்தியில் உருவாகும் என்று எதிர்பார்க்க முடியவில்லை. ஆகையால் சமூக நலன் நாடும் பெரியார்களே முன்னின்று சுய பொருளாதார வளர்ச்சியின் அவசியத்தையும் அதனை ஆதரிக்க வேண்டிய உணர்வினையும் மக்களுக்கு ஊட்ட வேண்டும். எமது காலில் நிற்பதற்கு நாம் முயலவில்லை என்றால், எக்காலத்திலும் நாம் கையேந்திகளாக, அடிமைகளாகவே வாழ நேரிடும் என்பதனை மறந்து விடக் கூடாது.

குடிசைக் கைத்தொழில்கள் எமது பொருளாதாரத்துக்கும் மக்களின் ஜீவனோபாயத்துக்கும் பெரிய அளவில் உதவியதை மறந்துவிடாது மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

குடிசைக்கைத்தொழில்கள் மட்டுமென்ன, நெசவு நிலையங்கள், மின்தறிநெசவு ஆலைகள் என்று துணி உற்பத்தித் துறையும் குடாநாட்டில் கொடி கட்டிப் பறந்ததை மறக்க முடியாது. கொழும்பில் உற்பத்தி செய்யப்பட்ட "சிந்தெட்டிக்" துணிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு சங்கானை, பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஆலைகளும் இருபாலை மற்றும் இடங்களில் தனியார் தொழிற்சாலைகளும் தரத்தில் சிறந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்தன. அவற்றை மீள்விக்க எவரும், இங்குள்ள உயர் அரச அதிகாரிகள் கூட அக்கறை கொள்ளவில்லையே என்று விசனப்பட்டார் அன்பர் ஒருவர்.

"மீளக் குடியமர்ந்தவர்கள்" என்ற புதிய அடைமொழி ஒன்றை அணிகலமாகக் கொண்ட குடாநாட்டு மக்கள், எமது வளங்களையும் திறமைகளையும் மூலதனமாக்கிச் சொந்தக் காலில் நிற்க முயல்வராக. இது குறித்த ஆலோசனைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க இத்துறையில் நாட்டமுள்ளோர் முன்வர வேண்டும். இதில் அரச உயர் அதிகாரிகளின் முனைப்பான செயலூக்கமும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

பெரிய பதவிகளில் உள்ளவர்கள் அவை

( 5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சோதிடம்

சாதகம் எழுத, பலாபலன் அறிய விவாகப் பொருத்தம் பார்க்க, பிரயாணத்தடை,விவாகத்தாமதம் இவைக்கு சாந்தி பரிகாரம்காண, கிரக தோஷயந்திரம் வீடு வியாபாரங்களுக்கு-சௌபாக்கிய லெச்சுமி யந்திரம், பிரயாணம் தடங்கலின்றி நிறைவேற யந்திரங்களுக்கு நேரில் சந்தியுங்கள். விஸ்வ பிரம்மஸ்ரீ மா.தங்கவேல் சோதிடர் No: 9,டச்சுவீதி,சாவகச்சேரி. (68463)

ஜாதககுறிப்பு எழுதி பலன் பார்க்க விவாகப்பொருத்தம் பிறந்த திகதிக்கு அதிர்ஷ்டஎண் முறைப்படி பெயர்மாற்றம், வீடு, வியாபார ஸ்தலங்களுக்கு, வசிய சௌபாக்கிய லட்சுமி, சுதர்சன முருகன், விநாயகர், யந்திரங்கள் கிரகதோஷபரிகார யந்திரம் விவாக தாமதத்திற்கு பரிகாரம்காண நேரில் சந்தியுங்கள். பிரபல சோதிடர் விஸ்வபிரம்மஸ்ரீ மா.தங்கவேல், டச்சுவீதி, சாவகச்சேரி. (68453)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதுடைய லக்கினத்தில் செவ்வாயுள்ள (கிரகபாவம் 42) அரசாங்க உத்தியோகத்திலுள்ள பெண்ணுக்கு பெற்றோர் அரசாங்க உத்தியோகத்திலுள்ள மணமகனைத் தேடுகின்றனர். சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.936மே/பா உதயன். (68860)

யாழ். இந்து கௌரவ குடும்ப 1962 ஆம் ஆண்டு பிறந்த அவிட்ட நட்சத்திரம் கிரகபாவம் 4 உள்ள, சுவிட்சர்லாந்தில் தொழில்புரியும் தமது அழகான மகனுக்கு படித்த அழகான மணமக்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஸ்பொன்சர் உண்டு. தொடர்பு: ராஜேஸ்வரி இல.6,பஸ்நிலையம், சாவகச்சேரி. (சி-8716)

தென்மராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமில்லாத (சித்திரை 4ம் பாதம்) கனடா பிரஜாவுரிமையுடைய, கனடாவில் உயர் தொழில் பார்க்கும் 32 வயதுடைய பட்டதாரி மணமகனுக்கு படித்த, அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். மணமகளை இந்தியாவில் அல்லது சிங்கப்பூரில் வைத்தும் திருமணம் செய்யலாம். விளம்பர இல:937, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (68658)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி Super Rank கடைக்குப் பக்கத்தில் இருக்கும் பனிக்கவளவு ஒழுங்கையால் (பலாலி றோட்டில் இருந்து 50m தூரத்தில்) 9 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி திருமதி யோகரட்ணம், 750, பலாலி வீதி,திருநெல்வேலி. (68632)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி நகரப்பகுதி கச்சாய் வீதியில் உள்ள முதற் பெரிய திருமதி தேவபாலனின் காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். திருமதி D.T. கிருபைரத்தினம் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (சி-8717)

கொக்குவில் மேற்கில் கே.கே.எஸ் வீதியில் இருந்து ஆடியபாதம் றோட்டில் 15 மீற்றர் தூரத்தில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கல்லூரி, கோயில், சந்தை ஆகியவற்றிற்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட 3 பரப்புக் காணியுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு த.பொன்னம்பலம்,கருவேலடிஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (68671)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து, வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல. 15,6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (68669)

## கல்வி

கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆங்கிலம் உட்பட மற்றைய பாடங்களில் குறைவாக உள்ளவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் சிறப்பாகக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன், இல.10கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (68648)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறு குறிப்பாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. புதிய பிரிவு ஆரம்பமாக உள்ளது. (புதன், வியாழன், சனி, ஞாயிறு நாள்களில்) ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (68684)

---

மீண்டும்

## விற்பனைக்கு வந்துள்ளது.

நல்ல தரமான

MD 90 ஹொண்டா.
V. 90 யமாஹா.
C 50 சுப்பர்கப் ஹொண்டா.
லான்சர் 50 கஸ்டம் மொடல்.

(பெண்களுக்கான மோட்டார் சைக்கிள்கள்)

நாடவேண்டிய இடம்:

ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்
இல. 171, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (68714)

---

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் கோன், ஐஸ்பழத்தயாரிப்புக்குரிய குச்சிகள், ஒறியன் ரொபிவகைகள், தரமான தேயிலை வகைகள், குளிர்சாதனப் பெட்டிக்குரிய யூனிற் வகைகள், ரெலிபோன்கள் சோளன், கச்சான், மரப்பெட்டிகள், வெங்காயம் பொதி செய்யும் நெற் பாக்குகள், கால்மிதிகள் என்பனவற்றை மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**நாதன் களஞ்சியம்**
213 C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2916 (68703)

---

ACTION CONTRE LA FAIM

## VACANCY FOR MANAGERS

பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் நடுத்தர அளவில் ஆரம்பிக்கப்படவுள்ள விவசாய விளைபொருள்கள் பதனிடல் முயற்சியை தலைமையேற்று நடத்த கீழ்வரும் அடிப்படைத் தகமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அடிப்படைத் தகமைகள்:-

* ஆகக் குறைந்த தகமை விவசாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா பட்டம்.
* 5 வருடத்துக்கு குறையாத தொழில் முகாமை அனுபவம்
* கணக்கியல், மற்றும் நிதி முகாமை முன் அனுபவம்.
* யாழ்ப்பாணச் சூழலில் திட்டமிட்டு செயற்பட மற்றும் முயற்சியை முன்னெடுக்கும் ஆற்றல்.
* ஆங்கிலத்தில் தொடர்பாடல் மற்றும் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிக்கும் ஆற்றல்.

பெண்களும் விண்ணப்பிக்கலாம். நேரடித் தொடர்புகள் வரவேற்கப்படாது.

**விண்ணப்ப முடிவு திகதி ~ 15-09-1999**

தொடர்புகள்:- திட்ட முகாமையாளர்,
பட்டினிக்கு எதிரான நிறுவனம்,
இல.05. நக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

"எமது விவசாயிகளின் நீண்ட கால பிரச்சினைக்கான முதற்படி - அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோம்." (68631)

---

## முன்பள்ளி மாணவர் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.4

சிறுப்பிட்டி மேற்கு பூமகள் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் பூமகள் முன்பள்ளியின் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளியின் மைதானத்தில் நிலையத் தலைவர் பாராளன் தலைமையில் இடம் பெறும். (உ-3)

## நல்லூரில் மருத்துவ நிலையம்

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினரால் இலவச மருத் துவ நிலையம் கோயில் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச வைத்திய சேவை எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும். (ஜ-30)

---

## பரத நாட்டிய அரங்கேற்றம்



நாள்:- **05-09-1999** ஞாயிறு
இடம்:- 'CHEATERSAAL'
RATHENAU STRAPE 14,
30853 RANGENHAGEN,
GERMANY.

**திரு.திருமதி பொன்னுத்துரை**
(முன்னாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்)
தம்பதியினரின் புதல்வியும்,
ஜேர்மனி பவித்திர கலாலய ஆசிரியை நாட்டிய சாந்தி
**செல்வி பவித்திரா செல்வகாந்தன்**
அவர்களது மாணவியுமான

செல்வி
**பிரவீணா பொன்னுத்துரை**
அவர்களின் அரங்கேற்றத்தைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சா.வேலுப்பிள்ளை குடும்பத்தினர்,
க.இராசா குடும்பத்தினர்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (68589)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதிவருக்ஷம் ஆவணிமாதம் 26 ஆம் நாள் (12-09-1999) ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்ஷ திருதியை திதியும் சித்திரை நட்சத்திரமும் கூடிய அன்று முன்னிரவு மணி 6.33 முதல் 7.33 க்குள் வரும் கும்பலக்கினமும் (புதிய நேரம்) அமிர்த சித்தயோகமும் குருகால வேளையும் கூடிய சுபயோக சுபமுகூர்த்த சுபவேளையில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| **பிரதாகரன்** | **சசிகலா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதன் வண்ணம் பம்பலப்பிட்டிய சரஸ்வதி மண்டபத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதன் பின்னர் எம்முடன் இரவு போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி
**வைத்திலிங்கம் செல்லத்துரை**
இல:11, இராமகிருஸ்ன காடின், கொழும்பு-06
Tel: 582410
இருபாலை.

திரு.திருமதி
**முத்துக்குமாரசாமி சிவகுமாரன்**
இல:28, ரம்யா வீதி, கொழும்பு - 04
Tel: 583629
"சிவவிலா" மானிப்பாய். (68475)

---

## BARATHY

சித்தன்கேணி
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
**06-09-99**
திங்கள் 10.30
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
(68673)

---

## ராஜா

யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
பிரசாந்த் ~ ஐஸ்வர்யா
மற்றும் பலர் நடித்த
**ஜீன்ஸ்**
(10.30, 1.45, 5.00)
(புதிய நேரம்)
(C/8728)

---

## ராஜா

யாழ்ப்பாணம்
பிரபு-குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**சின்னத்தம்பி**
10.30, 2.00, 5.00
(சி-8776)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STP COMPUTER WORLD

NO. 54 A, PALALY ROAD,
KANTHARMADAM, JAFFNA.

OUR SERVICES

- CLASSES :- GROUP & INDIVIDUAL CLASSES
- SALES :- COMPUTERS & ACCESSORIES
- SOFTWARE DEVELOPING :- FINANCIAL, COMMUNICATION, MULTI MEDIA & WEB DESIGN
- DTP :- TYPE SETTING & STENCILLING
- NETWORKING :- WIN NT ENVIRONMENT & MAINTENANCE
- REPAIRS & MAINTENANCE :- INSTALLATIONS & COMPUTER REPAIRS

DIPLOMA IN COMPUTER STUDIES

- FUNDAMENTALS OF COMPUTER STUDIES
- PROGRAMMING TECHNOLOGY & STRUCTURED PROGRAMMING
- INTRODUCTION TO WINDOWS 95/98
- MS WORD 97/2000
- MS EXCEL 97/2000
- VISUAL BASIC PROGRAMMING
- INTRODUCTION TO INTERNET & E-MAIL

DURATION 8 MONTHS

DIPLOMA IN MS OFFICE

- WINDOWS 95/98
- MS WORD 97/2000
- MS EXCEL 97/2000
- MS ACCESS 97/2000
- MS POWER POINT 97/2000
- MS OUTLOOK 97/2000

DURATION 6 MONTHS

ADVANCED DIPLOMA IN PROGRAMMING

- WINDOWS 98/NT
- VISUAL FOXPRO 6.0
- VISUAL JAVA ++
- VISUAL BASIC 6.
- VISUAL C++ 6.0

DURATION 10 MONTHS

CERTIFICATE COURSES:

- WINDOWS 95/98 / NT
- MSWORD 97/2000
- MS EXCEL 97/2000
- MS POWER POINT 97/2000
- MS ACCESS 97/2000
- VISUAL BASIC 6.0
- TURBO C++
- TURBO PASCAL
- PAGE MAKER 6.0
- COREL DRAW
- VISUAL FOXPRO 6.0
- INTERNET & E-MAIL

KIDS

- GAMES
- PACKAGES & MULTIMEDIA

- விரிவுரைகள் ஆங்கிலத்தில் விரும்பிய மொழியில் விளக்கங்கள்
- தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.

10 DAYS FREE CLASS !!!

FUNDAMENTALS OF INFORMATION TECHNOLOGY

- Introduction To Computer System
- Fundamentals of Hardware
- How to Operate the Computer
- Operating System Dos/Windows

குறிப்பு:-

மாணவர்கள் இந்த இலவசக் கற்கை நெறியைக் கற்பதன் மூலம் திருப்தி ஏற்படின் தொடர்ந்து எந்தவொரு கற்கை நெறியையும் விசேட சலுகையுடன் கற்பதற்கு ஆவன செய்து தரப்படும்.

* கட்டணங்கள் ஏதும் இக்கற்கை நெறிக்கு அறவிடப்படமாட்டாது.

**ஆரம்பம்: 10-09-1999 பகல் 9.00 மணி**

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

STP COMPUTER WORLD

NO. 54A, PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.

(68670)


# இன்று சிகிச்சை முகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும் இணைந்து பண்டத்தரிப்பு (வடலிய டைப்பு) அரசடி சனசமூக நிலைய ஆதரவில் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கானை மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறும். (க)

## சீனித் தட்டுப்பாடும் அதன்......

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுக்கு கிடைத்த அலங்காரங்கள், அதிக வருமானம் என்று மட்டும் கருதலாகாது. ஏனையோரை விட எமது மக்களுக்குச் சேவை செய்யக் கிடைத்த பாக்கியம் அது என்ற உணர்வு நிறைந்து செயற்பட வேண்டும். இந்த வகையில் அவர்களிடம் நிறைந்த ஊக்கத் தைரியத்தை (Initiative) மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

* * *

## புதைகுழி தோண்டும் பாரிய பணி

செம்மணிப் புதைகுழிகள் சம்பந்தமான விவகாரத்தில் முக்கிய கட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகப் போகிறது. இதுவரை இடம்பெற்றவை பூர்வாங்க ஏற்பாடுகளும் கள விசாரணைகளுமே (Field Investingations) ஆகும்.

செம்மணியில்மனிதப் புதைகுழிகள் இருப்பதாக, கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரியான சோமரத்ன ராஜபக்ஷ 1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதன்பின்னர் ஆறுமாதங்கள் கடந்த பின்னரே - 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதியே- புதைகுழிகளைத் தோண்டுவதற்கான விண்ணப்பம் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது

அதனைத் தொடர்ந்து இவ்வருடம் மார்ச் மாதம் 5ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அவ்வேளை நிபுணர் குழுவும் கொழும்பிலிருந்து பெரும்எண்ணிக்கையான பத்திரிகையாளரும் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

அதன்பின்னர் இவ்வருடம் ஜூன் மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முதன்முதலாக சோமரத்ன ராஜபக்ஷ ஆஜர் செய்யப்பட்டார். அப்போது பத்துப் புதைகுழிகளைத் தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்று அவர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் அன்று அவர் செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஒரு புதைகுழியை அடையாளம் காட்டினார். அதனைத் தோண்டிய போது ராஜபக்ஷ கூறியது போலவே இரண்டுபேரின் எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அவை பின்னர் யாருடையவை என்பது உறவினர்களின் உதவியுடன் இனங்காணப்பட்டன.

இதனைத் தொடர்ந்து யாழ். நீதிமன்றத்தில் மீண்டும் ஜூலை மாதம் 15ஆம் திகதி செம்மணிப் புதைகுழி மனு ஆராயப்பட்டது. ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் ராஜபக்ஷவும் ஏனைய நான்கு பேரும் செம்மணிப் புதைகுழிகள் இருக்கும் இடங்களை அடையாளம் காண்பதற்கென ஒதுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இவ்வாரம் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் ராஜபக்ஷவும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்தும் ராஜபக்ஷ தனித்துமாக 25புதைகுழிகள் இருக்கும் இடங்களை அடையாளங்காட்டியுள்ளனர்.

இவற்றைத் தோண்டும் வேலைகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளன. இந்தப்பணி தொடர்ந்து நடைபெறும். ராஜபக்ஷவும் ஏனைய நால்வரும் தெரிவித்த விவரங்களின் பிரகாரம் 25 புதைகுழிகளுக்குள்ளும் 150பேருக்கும் மேற்பட்டோரின் சடலங்களுக்குரிய எலும்புக்கூடுகள் ஏனைய எச்சங்கள் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

ஆனால் புதைகுழிகளைத் தோண்டும் போது மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலேயே ஒரே தொடர்ச்சியாக இத்தனை புதைகுழிகள் தோண்டப்படவுள்ளது செம்மணியிலே ஆகும். அது ஒரு பெரும் துக்கமான வரலாற்றுப் பதிவாகப்போகிறது. புதைகுழிகளில் தோண்டிஎடுக்கப்படும் எலும்புக்கூடுகள், எச்சங்களைப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட வசதிகள் இங்கேயே ஏற்படுத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. புதைகுழிகள் தோண்டப்படும்போது மீட்கப்படும் எலும்புக்கூடுகள் ஏனைய எச்சங்கள் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு அடையாளம் காணப்படும். இங்கிருந்து அவை றுகுணு பல்கலைக்கழகத்துக்கு பரிசோதனைக்கும் ஆய்வுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

கடந்த மூன்று நாள் கள விசாரணைகளின் போது, புதைகுழிகள் விவகாரத்தின் 'பிரதான நாயகன்' எனக் கருதப்படக் கூடிய இராணுவ கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவுக்கும் இவ்விடயத்தை சட்டமா அதிபர் தரப்பில் முன்னெடுத்துச் செல்லும் அரச சட்டவாதியாக வந்த யசந்த கோத்தகொடவுக்கும் இடையே சர்ச்சையும் முரண்பாடுகளும் எழுந்தன. இரண்டாம் நாளும் ராஜபக்ஷ செம்மணிக்கு அழைத்துவரப்பட்டார். அப்பொழுது தமக்குத் தெரிந்த எஞ்சிய புதைகுழிகளை அடையாளம் காட்முடியாது என்று தெரிவித்து நீதிபதியிடம் மனுச்செய்தார். முதல் நாள் பணி முடிவடைந்ததும் அரச சட்டவாதி செய்த மனுவைச் சுட்டிக்காட்டி, அத்தகைய நிலையில் தாம் தொடர்ந்து எதுவும் செய்ய முடியாது என்று ராஜபக்ஷ நீதிபதியிடம் தெரிவித்தார்.

ஆறு புதைகுழிகளை இடம்காட்டிய ராஜபக்ஷவை ஏனைய நான்கு பேருடனும் சேர்த்து ஒன்றாகத் தங்க வைக்கக் கூடாது என்பதே சட்டவாதியின் மனுவாகும்.

ஆனால் தனித்தனியாக தங்க வைக்க யாழ் பொலீஸ் நிலையத்தில் வசதி இல்லை என்று பொலீஸ் தரப்பில் தெரிவிக்கபட்டது. அவ்வாறாயின் காங்கேசன்துறை அல்லது வேறு பொலீஸ் நிலையத்தில் தனித்துத் தங்கவைக்குமாறும் அதற்கு வசதி இல்லாவிடில் கொழும்புக்கு விமானமூலம் அழைத்துச் சென்று மறுநாள் யாழ்ப்பாணம் கூட்டிவரலாம் என்றும் யசந்த கோத்தகொட தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குள்ளவர்கள் போராட்டம் நடத்தியதால் செம்மணிப் புதைகுழிகளை அடையாளம் காட்டவந்தவர்களை அங்கு தங்கவைக்கமுடியாது என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் அரச சட்டவாதியின் கோரிக்கையை ஏற்று ராஜபக்ஷவைத் தனியாக வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். அவ்வாறு தனித்து வைக்கப்பட்ட ராஜபக்ஷ மறுநாள் அது குறித்து நீதிமன்றத்தில் முன்னர் குறிப்பிட்ட பிரச்சினையைக் கிளப்பினார். இந்த வழக்கில் அரசுக்கு உதவவே முன்வந்தோம். அரச சட்டவாதி கேட்கும் கேள்விகள் என்னைக் குற்றவாளியாக்கும் முயற்சியாக அமைந்துள்ளன. எனவே நான் சட்ட உதவி பெற அனுமதிக்க வேண்டும் என்றும் ராஜபக்ஷ கோரினார்.

அத்துடன் ஐந்து பேரும் கலந்து ஆலோசித்தே புதைகுழிகள் அமைந்த இடங்களைக் காட்டமுடியும். எங்களை ஒன்றாகத் தங்க அனுமதிக்கவேண்டும் என்றும் அவர் நீதிபதியிடம் கோரினார்.

அதனை அடுத்து கோத்தகொட வெளியே நின்று கொழும்பில் உள்ள சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டார். இந்நிலையில் ராஜபக்ஷ செம்மணியில் இருந்து யாழ்.பொலீஸ் நிலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டார்.

சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து மீண்டும் பி.ப 3 மணிக்கு செம்மணியை வந்தடைந்த அரச சட்டவாதி, ஐந்துபேரையும் ஒன்றாகத் தங்கவைக்க ஆட்சேபனை இல்லை என்று சொன்னார். அது குறித்து நீதிபதியிடம் அவர் தெரிவித்ததும் ராஜபக்ஷவை யாழ்.பொலீஸ் நிலையத்தில் இருந்து அழைத்துவர நீதிபதி உத்தரவிட்டார். அவர் வந்தார் மேலும் புதைகுழி இடங்களை அடையாளம் காட்டினார்.


இத்தகைய இழுபறிகளுக்குப் பின்னர் புதைகுழி தோண்டும் பாரிய வேலை திங்கட்கிழமை தொடங்கப் போகிறது. *


யாழ்ப்பாணத்தில் விற்பனை முகவர்கள் உடன் தேவை

யூகே டிஷ் அன்டெனா

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

உலகின் ஒரு மூலையில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக ஆதங்கப்படுகிறீர்களா? இல்லவே இல்லை!!



உலகோடு உங்களை நொடிப்பொழுதில் இணைக்கும் பணியை ஏற்றுக்கொள்ள யூகே நிறுவனத்தினர் தயாராகிவிட்டனர்!!!

தலைநகரிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலைசிறந்த நிபுணத்துவம் மிக்க தொழில்நுட்பத்தில் செய்மதி டிஷ் அன்டெனாக்கள் மூலம் சர்வதேச அலைவரிசைகளை வழங்கியதில் முன்னோடிகள்

சில்லறையாகவும் மொத்தமாகவும் டிஷ் அன்டெனாக்களையும் உதிரிப்பாகங்களையும் மிகச்சாதாரண விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்



UKAAYE 169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gasworks Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம்

இல. 175, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில்
இயங்கி வந்த

## குணம் ரெக்ஸ்

என்னும் ஸ்தாபனம்
தற்பொழுது புது மெருகுடன

**விஜய் சில்க்** என்னும் பெயருடன

123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**எம்மிடம்:**

இந்தியாவில் இருந்து நேரடியாக தருவிக்கப்பட்ட திருமணப் பட்டுப் புடைவைகளையும் மற்றும் சகல விதமான புடைவை தினுசுகளையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள உங்கள் தேர்வுக்கும்

## விஜய் சில்க்

123, மின்சார நிலைய வீதி,
(ராணி தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

(68666)

## மாபெரும் நூல் அறிமுகவிழா

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் வாழ்ந்த
16 நேர் சீடர்கள் பற்றியது.
வெளியீடு: அத்வைத ஆச்சிரமம், கல்கத்தா
நூலை எழுதியவர் **சுவாமி சேதனானந்தா**
'God lived with them'
by Swami Chetenananda
(President, Vedanta Society, Missouri, U.S.A)
இடம் : **வைத்தீஸ்வராக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**
காலம்: **06-09-99** திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணி.
தலைவர்: **திரு.நா.வன்னியசிங்கம்** அவர்கள்
(அதிபர், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்: **திரு.க.சண்முகநாதன** அவர்கள்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்).
நூல் அறிமுகவுரை: **சுவாமி சித்ருபானந்தா** அவர்கள்
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி-8784) - விழா அமைப்பாளர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**சின்னத்தங்கச்சி மார்க்கண்டு**

மலர்வு
**01-03-1945**

மறைவு
**05-08-1999**

எமது இல்லத்தில் ஒளி விளக்கேற்றிய எங்கள் அன்புத் தெய்வமே. உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் மாறாது: மறையாது. ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் அன்பு எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

அன்னாரின் மறைவைக் கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தும் துன்பத்துயரத்தில் பங்குகொண்டும் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

உங்கள் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவர்: ச. மார்க்கண்டு
பிள்ளைகள்: மா. சத்தியசீலன்
மா. குகசீலன
மருமகள்: கு. சுபாசினி
பேர்த்தி : கு. றஜீனா

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(6867[illegible])

## "இப்பொழுது ஒரு புதிய சேர்க்கை"

# றொக்லண்ட்




மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 420/-

இப்போது யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது

ROCKLAND

றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்

*ஏழு தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!*

**உத்தரவு பெற்ற சகல
மதுபான விற்பனை நிலையங்களிலும்
வாமாஸ் வைன் ஸ்ரோரிலும் கிடைக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

குடாநாட்டின தேசியத் திருவிழா என்று கருதப்படும் நல்லூர் ஆலய உற்சவம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. முன்னைய வருடங்களைப போலல்லாது இம்முறை - ஒரு சில அசம்பாவிதங்களைத தவிர்த்துப் பார்த்தால் - ஓரளவு ஒழுங்குக் கட்டுப்பாடுகள் நிலைநாட்டப்பட்டிருப்பதாகவே படுகின்றது. இதே ஒழுங்குக் கட்டுப்பாடு திருவிழா பூர்தியாகும்வரை பேணப்படவேண்டும்.

அதுவும் புதன்கிழமை வரும் ரதோற்சவமும், அடுத்தநாள் வரும் தீர்த்தமும் பக்தர்கள் திரண்டுவரும் தினங்களாகும். அதைப் பயன்படுத்தி பக்தகோடிகள் என்ற பெயரில் நுழையும் 'பக்தகேடிகள்' பண்ணும் அட்டகாசம் எல்லோரும் அறிந்ததுதான்.

அதுவும் தீர்த்தத்தன்று இந்தக் 'கேடிகள்' புரியும் திருவிளையாடல் அருவருக்கத்தக்கவையாக இருக்கும். புனிதம் மிக்க ஆலயத்துக்குள்ளேயே 'ஷொப்பிங் பாக்'கிலும் ஏனைய பாத்திரங்களிலும் கேணித்தண்ணீரை அள்ளிவந்து பெண்கள் கூட்டத்தின் மீதும் ஏனையோர் மீதும் வீசி அட்டகாசம் புரியவும், அதற்கு மேல் கேவலமான செயல்களில் ஈடுபடவுமென்றே படையெடுக்கும் இத்திருக்கூட்டத்தின் அடாவடித்தனத்தையும் அட்டகாசத்தையும் நிறுத்திப் பாடம் புகட்ட வேண்டும். அப்படிச் செய்தால்தான் இம்முறை இதுவரை ஓரளவுக்கேனும் பேணிய - அல்லது பேண வைக்கப்பட்ட - ஒழுங்குக்கட்டுப்பாட்டுக்கு ஓர் அர்த்தம் இருக்கும்.

பல நெருக்குதல்கள், சிக்கல்கள், அழுத்தங்களுக்கு மத்தியில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, ஒழுங்கைப் பேணும் தொண்டர் அணிக்கு யாழ் சமூகம் விடுக்கும் உரிமையுடன் கூடிய வேண்டுகோள் இது!

* * * *

கடந்த இரு வருடங்களாக யாழ் மாவட்ட விளையாட்டு அமைப்புகளுக்கு, முந்திய வருடங்களோடு ஒப்பிடுகையில், கூடியளவு விளையாட்டு உபகரணங்களும் பொருள்களும் விளையாட்டு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடமும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இது விடயத்தில் விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் அமைச்சருக்கும் அதிக அழுத்தம் கொடுத்து பொருள்களைப் பெற்றுத் தந்ததில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அவரின் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே. ஜெகன் ஆகியோரின் பங்கு குறிப்பிடத்தக்கது; பாராட்டத்தக்கது.

ஆனாலும் ஒரு குறை. சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். இவ்வாறு பெற்றுத்தந்ததை அரசியல் லாபப்படுத்துவதில் எல்லை மீறப்பட்டுள்ளதாகப் படுகின்றது.

பொருள்களை ஒதுக்கியது விளையாட்டு அமைச்சு. அதைப் பொறுப்பேற்று சம்பந்தப்பட்டோருக்கு வழங்குவது விளையாட்டு அமைச்சின் முகவர்களாக யாழ்.செயலகத்தின் கீழ் இயங்கும் மாவட்ட விளையாட்டு அதிகாரி. அரசியல் தலைமைத்துவம் என்ற வகையில் - பொருள்களை யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்ய உதவியவர்கள் என்ற முறையில் - விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வுக்கு ஈ.பி.டி.பி. பிரமுகர்களை அழைத்திருக்கலாம்.

ஆனால் அப்படி நடக்கவில்லை.

அரசாங்கத்தின் (விளையாட்டுத்துறை அமைச்சினால்) அந்த உபகரணங்கள் ஈ.பி.டி.பிக்கு வழங்கப்பட்ட மாதிரியும் -

ஈ.பி.டி.பி சம்பந்தப்பட்ட விளையாட்டு அமைப்புகளுக்கு வழங்குவதற்கு முன்வந்திருப்பது போலவும் -

ஈ.பி.டி.பியினால் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு, ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்தில் வைத்து, ஈ.பி.டி.பி. பிரமுகர்களால் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

ஆனால் பொருள்களைப் பெற்றுக்கொண்டோர் அதற்கான உறுதியுரை ஒப்பத்தை செயலகத்தின் மாவட்ட விளையாட்டு அதிகாரிக்குரிய பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில்தான் வைத்தனர்.

'வழித் தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு அடிக்கும் வேலை' அல்லவா இது?

* * * *

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நடந்த சம்பவம் இது.

வடமராட்சிப் பகுதியிலிருந்து தினசரி காரில் இரண்டு உதவியாளர்களுடன் வந்த ஒருவர் தாம் பரம்பரைத் தமிழ் வைத்தியர் என்றும் தமது பரம்பரையில் ஆறாவது தலைமுறை வைத்தியர் தாம் என்றும் அறிமுகப்படுத்திக்கொண்டு, நாடிபிடித்து வைத்தியம் பார்த்தல், உடல் பருத்தவர்களை மெலியச் செய்தல், வாதநோய் வந்தவர்களுக்கு நிரந்தரக் குணமளித்தல் என்று பல்வேறு வித்தைகளைக் கூறி பல வீடுகளில் ஆயிரம், இரண்டாயிரம் ரூபா என்று பணம் வேண்டியிருக்கின்றார்.

சாஸ்திரம் பார்த்தல், மாந்திரீகம் செய்தல், திருமணப் பொருத்தம் ஏற்படுத்திக் கொடுத்தல் என்று வேறு பல கலைகளின் பெயரிலும் கூட தமது கைவரிசையைக் காட்டிய இந்தப் பல்துறை மன்னர் பலரிடமும் பெருந்தொகைப் பணத்தைத் திரட்டிய பின்னர் இப்போது காணாமற் போய்விட்டாராம்.

ஏமாந்தவர்கள் 'பரம்பரை' வைத்தியரை(?) இப்போது தேடிக்கொண்டிருக்கிறார்கள்! எனவே பொதுமக்கள் உஷாராக இருங்கள்! - போலி வைத்தியர் தமது கைவரிசையை இனிப் புது இடங்களில் காட்ட முயற்சிப்பார். கவனம்!

* * * *

யாழ் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையில் பயணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும் என்ற விதி சட்டரீதியானது அல்ல என்று தெரிவித்து, அந்த நடைமுறைக்கு எதிராக நீதிமன்ற உத்தரவைக் கோரி வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யப் போகின்றாராம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம். நல்ல தகவல். கொழும்புப் பிரமுகர்களில் அவர் ஒருவராவது உப்புப் போட்டு சாப்பிடுகின்றார் என்பது வரவேற்கத்தக்கதே.

இந்த விடயம் குறித்து யாழ். நகர வர்த்தகர் ஒருவர் கூறிய கருத்து இது:-

"வன்முறைக்கு எதிராக - நீதியான ஒரு காரணத்துக்காக - ஒரே ஒரு நாள் மத்தியான 'லஞ்ச்' வேளை, ஒரு மணிநேரம் - முழுதாகக் கூட இல்லாமல் - ஒற்றைக்கதவில் கடைகளைத் திறந்து வைத்திருப்பது என்று ஒன்றாகக் கூடி முடிவெடுத்து அதைச் செயற்படுத்தும் சுதந்திரம் கூட இல்லாமல் இங்கே இருக்கிறோம். அதற்கும் சேர்த்து வழக்குப் போடும்படி குமாரிடம் கூறுங்கள்!" - என்றார் ஆதங்கத்துடன் அந்த வர்த்தகர்.

"நிலைமை இப்படியிருக்க, அரசுடன் கூடிக்குலாவி, 'குடாநாட்டில் வழமை நிலை திரும்பிவிட்டது: சிவில் நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது' என்ற சர்வதேசப் பிரசாரத்துக்கு துணைபோகின்றார்களே நம்மவர்கள்!" - என்று பெருமூச்சும் விட்டார் அந்த வர்த்தகர்.

– மின்னல

# மண்டபம் அகதிகள் வெளியேறத் தடை

சென்னை, செப்.4

இராமேஸ்வரம் மண்டபம் அகதி முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் நடைபெறும் தேர்தல்களை ஒட்டியே இவர்கள் முகாமைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டளளது.

மண்டபம் முகாமில் சுமார் [illegible] நூறு இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

[illegible]

# விளையாட்டு நிகழ்வுகள்

## பூப்பந்தாட்டம்

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டு அவையால் நடத்தப்பட்டு வரும் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவிருக்கின்றன. (உ-3)

## கரப்பந்தாட்டம்

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவை முன்னிட்டு விளையாட்டு அவை நடத்தி வரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று -

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய வி.க. அணியும் தோப்பூர் இளைஞர் வி.க. அணியும் மோதும்.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அணியை எதிர்த்து இந்து இளைஞர் வி.க அணி மோதும்.

## கிரிக்கெட்

யாழ். மத்திய கல்லூரிக்கும் பரி. யோவான் கல்லூரிக்கும் இடையிலான 13வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் ஆட்டம் ஒன்று இன்று காலை 9 மணி முதல் பரி.யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. (உ-3)

## சதுரங்கப்போட்டி

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் டாக்டர் நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்தி வரும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் சதுரங்கப்போட்டி இன்று காலை 8 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (உ-3)

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், செப்.4

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தைஒட்டி துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக்கச்சேரி இடம்பெறும். அணிசேர் கலைஞர்களாக கே.குகபரன் (வயலின்), எஸ்.துரைராஜா (மிருதங்கம்), ஏ.செல்வரத்தினம்(கடம்) ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-ரி-30-103)

* * *

யாழ்ப்பாணம், செப்.4

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தைஒட்டி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டுவரும் திருத்தொண்டர் புராண இசைச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை 'அன்பின் சிகரம் அப்பூதி' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-ரி-30-103)

* * *

யாழ்ப்பாணம், செப்.4

நல்லூர் ஸ்ரீகந்தன் ஆலய உற்சவத்தை ஒட்டி அறுபத்து மூவர் குரு பூசை மடத்தில் வடபிராந்திய இந்துப் பேரவை யாழ். மாவட்டக் கிளையின் ஆதரவில் நடைபெற்று வரும் தொடர் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு 'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற தலைப்பில் உதவிக் கல்விப்பணிப்பாளர் ம.ஜெயராம சர்மா உரைநிகழ்த்துவார்.(ஐ-ரி-30-103)

## பயிற்சி வகுப்பு

நவாலி, செப்.4

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டம சம்பந்தமான கிளைக் குழுப் பயிற்சி வகுப்பொன்று இன்று சனிக்கிழமை மானிப்பாய் ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் மானிப்பாய் ப.நோ.கூ.சங்க எல்லைக்குட்பட்ட சகல கிளைக்குழுத்தலைவர்கள், உபதலைவர், செயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கூட்டுறவுச் சபை மாவட்ட செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் அழைப்பு விடுத்துள்ளார்.(ஐ-100)

## குப்பை வண்டில் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.4

அண்மையில் யாழ் மாநகர சபை வளவில் இருந்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்ட குப்பை சேகரிக்கும் வண்டில் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட இந்த இரண்டு சக்கர குப்பை சேகரிக்கும் வண்டில் யாழ் அன்னசத்திர வீதிப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு, விசாரணையின் பொருட்டு தற்போது யாழ். பொலீஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)



அமரர் டாக்டர் பொ.சொர்ணலிங்கத்தின் இரங்கற் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஆனைக்கோட்டையில் நடைபெற்றது. கலைஞர் கொக்கையம்பதி மு.வை.செ. பாலசுப்பிரமணியம் அஞ்சலி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் திருமதி அன்னலட்சுமி சின்னராசா, யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் செ.தவராசா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (ஐ-3)

# வீடுகளுக்கு மின் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.4

கடந்த முதலாம் திகதியில் இருந்து வீடுகளுக்குப் புதிதாக மின் இணைப்புகள் வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

'கூல் எயார்' நிறுவனத்தினால் தற்பொழுது குடாநாட்டு மின் பாவனையாளருக்கு தேவையான மின்சாரத்தை வழங்க முடியாதுள்ளதாலும், மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்த காரணத்தினாலுமே புதிதாக மின்இணைப்புகள் வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளுக்கான புதிய மின் இணைப்புகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ள போதிலும் பகல் நேரத்தில் மின்சாரத்தினை பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிலையங்களுக்கு புதிய மின் இணைப்பு வழங்கப்படும் என்று இலங்கை மின்சாரசபையின் வடபகுதி பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணாநந்தன் தெரிவித்தார்.

'கூல் எயாா' நிறுவனத்தால் காங்கேசன்துறைக்கு மேலும் 5 ஜெனரேட்டர்கள் எடுத்துவரப்படவுள்ளன. இந்த ஜெனரேட்டர்கள் காங்கேசன்துறையில் பொருத்தப்பட்ட பின்னர் மின் விநியோகம் சீர்செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-31)

# கைது, காணாமற் போதல்: ஒகஸ்டில் 37 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்.மாவட்டத்தில் ஆள்கள் காணமற்போனது மற்றும் கைதுசெய்யப்பட்டது தொடர்பாக கடந்த மாதம் 37 முறைப்பாடுகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காணமற்போனதாகப் பதிவு செய்யப்பட்ட 14 பேரில் 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் பற்றி படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் படை முகாம்கள் எதிலும் தடுத்துவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி எஸ் சிறீதரன் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் விடுவிக்கப்பட்டதுடன் ஏனையவர்கள் காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பத்து பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.4

யாழ். பிரதேச செயலர் பிரிவில் நியமனம் செய்யப்படவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-5)

# மரண அறிவித்தல்

## திருமதி இராமசாமி செல்லாயி

திருமதி இராமசாமி செல்லாயி 29.08.99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கம்மா (பதுளை), திரு. கந்தசாமி (ஓமான்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்லப்பெருமாள், மங்களேஸ்வரி (இந்தியா) அவர்களின் அன்பு மாமியாரும், சுரேஸ்குமார் (லண்டன்), இரத்தினமாலா (இந்தியா) ஆகியோரின் பேர்த்தியாரும், விஜயகுமார் (முத்து), கோகுலன், லோஷனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.99) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
**இ.கந்தசாமி** (மகன்)
**ச.பாஸ்கரன்** (பேறாமகன்)

163, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (68723)

# ஐந்தாண்டு நீங்கா நினைவுடன்

மைந்தனாக 30-06-1947 | அமரனாக 04-09-1994

**அமரர் தம்பு வேலாயுதபிள்ளை**
(கணக்காய்வாளர், சிறைச்சாலைத் திணைக்களத் தலைமையகம் - கொழும்பு)

**ஆண்டு ஐந்து சென்றாலும் ஆறாதப்பா எம் நெஞ்சம்தினம் உங்கள் நினைவுகளால் கலங்கி நிற்கின்றோமப்பா!**

**மனைவி, பிள்ளைகள.**

70, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை. (68721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாஸனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத் தளபதி இளங்கோவின் இறுதிக்கிரியைகள் குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும்- தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் -

வவுனியா நகரில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் புளொட் அலுவலகம் மற்றும் இடங்களில் கறுப்புக் கொடி கட்டப்பட்டிருந்தது.

(உ-3-164-15-139)


# கோப்பாய் லயன்ஸ் கழகம்

**யாழ். மருத்துவபீட மாணவர்களின் அனுசரணையுடன் நடத்தும்**

**இலவச மருத்துவ முகாமும் கண் பரிசோதனையும்**

காலம் : 05.09.1999 ஞாயிற்றுக்கிழமை.
நேரம் : முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை.
இடம் : யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி மேற்கு.

நீரிழிவு, குருதிஅமுக்கம், மார்பக புற்றுநோய், வாய்ப் புற்றுநோய் மற்றும் பொது மருத்துவப் பிரச்சினைகளுக்குரிய பரிசோதனையும் ஆலோசனைகள் வழங்கலும், இலவச மருத்துவ சிகிச்சையும்.

தேர்ச்சிபெற்ற கண்பரிசோதனை நிபுணர்களாகிய S.M.பெர்ணாண்டோ நிறுவனத்தினால் கண்பரிசோதனை செய்து வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கு இலவசமாக கண்ணாடி வழங்கப்படும்.

**ஞா.த.ஞானசேகரவேல்,**
செயலாளர். (சி/8801)



**Institute of Informatics Studies**
**Jaffna, Sri Lanka.**

(பிரித்தானிய IMIS நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

TelePhone: 021-2831 Email: iis@ sltnet.lk

**கணனிப் பயிற்சி நெறிகள்**

ஆரம்பம்: 05.09.1999 பகல் 10.00 மணி

இக் கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில் நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சி நெறிகள்.

**Diploma Courses:**

1. Advanced Diploma in Applied Computer Science (பிரித்தானிய IMIS ஆஸ்திரேலிய ACS பரீட்சைக்கான முழு பாட விதானங்களையும் உள்ளடக்கியது)
2. Diploma in Computer programming.
3. Technician Diploma in Computer Hardware
4. Diploma in Microsoft office-2000

**Certificate Courses:**

* WINDOWS 98/2000/NT
* MS WORD 2000
* MS EXCEL 2000
* MS ACCESS 2000
* MS POWER POINT 2000
* VISUAL BASIC
* C/C++
* PASCAL
* AUTO CAD
* PAGE MAKER
* COREL DRAW
* Dbase



இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் **இன்ரநெற், ஈமெயில்** என்பவற்றில் மேலதிகப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

- உங்கள் பயிற்சிக்கான கட்டணங்களை தவணை முறையில் இலகுவாக செலுத்திக் கொள்ள முடியும்.
- எமது மாணவர்களிற்கு அறிவியல் ரீதியான (மருத்துவம், இலத்திரனியல், பொறியியல், ஆங்கிலம், கலைக் களஞ்சியம், மேலும் பல ... ) CD நூலகவசதிகள்.
- மாணவர்களிற்கு போதிய அளவு செய்முறைப் பயிற்சிகளும், நூலக வசதிகளும் அளிக்கப்படுகின்றது.
- மாணவர்களின் வசதிக்கேற்ப வாரநாட்களிலும், வார இறுதி நாட்களிலும் காலை, மாலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.
- அலுவலக அதிகாரிகள், ஊழியர்களின் விருப்பத்திற்கேற்ப பிரத்தியோக வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

**தலைமை அலுவலகம்.**

IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**கிளை நிறுவனங்கள் :**

- IIS, நாவலர் மடம், நெல்லியடி.
- IIS, "சேர்க்கிள் சென்ரர்", சங்கானை.
- IIS, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.


## ஒத்திவைப்பு

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் எதிர்வரும் 8ஆம் திகதி நடத்தப்படவிருந்த கோட்ட மட்ட மற்றும் வலய மட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நல்லூர் உற்சவத்தை ஒட்டி பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலய முறைசாராக் கல்விப்பிரிவு அறிவித்துள்ளது.

## தாக்குதல் முஸ்தீபு?

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்துக்கு சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள் செல்வதற்கு விடுதலைப் புலிகளால் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு புலிகள் தயாராவதாகவும் -

அதன் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தடை உத்தரவு காரணமாக சர்வதேச தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள் எவரும் நேற்று அங்கு செல்லவில்லை.

(உ-3)

## ஹமீத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

39ஆண்டுகள் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராய் பணிபுரிந்து, நீண்ட காலம் எம்.பி.யாக இருந்த ஐ.தே.க உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றவர் அவர்.

1977முதல் 1989 வரை வெளிவிவகார அமைச்சராக பணிபுரிந்த அவர், 1989 முதல் உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சராகவும், அத்தோடு சில ஆண்டுகள் நீதி அமைச்சராகவும் பணிபுரிந்தவர். 1993, 94ஆம் ஆண்டுகளில் மீண்டும் வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்தவர்.

ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் அரசு - புலிகள் பேச்சுவார்த்தை நடந்த சமயம் அரசுப் பிரதிநிதியாகப் பேச்சுக்களில் கலந்து கொண்டவர். விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரில் சந்தித்துப் பேசிய ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் ஒரே அமைச்சர் இவர் தான்.

ஏ.ஸி.எஸ். ஹமீத்தின் ஜனாஸா நேற்றிரவே அவரது சொந்த ஊரான அக்குறணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று மாலை 5 மணியளவில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படும்.

(உ-3)


**சிவா திரையில்**
**சிவன் கோவிலடி**
**யாழ்ப்பாணம்**
**10.30 - 2.30**
**அருண்பாண்டியன் - அஸ்வினி**
நடிக்கும்
**நம்பர் - 01 பொலீஸ்**
புதிய வெளியீடு
(சி-8805)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
அஜித்குமார்- பேப ஷாலினி
நடித்த
**அமர்க்களம்**
**சுப்பஸோ வீடியோ**
149,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-8806)



**புலமைப்பரிசில் 99**
**பிரிவு IIக்கான பதிவுகள்**

99ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில்களை பெற்றுக் கொண்ட மாணவர்களின் செப்ரெம்பர் மாத பிரிவுக்கான பதிவுகள் ஆரம்பமாகி உள்ளன. இதுவரை பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் அனைவரும் உடனடியாக தமது பதிவினை மேற்கொள்ளவும்.

**இயக்குநர்,**
[illegible]
யாழ்ப்பாணம்.
(C/8865)



இன்றும் நாளையும் இறுதி சந்தர்ப்பம்!
**துரையப்பா விளையாட்டரங்கில்**
AVM **ராஜன், புஸ்பலதா**
குழுவினர் பங்குபற்றும்
**அன்பு வெள்ளம்**
**மாபெரும் நிகழ்ச்சி**
மாலை 3.30 (புதிய நேரம்)
**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**
பிரவேசம் இலவசம் (C/8312)



# கணனிப் பயிற்சி நெறி

*** புதிய பிரிவு ஆரம்பம் ***

மேற்படி பயிற்சி நெறியினை பயில விரும்புவோர் சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ 10.09.99 இற்கு முன்னர் சேர்ப்பிக்கவும்.

**கணனிப்பிரிவு,**
**யாழ். சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்,**
குருநகர், யாழ்ப்பாணம்.
(68738)


## கண்ணீர் அஞ்சலி

ஜெஸ்சின் அரிசி ஆலை உரிமையாளரும் பிரபல வர்த்தகருமாகிய

**திரு.யாகோப்பு செபஸ்தியம்பிள்ளை பொன்னுத்துரை** அவர்களின் திடீர் மறைவையொட்டி அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடையும் அதேநேரம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* கணபதிப்பிள்ளை களஞ்சியம், பளை.
* உதயம் புடைவையகம், கண்டி வீதி,பளை.
* சோ.பிரகலாதன் (தேவதாஸ்), கண்டி வீதி,பளை.
* றேக்கா போட்டோ, கண்டி வீதி,பளை.
* அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம், கண்டி வீதி, பளை.

(சி/8802)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி விசாலாட்சி செல்லத்துரை

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி செல்லத்துரை அவர்கள் 03.09.99 அன்று காலமானார்.

அன்னார் கந்தையா செல்லத்துரையின் அன்பு மனைவியும் கதிர்காமு-ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் கந்தையா - செல்லம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவானந்தபவானி, சதானந்தபவானி, கிருபானந்தசிவம், உருத்திரானந்தசிவம் ஆகியோரின் அன்புத்தாயாரும் சண்முகநாதன், சிவனேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷ்ணகுமாரி, கஜீபன், கீர்த்திபன், விலோச்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பரமேஸ்வரி, உமாமகேஸ்வரி, அன்னலக்சுமி, சபாரத்தினநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 03.09.99 அன்று காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**ச.சிவானந்தபவானி.**
(மகள்)

'சிவதர்சனம்',
கே.கே.எஸ் வீதி,
இணுவில் மேற்கு. (68741)

## சந்தியாப்பிள்ளை ஆரோக்கியநாதர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை ஆரோக்கியநாதர் 02.09.99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை - சூசனா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜேர்மனம்மா(தங்கம்)வின் அன்புக்கணவரும், அருட்திரு S.N.அருள்நேசன் (O.M.I) அவர்களின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற தாசன், நாதன், தங்கமலர், ஜெயநாதன், அரியநாதன், செல்வநாதன், காலஞ்சென்ற சந்திரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (04.09.99) சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**ராணி யோசப்**

472, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (68736)

## சின்னத்தம்பி கனகரத்தினம்

அராலியை பிறப்பிடமாகவும் மன்னாரில் வசித்தவரும் தற்போது No.3, சிறாம்பியடியில் வசித்துவந்தவருமாகிய சின்னத்தம்பி கனகரத்தினம் காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் சத்தியமூர்த்தி(லண்டன்), சத்தியேஸ்வரி, மகேஸ்வரி(கனடா), சதானந்தன்(டோகா), செல்வதி (ஜேர்மனி), பிரபாவதி, கணேசமூர்த்தி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரி, இரத்தினசிங்கம், கமலநாதன், செல்வராணி, அரசரத்தினம், இராஜேந்திரன், லதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை காலை 11.00 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிரபாவதி இராஜேந்திரன்.**

3,சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(68743)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-09-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சஞ்சிகை

சஞ்சீவி 04-09-1999



உங்கள் ஆடை
அழகின் எண்ணம்
கோபிகாவின்
ஆடைகளின் வண்ணம்
வாடிக்கையாளர் உள்ளம்
கொள்ளை கொள்ளும்
ஆடைவகைகள் அத்தனைக்கும்

கோபிகா ஆடையகம்

இல.5/4,நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம்

மயூரா

### தானமே தவம்

*பிறர்க்கு உதவி செய்யார் பெருஞ் செல்வம் வேறு*
*பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறாம் பிறர்க்கு*
*உதவி செய்யாக் கருங்கடல் நீர் சென்றுபுயல்*
*முகந்து பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.*

-சிவப்பிரகாச சுவாமிகள்-

தாம் சேர்த்த செல்வத்தை, தமக்கு வந்து சேர்ந்த செல்வத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யாதோரின் செல்வம் எவ்வாறேனும் மற்றவர்களால்கொள்ளப்படும என்பதனை விளக்குகிறது இந்த நன்னெறிச் செய்யுள்.

செல்வத்தைத் தானே தனித்து அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விடுத்து, இயன்றவரை மற்றவர்களுக்கு, செல்வம் இன்றி இடர்ப்படும் மக்களுக்குத் தானம் செய்ய வேண்டும் என்ற கருத்தை மக்கள் மனதில் பதித்து நெறிப்படுத்த எழுந்த வாக்கு இது. இதனையே ஔவையும் "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்று சொன்னார்.

தானங்கள பலவகை. செல்வத்தை - பணத்தை, பொருளை - மட்டுமன்றி எமக்குள்ள ஏனைய செல்வங்களையும் மற்றவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவ்வகைச் செல்வங்கள் மேன் மேலும் எமக்கு வந்துசேரும். தானம் ஒரு தவமும் ஆகும். அன்னதானம், வித்தியாதானம்,கோதானம்,பூமிதானம் என்று பலவகைத் தானங்களைத் தமது வாழ்க்கையின் ஓர் அம்சமாக எமது முன்னோர் கொண்டிருந்தனர்.

மனிதனின் உலக வாழக்கையில் ஏற்றத்தாழ்வுகள் ஆதிமுதல் அழியா நிலைகளாகத் தொடர்கின்றன. செல்வர்களும் ஏழைகளும், உள்ளாரும் இல்லாரும், நல்லாரும் தீயாரும், வலியோரும் மெலியோரும் என்று பல வகை ஏற்றத்தாழ்வுகளைக் காண்கிறோம். இத்தகைய இடைவெளிகள் முற்றாக நிரப்பப்பட்டு சமன் செய்யப்படுவது கடினமெனினும் ஓரளவேனும் இடைவெளிகள் நிரப்பப்பட வேண்டும்.

அதற்கான முயற்சிகள் உலகம் தோன்றிய காலம் முதல் மேற்கொள்ளப்படுகின்றன. காட்டை அழித்துக் களனி ஆக்கியதால்தான் மனிதன் தனக்குத்தேவையான உணவை உற்பத்தி செய்யமுடிகிறது. அதனைக் கருதி வனவளம் முழுவதையும் அழித்துவிட்டால் விவசாயத்துக்கு இன்றிஅமையாத மழைவளம் இல்லாது போய்விடும். வரட்சி நீடித்தால் பயிர்வளம் குன்றும். பசி, பட்டினி, பஞ்சம் பெருகும். நோய்நொடிகள் பரவும். மரணங்கள் மலியும்.

இயற்கை அன்னையின் அமைப்பில் உள்ளனவும் இல்லாமையும் நியதிகள். அதேபோன்று சமூக அமைப்பிலும் உள்ளவர்களும் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குத் தமது பலவகைச் செல்வங்களையும் பகிர்ந்தளிக்கும் போதுதான் - தானம் செய்யும் போதுதான் - நாடு சிறக்கிறது. எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்வர்; நாடு சிறக்கும். 'வாழு; வாழ விடு' என்பது மற்றவர்களும் வாழத் துணைசெய்யும் என்பதாகும்.

எமது சமூகத்தின இன்றைய நிலையில் தானம் - உள்ளதில் சிறிதளவேனையும் இல்லாதவனுக்கு வழங்கும் தானம் - செய்யும் நெறி - இன்றியமையாதது. அதனை வளர்த்துக் கொள்வோமாக. வாய்ச் சொல்லில் அல்லாமல் செயலில் ஏழைக்கு உணவும் எழுத்தறிவும் ஈய்வதற்கு எம்மைப் பயிற்சிப்படுத்திக் கொள்வோமாக.

# இன்னலுற்ற மக்களின் இதயஜோதி அன்பு வடிவான அன்னை தெரேஸா

உலகில் வறுமையால் வாடும் லட்சக்கணக்கான மக்களுக்காக தனது வாழ்நாளையே அர்ப்பணித்த காருண்ய சமாதான தேவதை அன்னை தெரேஸா தனது 87 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்த நினைவு தினம் நாளையாகும்.

உலகம் முழுவதும் வறுமையால் வாடுபவர்களுக்கும், நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அன்னையாகத் திகழ்ந்த தெரேஸா அம்மையார் தன்னலம் கருதாது சமூக சேவையில் உலகிற்கே உதாரணமாக திகழ்ந்தவர். நீல நிறக்கரை போட்ட வெள்ளை நிறச் சேலை அணிந்து நம்மத்தியில் வலம்வந்த தேவதையாகவே மக்கள இவரை நோக்கினர்.

1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆந்திகதி முன்னாள் யூகோஸ்லாவியாவில் அல்பேனியப் பெற்றோரின் புதல்வியாக அன்னை பிறந்து, 1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி இறையடி சோர்ந்தார்.

தனது 18ஆவது வயதில் துறவறம் பூண்ட அன்னை, ஓர் இளம் கன்னியாஸ்திரியாக இந்தியாவின் கல்கத்தா நகரில் கன்னியர்மட ஆசிரியராக தனது பணியைத் தொடங்கினார்.

சனநெரிசல்மிக்க கல்கத்தா நகரில் ஏழைகள் படும் துன்பத்தைக் கண்டு மனம் நெகிழ்ந்த அன்னை, அந்த மக்களின் கண்ணீரைத்துடைத்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக தனது தர்மப் பணிகளை மேற்கொள்வதற்கான தனிப்பிரிவொன்றை ஸ்தாபிக்க முயன்றபோது இவரையும் சிலர் கேலிசெய்தனர். ஆராதனை மண்டபத்தில ஒரு மெழுகுவர்த்தியைக்கூட ஏற்றத் தெரியாத இந்தப் புதியதுறவி - அதிலும் ஓர் இளம் கன்னியாஸ்திரியால் என்னதான் செய்ய முடியும் என்று சிலர் நகைத்தனர்.

ஆனால் அந்த இளம் கன்னியாஸ்திரியின் நம்பிக்கையோ அபாரமானது. "நான் ஆட்டுவிக்கப்படுபவள் மட்டுமே! என்னை ஆட்டுவிப்பவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வான்." என்ற உறுதியான நம்பிக்கையோடு அந்த இளம் கன்னியாஸ்திரி ஏழைகளுக்கு உதவும் தனது தர்மப்பிரிவை நிறுவினார். ஏழைகளுக்கு சேவை செய்வதையே தனது வாழ்க்கையின் பணியாகவும் குறிக்கோளாகவும் கொண்டிருந்தார். அன்னையின் சேவையை அங்கீகரித்த உலகம் அவரை பலவிருதுகள் வழங்கி கௌரவிக்கவும் தவறவில்லை. 1968ஆம் ஆண்டு பாப்பரசரால் முதலாவது ஜோன் சமாதானப் பரிசு அன்னைக்கு வழங்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு விருது அவருக்கு கிடைத்தது. 1973ஆம் ஆண்டு "டெம்பிண்டன்" விருதும் அன்னைக்கு கிடைத்தது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக சமாதானத்துக்கான நோபல் பரிசு 1979இல் அன்னைக்கு வழங்கப்பட்டது. 1980இல் இந்திய அரசாங்கம் தனது பிரஜை ஒருவருக்கு வழங்கும் அதிஉயர் விருதான 'பாரதரத்னா' விருதையும் வழங்கிக் கௌரவித்தது. கல்கத்தாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் விஜயம்செய்து வறுமையாலும் பிணியாலும் பிடிக்கப்பட்டவர்களையும், பல்வேறு கொடுமைகளால் அனாதைகள் ஆக்கப்பட்ட அபலைப் பெண்களையும் தேடித்தேடி அன்னையும் அவரது சகாக்களும் உதவியபோது இந்தியாவில் குறுகிய மனப்பான்மை கொண்ட அரசியல்வாதிகள் உட்பட பலர் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் அவர் மீது சுமத்தத் தவறவில்லை இவர்களின் கண்டனங்களுக்கெல்லாம் தனது அன்பான புன்முறுவலையே பதிலாக வழங்கினார் அன்னை தெரேஸா.

சமூகஜோதி
**கா.கணேசதாசன்.**

இந்த உலகை ஆட்டிப்படைக்கும் கொடிய நோயான எயிட்ஸ் உலகெங்கும் பரவுவதை உணர்ந்து கொண்ட அன்னை தனது தள்ளாத வயதிலும் அமெரிக்காவில் எயிட்ஸ் நோயாளருக்கான ஒரு பராமரிப்பு நிலையத்தை நிறுவினார்.

மனித குலத்துக்கு தனது வாழ்நாளில் எந்த விதமான சேவைக்கடனையும் வைக்காது உழைத்த அந்த அமரஜோதி அணைந்துவிட்டது. மனித உலகு அன்னையை இழந்துவிட்டது எனினும் இவரது நற்சேவைகள் இன்றும் நிலைத்து நின்று ஆதரவற்றவர்களுக்கு அபயமளிக்கின்றது. தனக்



குப்பின்பு தனது வாரிசாக அருட்சகோதரி நிர்மலாவை நியமித்து உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

## நாளை இரண்டாவது ஆண்டு நினைவு தினம்

1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்7 ஆம் ஆரம்பிக்கப்பட்ட அன்னையின் தர்மஸ்தாபன செயற்பாடுகளில் இன்று உலகம் முழுவதும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அருட்சகோதரிகள் பணியாற்றுகின்றனர். சுமார் நானூறுக்கும் மேற்பட்ட அருட்சகோதரர்களும் இதில் சேவை புரிகின்றனர். இன்னும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் தமது பங்களிப்பை வழங்கிவருகின்றனர். உலகம் முழுவதிலுமுள்ள சுமார் 380 நிலையங்களின் ஊடாக இந்த மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுள் சுமார் 160 நிலையங்கள் கல்கத்தாவில் செயற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

"உலகின் அழகுகளையும் ஆனந்தங்களையும் வெறுத்து நான் வருகின்றபோது இறைவன் என்னை அழைப்பதாகவே நினைத்தேன்..." என்று தனது துறவறம்பற்றி ஒரு முறை கருத்து வெளியிட்ட அந்தக் கருணைக்கடலை இன்று இறைவன் உண்மையாகவே தன்பால் அழைத்துக் கொண்டான். சாதி, சமய, இன, இட வேறுபாடுகள் இன்றி அன்னை ஆற்றிய சேவை எம்மனதை விட்டு அகலாது. மக்களின் நலன்புரிப்பணிகளுக்காக தன்னை அர்ப்பணித்த காருண்ய தேவதை அவர். அந்த வழிகாட்டுதல் எம்மை நல்வழிப்படுத்தும்.

## எளிமையான அன்னை

அன்பு, பொறுமை, சகிப்புத் தன்மை இந்த மூன்றும் அன்னையின் தாரக மந்திரம்.

சேவைக்காலப் பயிற்சி பெற வருபவர்களுக்கும் இந்த மந்திரமே போதனை.

வெளியிலிருந்து பயிற்சிக்காக வருகின்ற தொண்டு உள்ளம் கொண்டவர்களுக்கெல்லாம் எங்கு தெரியுமா பயிற்சி இடம்? கல்கத்தாவில் புகழ் பெற்ற கோயிலான கல்கத்தா காளி கோயிலின் ஒரு பகுதியில்தான். இவரோ கிறிஸ்தவர். இவர் பயிற்சி கொடுப்பதோ இந்துக்கோயிலில். அதுதான்/அன்னைக்கு உள்ள பொதுநோக்குப் பார்வை; சமாதான எண்ணம்.

அங்கே பயிற்சிக்கு வருபவர்களுக்கு ஒரு வாளி தண்ணீர்தான். அதை பதினைந்து படிகள் தாண்டி மாடிக்குத் தூக்கிச் சென்றுதான் குளிக்க வேண்டும். அந்த ஒரு வாளியிலேயே துணிகளையும் அலசிக்கொள்ள வேண்டும். அன்னையும் அப்படித்தான்.

ஒருபோதும் அன்னை தன் வேலையைப் பிறரிடம் கூறியது கிடையாது.

அவர்கள் துங்குவது கட்டிலிலோ மெத்தையிலோ அல்ல. தரையோடு தரையாக இருக்கும் ஒரு பலகையில்தான் சுருண்டு கொள்வார். அதன் மீது துணி விரிப்புக் கூட இருக்காது. தலைக்கு தலையணையும் இருக்காது.

ஒவ்வொரு நாளும் கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொள்வார். மதியம் ஒரு வேளை மட்டும் கீரை போட்ட சாதம் கொஞ்சம் உண்பார். இரவில் காய்ந்துபோய் மீதம் கிடக்கும் ரொட்டிகளையே தேநீரில் தோய்த்து உண்பார். சிலவேளைகளில் நோயுற்ற குழந்தைகளுக்கு ஆறுதல் கூறியபடியே அவர்களோடு இருந்து படுத்துவிடுவார்.

அன்னை, தன் படுக்கையின் பக்கத்தில்ஒரு ஏசுநாதர் படத்தை எப்போதும் வைத்திருப்பார். அதில், 'என் இதயம் எப்போதும் என்னுடனேயே இருக்கிறது' என்றே வாசகங்கள் இருக்கும்.

- அன்னையுடன் பழகிய தொண்டர் ஒருவரின் உள்ளத்திலிருந்து....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org